## மூளையைத் தின்னும் நெருப்பு



## நாய்க்கு மரியாதை; மனிதர்களுக்கு..?




ஜூன் 05- ஜூன்11 , 2011    June 05 - June 11, 2011    பக்கங்கள் -28    5.00





# சுடர் ஒளி

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

THE SUDAROLI

வாரமலர்


## பேரன்புடைய சாத்தானுக்கு...!

## ஐ.நா - இலங்கை

# கயிறுழுப்புப் போர்!



# பேரன்புடைய சாத்தானுக்கு...

நிலம்
இல.000
அநாதைகள் தெரு,
சஜமீஆஹீ
பேரன்புடைய சாத்தானுக்கு.

கடவுளிடம் கெஞ்சிக் கேட்டுத் தோற்று விட்டேன். ஆதலால் கடவுளின் எதிரியான உம்மிடம் இறைஞ்சுகிறேன். மன்றாடுகிறேன். என் பாவங்களை நீக்கி என்னைத் தூய்மைப்படுத்தும் சாத்தானே.

நிலமாகிய நான், எல்லாம் வல்லவராகியவருக்கே எதிரியாக விளங்கும் உம்மிடம் வைக்கும் விண்ணப்பம் யாதெனில், இற்றைக்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்த கண்டத்தட்டு பெயர்வினால் கண்டங்களாகவும், நாடுகளாகவும் கடவுளால் நான் பிளவுபடுத்தப்பட்டேன். அன்றிலிருந்து மனித நிலவுகைக்கான வெளியானேன். மரங்களும், செடிகொடிகளும், நதிகளும், பாலைவனங்களுமென இயற்கைக் கூறுகள் என் உடலமெங்கும் முளைத்தன. மனிதர்கள் என்னிலிருந்து வளர்ந்தனர்.

இப்படியாகச் செழுமைப்படுத்தப்பட்டு, லெமூரியா உடைவோடு இந்துத் தீவுக்கு நடுவில் கைவிடப்பட்டேன். அன்றிலிருந்து இலங்கையென்ற பெயரோடு இம்மடலை வரையும் நான் எல்லோராலும் அடையாளப்படுத்தப்பட்டேன். இந்தத்தீவின் தொடக்க காலங்களில் மனிதர்கள் என்னோடு முரண்பட்டுக் கொள்ளவில்லை. முரண்படுமளவுக்கு அவர்களுக்கு அறிவியல் ஞானமும் ஏற்பட்டிருக்கவில்லை. காலம் செல்லச் செல்ல அழகுமிக்க என் நிலவுடலையே வடக்குத் தெற்கெனப் பிரித்து, அதற்கான போரொன்றினைத் தொடுத்தனர் மனிதர்கள். ஆரியமொழிக்கு குடும்பம் சார் மொழி பேசும் இனத்தவர், என்னை முழுவதுமாக கேட்டுப் போரிட்டு வந்திருக்கின்றனர். இதனால் வடக்கு, கிழக்கில் வாழும் திராவிட மொழி பேசும் இனத்தவர், நான் தமக்கேயுரியவள் எனவும் மல்லுக்கட்டிப் பிரிந்து கிடக்கின்றனர். இவ் விடயத்தில் நான் யாருக்காகவும் உம்மிடம் இறைஞ்சவில்லை. என்னுடலின் தென்பாகத்தில் வாழும் இனத்தவரின் நூற்றாண்டுக்கணக்கான பூர்வீகம் உண்மையானது போல், வடக்கு, கிழக்கில் வாழுபவர்களின் பூர்வீகமும் உண்மையானதென்பதை நானறிவேன். எல்லோரையும் போலவே அவர்களுக்கும் என் மீதான உணர்வும், உரிமையும் உண்டு. இந்த உண்மையை யாரும் ஏற்கவில்லையாயினும், என் பிரச்சினையை முன் வைக்கும் போது இதனைக் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். ஏனெனில் எனக்கும் அவர்களுக்குமான பிணைப்பு இரத்தத்தோடு கலந்தது. அதனாலேயே அந்த உறவுக்கே இப்போது வேட்டு வைக்கும் சூழமைவுகள் திரைமறைவிலும், வெளிப்படையாகவும் நிகழ்ந்து வருகின்றன.

அபிவிருத்தி என்ற மாயைக்குள் என் பிள்ளைகள் மண்டிக்கிடக்கையில் என்னை யார் யாரோ எல்லாம் சுரண்டிப் போகின்றனர். பிரச்சினையைச் சொல்கிறேன். என்நிலையுணர்ந்து கொள் சாத்தானே!

இப்படிக்கு,
நிலம்.

ஜெரா

### குறிப்பு:- 01

எனக்கான இழுபறிப் போரில் நான் மிகவும் காயப்படுத்தப்பட்டு விட்டேன். மேனி முழுவதும் கற்பழிக்கப்பட்ட பெண்களினதும், பதுங்குகுழிக்குள் பலியான குழந்தைகளினதும், நகக் கீறல் காயங்கள். என் காதோடு சேர்த்து அறையப்பட்டிருக்கிறது பிள்ளைகளைத் தொலையவிட்ட அன்னையரின் ஒப்பாரிகள். காய்ந்தும் காயாமலும் கிடக்கிறது அவர்கள் சிந்திய இரத்த வடு.

எத்தனையோ செயற்றிட்டங்கள், அமுலாக்கங்கள் என் மீதான இவ்வளவு வடுக்களுக்கும் தீர்வு தரவில்லை. கும்பாபிஷேகம் நிகழ்த்தப்படாத கடவுள்களின் குடியிருப்புப் போல நான் வீற்றுக்கிடக்கிறேன். மனிதர்கள் என்னை மேய்ந்து போகின்றனர். கால் தடங்களால் வலி தாங்கிய உடல் பிளக்கத் தொடங்கியிருக்கிறது. மழையும் என்னை விட்டுத் தூரப் போகிறது. சூரியன் முத்தமிட முயற்சிக்கின்ற தருணத்தில் நான் பொழுதுகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறேன். தகிக்கிறது மனிதவாழ்வு.

பாவம் மனிதர்கள்! இன்றைக்கு மனிதர்கள் புக அஞ்சும் பாலைத் தேசமாகக் கிடக்கும் சிந்துவெளியையும் எகிப்து பிரமிட் வெளியையும், அநுராதபுரத்தையும், முள்ளிவாய்க்காலையும் செழிக்க வைத்துக் கைவிட்டது நான்தான் என்ற உண்மை உணராமல் அலைந்துழல்கின்றனர். ★

### குறிப்பு:-02

இப்போதெல்லாம் இதுவரை தடம்பதிக்காத புதிய கால்கள் என்னைக் கடந்து போகின்றன. யுத்தம் சப்பிப் போட்ட என் உடைந்த பாகங்களைப் பார்க்க வரும் நடமாடும் குடியேறிகளாகவோ அல்லது சுற்றுலாவிகளாகவோ இருக்கலாம். அவர்கள் பேசும் மொழி எனக்குக் கொஞ்சம் பரிச்சயமானது. சிலவேளைகளில் அது கொடூரக் கொலை மொழியின் சாயலை ஒத்திருக்கும்.

இவர்கள் விட்டுப் போகும் எச்சங்களால் நான் மூடப்படுகிறேன். என்னைப் பலகோடி கொடுத்து ஆக்கிரமித்துத் தம்மை ஆழமாக நிறுவிக் கொள்கின்றனர். என் பூர்வீகக் குழந்தைகள் என்னை விற்கின்றனர். நான் நிரந்தர அடிமையாகிறேன்.

எனக்கு இனி எல்லாம் புதிது. புதிய பண்பாடொன்றுக்கு தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறேன். யோக கடவுளின் வெள்ளை உருவங்களும், விகாரைகளும், சிங்கச் சிலைகளும், அவற்றைத் தாங்கிய போர் வெற்றி தாங்கிகளும் இப்போது புதிதாய் அறிமுகமாகி பழகிக் கொண்டிருக்கின்றன. ★

### குறிப்பு:-03

என் நிலப் பெருந்தெருக்கள் போரோய்வின் பின் திறக்கப்பட்டாயிற்று. வர்த்தகப் பாலங்கள் கடல் கடந்தும் நீள்கின்றன. அது எனக்கான பெறுமதியை அதிகரித்துச் செல்ல வைக்கிறது.

தெருக்களுக்காக, என் தேகத்தின் பெரும்பங்கை எடுத்துக் கொள்கிறார்கள். நான் ஷெல் மழையிலும், இடையறாத ரவைகளின் ஊடறுப்புகளிலும் இறுக்கப் பிடித்து நிறுத்தி வைத்திருந்த மரங்களை அடியோடு கிளப்பிப் போடுகின்றன இயந்திர மிருகங்கள். அந்த இடத்தில் ஏற்படும் ஆழமான புண்களை வன் சீமெந்துக்களி கொண்டு இறுக்கமாக அடைத்து விடுகின்றனர். நரம்பு, நாளங்கள் எல்லாமே வேரறுந்து பாலைவனமாகிப் போகின்றேன்.

நூறு வருடங்களுக்கும் மேலாக நிமிர்ந்திருந்து அழகுபடுத்திய தொல்கட்டடங்கள் எல்லாம் இடிக்கப்படப் போவதை எண்ணி என்னிடம் கண்ணீர் விடுகின்றன. சுண்ணாம்பும், சர்க்கரையும், முட்டை வெள்ளைக்கருவும், வியர்வையும், கண்ணீரும் கலந்து கட்டப்பட்ட பழங்காலத்துக் குடிக் கூடுகள் இன்னும் சற்றுவேளையில் இல்லாமலாக்கச் செய்யப்படப் போகின்றன. அந்த இடத்தை நான் வழங்கும் தெரு நிரப்பி இமை மூடிக் கொள்ளும். அதன்பின் இவ்விடயத்திலெல்லாம் மனிதர்களுக்கோ, என் செல்லப் பிராணிகளுக்கோ சொந்தமில்லாமல் போய்விடும். இயந்திர மனிதர்களுடனான என் எதிர்காலத்தை நினைக்க அச்சம் கவிழ்ந்த இரவு மூடிக்கொள்கிறது. ★

### குறிப்பு:-04

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு புதிய நிற வகையிலான மனிதர்கள் பெருங்கடற் கலங்களுடனும், பீரங்கிகளுடனும், பாண், பழச்சாறு போன்றவற்றுடனும் வந்து என்னை ஆக்கிரமித்துக் கொண்டனர்.

பூர்வீகக் குடிகளின் வீடுவாசல்கள், சொத்துக்கள், என அனைத்துமே அவர்களின் வாள் முனையில் அபகரிக்கப்பட்டன. மக்களின் வீடுகளையும் கடவுள்களின் குடியகங்களையும் இடித்துத் தம் கோட்டை கொத்தளங்களைக் கட்டிக்கொண்டனர். என் குழந்தைகள் அடிமையாகினர்.

உலக அரசியல் அசைவு திசை மாறத் தொடங்கிய ஒரு காலத்தில் அடிமைகள் சுதந்திரம் பெற்றுத் தமக்குள் போரிடத் தொடங்கினர். நான் தான் அதன் கருவாகவும் இருந்தேன். கொஞ்சக் காலத்துக்கு முன்னர் பல முள்ளவர்கள் பலமற்றவர்களை அடக்கி என்னைப் பறித்துக் கொண்டனர். அதன் பின் நான் சுதந்திர நிலமாம்!. பிரகடனப்படுத்தப்பட்டேன்.

இப்போது அந்தப் பழைய வெள்ளை ஆக்கிரமிப் பாளர்களின் பேரப்பிள்ளைகள் என்மீது ஓடியலைகின்றனர். அவர்களின் மூதாதையர் விட்டுச் சென்ற கலாசார எச்சங்கள் என்மீது பரந்து கிடக்கின்றனவாம். அவற்றைப் பாது காத்துத் தம் எதிர்கால சந்ததியினர்க்குக் காட்ட வேண்டுமாம்! நவ அலங்கார வார்த்தைகளோடு நான் சிறைப்படப் போகிறேன். அந்தப் பழைய எச்சங்களையெல்லாம் குழந்தைகள் தேடிக் கண்டெடுத்து, பரீட்சித்து எஜமானர்களிடம் ஒப்படைக்கின்றனர். நான் நவகாலணிய வட்டத்துக்குள் இழுத்து வந்து விடப்படுகிறேன். ★





# தீராத் துயர்

ருனிசியா, எகிப்து என ''மக்கள் புரட்சிகள்'' களை கட்டியிருந்த காலத்தில் சிரியா, யேமன் மக்களுக்கும் ஓர் ஆசை பிறந்தது. தமக்கும் ஆட்சி மாற்றத்தை வேண்டிப் போராடப் புறப்பட்டனர். அதற்காக சுதந்திர சதுக்கங்களை நிரப்பினர். அரசுக்கெதிராக கோசங்களை எழுப்பினர். புரட்சி தொடங்கி ஒரு சில நாட்களுக்குள்ளேயே இராணுவத்தினரின் வெறியாட்டம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டது.


நீடிக்கும் அவசரகாலத் தடைச்சட்டம், விலையேற்றம், வேலைவாய்ப்பின்மை போன்றவைகளையே இவர்களும் கேட்டுப் போராடினர். கிடைத்தது துப்பாக்கிச் சூடுகள்தான். போராட்டம் தொடங்கி மூன்று மாதத்தை அண்மிக்கிறது. உயிர்ப்பலிகள் தான் அதிகரித்துப் போகின்றன. கடந்த வாரம் கூட 50 மேற்பட்ட சிவிலியன்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கின்றனர். எந்த நாடும் அதற்கெதிராகக் குரல் கொடுக்கத் தயாரில்லை. ஏனெனில் சிரியாவின் எல்லா எண்ணெய் வயல்களும் அமெரிக்காவிடமும், ஐரோப்பிய நாடுகளிடமும் இருக்கின்றன. சிரியா அரசும் தனது வணிகத்தில் மிகச் சுத்தமானதாக நடந்துகொள்கின்றது. எனவே மக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்படுவது நியாயம் என்கிறது உலகம்.✸

# காசு கொடுத்தா வாங்கினாய்?

அட்சயன்

இசைப் புயலைத் தாக்கியிருக்கிறது பெரும் சர்ச்சை. ''ஸ்லம்டோக் மில்லியனர்'' படத்துக்காக அவர் பெற்றுக்கொண்ட இரு ஒஸ்கார் விருதுகளும் காசுகொடுத்துப் பெறப்பட்டதென்ற செய்தி பரபரப்பாகப் பேசப்படுகிறது.

ஹொலிவூட் சினிமாவின் பிரபல இசையமைப்பாளரான இஸ்மாயில் தர்பார் அண்மையில் வழங்கியுள்ள பேட்டியொன்றில், '' 2008 ஆம் ஆண்டு ஏ.ஆர்.ரஹ்மான் விருதுகள் வாங்கியதில் சந்தேகமாகவுள்ளது. விளம்பரத்துக்காக அவர் பணம் கொடுத்து விருதுகளை வாங்கியுள்ளார் என்றே நினைக்கிறேன். பம்பாய், ரோஜா படங்களுக்குத் கிடைக்காத விருது இதற்குக் கிடைத்துள்ளமையானது சந்தேகத்துக்கிடமானது'' என்றார்.



இதனைத் திரையுலகத்தினர் வன்மையாகக் கண்டித்திருக்கின்றனர். ரஹ்மானும் அடியோடு மறுத்திருக்கிறார். 3000 நபர்களால் சிபாரிசு செய்யப்படும் விருதுக்கு எப்படிப் பணம் கொடுத்துப் பெற முடியும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

இதுவரைக்குமான ரஹ்மானின் இசைப் பயணத்தில் இவ்வளவு அளவிலான சர்ச்சையை ரசிகர்களுக்குக் கொடுத்ததில்லை. இது ரசிகர்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் இசைப்புயலின் வேகத்துள் அடிபட்டுப்போகும் எந்த ரசிகனும் இதையெல்லாம் பொருட்டாக எடுக்க மாட்டான். எது என்னவோ, இஸ்மாயில் தர்பாரின் வீட்டுக்குக் கல்லெறி விழுவது உறுதி.✸



# ஒரு கோமாளி... நாயகனாக...




மிஸ்டர் டேப். மேற்கத்தைய சினிமா ரசிகர்கள் உள்ளத்தைக் கவர்ந்த பெயர் இது. எதற்கும் அஞ்சாத வீரம், கண்களில் குறும்பு, உதட்டில் விசமத்தனமான புன்னகை எனச் சாகசம் புரியும் கப்டன் ஜாக் ஸ்பரோவாக 'பிரேட்ஸ் ஒப் கரீபியன்' திரைப்படத்தில் தோன்றி ஹொலிவூட்டில் முன்னணி நட்சத்திரமாய் உயர்ந்துவிட்டார். ஆரம்பத்தில் தொலைக்காட்சித் தொடர்களில் கோமாளித்தனமான பாத்திரங்களே டேப்புக்குக் கிடைத்தன. அதற்கேற்ற உருவமும் அவருக்கு இருந்தது. பின்னர் மெல்ல மெல்ல திரைப்படங்களிலும் தலைகாட்டினார். அங்கும் அவருக்கு விகடத் தனமான வேடங்கள்தான் கிடைத்தன. ஆனால் இப்போது அவர்தான் ஹொலிவூட்டின் 'நம்பர் 1' ஹீரோ.✸

# அணு உலைகளுக்கு ஆப்பு

ஜப்பானின் பேரழிவு பல பேரரசு நாடுகளுக்கு ஞானக்கண் திறக்க வாய்ப்பாக மாறியுள்ளது. ஜேர்மனி உலகுக்குத் தீமை பயக்கும் அணுமின் நிலையங்களை அமைக்கப்போவதில்லை என அறிவித்திருக்கிறது. அத்தோடு 2022 ஆம் ஆண்டுடன் அது தனது அனைத்து அணுமின் நிலையங்களையும் மூடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானின் பியூகிசிமா கசிவுகள் ஏற்பட்டிருந்த போது ஜேர்மனிய மக்கள் தமது நாட்டு அணுத் திட்டங்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டிருந்தனர்.




இதனைத் தொடர்ந்தே அரசின் இம் முடிவு வெளியாகியிருக்கிறது. அதன்படி ஜேர்மனியில் உள்ள 8 பழமையான அணுமின் நிலையங்களின் செயற்பாடு உடனடியாக நிறுத்தப்படவுள்ளது.

ஜப்பான், இந்தியா, அவுஸ்திரேலியா என அணுத் திட்டங்களுக்கு எதிராக மக்களது போராட்டங்கள் வலுத்து வருகின்ற இன்றைய நிலையில், இம்முடிவு வெளியாகியிருக்கின்றமையானது, ஏனைய நாடுகளையும் இவ்வழியில் பயணிக்கத் தூண்டலாம். அப்படியே எல்லா நாடுகளும் தமது அறிவிப்புக்களை உண்மையானதாக வெளியிட்டால், செம்மையான உலகம் கிடைக்கும். அதற்கு எல்லா நாடுகளும் தயாராகுமா?✸

# புக்கர் 2011

இவ்வாண்டுக்கான புக்கர் சர்வதேச விருதுக்கு அமெரிக்க நாவலாசிரியர் பலிப் ரோத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.



இந்த விருதுக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவரும் கனடாவில் வசிப்பவருமான எழுத்தாளர் ராபன்டன் உள்பட 12 எழுத்தாளர்களிடையே கடும் போட்டி நிலவியது.

ஆயினும் இதில் பலிப் ரோத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த விருதைப் பெறும் நான்காவது எழுத்தாளர் இவர்.

உலக அளவில் சிறந்த அம்சமுள்ள நாவல்களைப் படைத்ததற்காக இந்த விருது வழங்கப்படுகிறது.

2005ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட இந்தவிருது இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படுகிறது. இந்த விருதுக்குரிய பரிசுத் தொகையாக 44 லட்சம் வழங்கப்படும்.




# கடல் போல் மனம்

அழகிய கடற்கரை. எங்கள் தீவின் வடக்கே அமைந்த மணற்றரை. அதன் அயலில் ஓரிரு மீன் வாடிகள். அந்த மீன்வாடிகளுக்குச் சொந்தக்காரர் சம்மாட்டியார் ஆபிரகாம். ஓர் அருமையான பெரியவர். நல்ல உயரம். அழகான தோற்றம். மிகவும் உற்சாகமானவர்.

நான் எனது நண்பர்களுடன் அந்த வாடிகளுக்கு அருகான மணற்றரைக்குக் காலையில் செல்வதுண்டு. கடலில் இறங்கிக் குளிப்பதும் நீந்துவதும் எமது வழக்கம். அதிகாலையில் ஆபிரகாம் சம்மாட்டியாரிடம் கரை வலை மீன்களை வாங்குவதற்கென ஒரு கூட்டம் வாடியைச் சுழ்ந்து கூடி இருக்கும்.

கரைவலை என்பது, கடலின் நடுவே படகில் சென்று இடப்படும் பை போன்ற ஒரு வலை. அதன் நடுப் பகுதியை மடி என்றும் சொல்வர். அதனைக் கரைக்கு இழுத்துவரும் வகையில் இணைக்கப்பட்ட இரண்டு கயிறுகள் உள்ளன. அவற்றைக் கெட்டியாகப் பிடித்துக் கரையிலிருப்போர் இழுத்து, வலையைக் கரை சேர்ப்பர். வலையின் பை போன்ற நடுப்பகுதியில், அதாவது, மடியில் சிக்கிய மீன்கள் கரைக்கு வந்து சேரும். அவை துடித்துக் துள்ளிக் குதிக்கும் காட்சி காலை வெயிலில் வெள்ளிக் கீற்றுக்களாய் மின்னும். அதிலிருந்து தெரிவு செய்யப்படும் மீன்கள் மணற்றரையில் குவிக்கப்படும். அந்த மீன்களை வாங்கிச் செல்லவே மக்கள் கூடியிருப்பர்.

அன்றாடம் அந்தக் கரைவலையில் பிடிக்கப்படும் மீன்களுள் மக்களுக்கு விற்றவை போக எஞ்சியவற்றை, அவர் ஐஸ் போட்டு வேறிடங்களுக்கு அனுப்பியும், சில மீன்களை உப்பிட்டுக் கருவாட்டுக்கென வெயிலிலிட்டுக் காயவும் வைப்பார். பல வேளைகளில் நாம் அவற்றை வேடிக்கை பார்ப்பதும், தொழிலாளர்களுக்கு உதவும் வகையில் கரைவலையின் கயிற்றைப் பிடித்து இழுப்பதும் உண்டு. அவ்வாறு நாங்கள் உதவும் வேளைகளில் சம்மாட்டியார் எங்களுக்குக் கூலியாகவும் தனது நன்றியை வெளிப்படுத்தும் வகையிலும் எங்களுக்கும் மீன்கள் தருவார். அவை எப்பொழுதும் பெரிய மீன்களாகவே இருக்கும்.

கரைவலையில் சிக்கிக் கரைக்கு இழுத்து வரப்படும் மீன்களில் இருந்து, பெரிய மீன்கள் தெரிவு செய்யப்பட, ஏனைய சிறிய குஞ்சு மீன்களையெல்லாம் சம்மாட்டியார் எடுத்துக் கடலில் உடனேயே வீசுவதைப் பார்த்திருக்கிறோம். ஏன் அவ்வாறு செய்கிறார்? என்பது எமக்கு விளங்கவில்லை.

நெடுந்தீவு மகேஷ்

ஒருநாள் அவரிடமே அது பற்றி அறியும் எண்ணத் தோடு சென்ற மாணிக்கம் ''எங்களுக்குக் கூலியாக அந்தச் சிறிய மீன்களைத் தரலாமே. ஏன் அவற்றை மீண்டும் கடலில் வீசுகிறீர்கள்?'' என்று கேட்டான். அவர் மிகவும் ஆறுதலாகத் ''தம்பி இந்தக் கடலில் நிறைய மீன்கள் இருக்குதுதான், இங்கே நாங்கள் இப்போ பிடிச்சிருக்கிற பெரிய மீன்கள் எல்லாம் முந்திச் சிறிய மீன்களாய் இருந்தவைதான்''.

''நாங்கள் பெரிய மீன்களோட சேர்த்துச் சின்ன மீன்களையும் பிடிச்சுக் கொண்டிருந்தால் மீன்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கடலில் மீன்களே இல்லாமல் போய்விடும். அதுக்காகத்தான் பெரிய மீன்களை மாத்திரம் நாங்கள் பிடிக்கிறோம். சிறிய மீன்களைக் கடலிலேயே விட்டுவிடுகிறோம்'' என்றார்.

இதனைச் சொன்னதுடன் நிறுத்தாமல் நாங்கள் ஆரம்ப வகுப்பிலே படித்த தங்கமுட்டை போட்ட வாத்தின் கதையையும் எமக்கு ஞாபகப்படுத்தினார். உடனேயே நான் ''நீங்கள் கடலில் வீசும் இந்தச் சின்ன மீன்கள் எல்லாம் பெரிதாகி, மீண்டும் உங்களின் வலையிலேயே சிக்கும் என்பதற்கு என்ன நிச்சயம்?'' என்று கேட்டேன்.

அவர் சிரித்தபடியே ''என்னுடைய வலையிலே தான் இந்த மீன்கள் எல்லாம் மீண்டும் சிக்க வேண்டுமென்பதல்ல? இந்தக் கடலின் வளம் குறையவோ, அழியவோ கூடாது. அப்பொழுதுதான் எமது தொழில் வளம் சிதைவுறாமல் எமது சந்ததியினருக்கு வாழ்வு தரும்'' என்றார். அவரது வார்த்தையும் செயல்களும் அந்த இலக்கை நோக்கி நகர்ந்ததை அவரின் வாழ்நாளில் அவரிடத[illegible] நான் அவ[illegible]னித்திருக்கிறேன்.

இந்த அனுபவத்தின் நினைவுகள் இன்றும் பல உண்மைகளை எமக்குச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. ஒரு தொழில், அதனுயர் சிறப்புகள், அவற்றைக் காக்க உழைக்கும் வலிமை என்பவை இல்லாத நிலையில் அத்தொழில் வளமிழந்து நட்டமடைந்து சிதைவுறுமென்பதே உண்மையாகும்.


ஆபிரகாம் சம்மாட்டியார் தனது தொழிலின் மேல் கொண்ட சுயநலமில்லாத பற்றும் அவரது கடல் போன்ற பரந்த மனமும் அவரது பொது நோக்குடன் கூடிய செயற்பாடுகளும் அவரின் தொழில் உயர்வுக்குக் காரணமாயின.

இன்று பொது நோக்குடன் செயற்பட வேண்டிய பல நிறுனங்களில் பணிபுரிவோர், எந்தவித தூர நோக்குமற்ற நிலையில் சுயநலத்தை மறைபொருளாகக் கொண்டு செயற்படுவதைக் காணுகின்றோம். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பல பொதுநிறுவனங்கள் இன்று செயலொடுங்கி நட்டத்தில் வீழ்ந்திருப்பதையும் பார்க்கிறோம். சுயநலமும் பரந்த நோக்கற்ற தன்மையுமே இந்நிலைக்கான காரணங்களாகும்.

நான் செய்யும் தொழில் என்னுடையது. அதன் வளங்களாலும் வருமானத்தாலும் எனது வாழ்க்கை உயர்வடைய வேண்டும் என்ற சிந்தனை ஒவ்வொரு தொழிலாளிக்கும் வேண்டும்.

அத்துடன் அத்தொழில் நிலைத்திருக்க வேண்டும், அதன்மூலம் எமது சந்ததியினரும் சமூகமும் பயன் பெற வேண்டும் என்ற தூரநோக்குடன் கூடிய உழைப்பும் அவசியமாகும். எந்தத் தொழிலெனினும் அந்தத் தொழிலின் வாண்மை விருத்திக்கு அத்தொழில் மீது நாம் காட்டும் விசுவாசமும் ஊக்கமும் உயர்வானதாக அமைந்தால், எமது தொழில் சிறந்து வளர்ந்து நற்பயன் தரும். ★

# சோ.ப.வின் பெண்ணாய் எடுத்த பிறவி



பெண் ஆண் என்ற பேதங்கள் மனிதவாழ்வில் தொடர்வது இயல்பாகிவிட்ட நிலையில் இங்கே உயர்ந்தவர் யார்? தாழ்ந்தவர் யார் ? என்ற வாதங்கள் விரிந்தே நிற்கின்றன. அதனால் ஆண் பெண் வர்க்கத்தில் எழுந்து நிற்கும் சமனற்ற நீதியின் ஆட்சியும் நிலைத்தே இருக்கின்றது. பெண்கள் என்ற நிலையில் அவர்கள் எவ்வாறு பார்க்கப்படுகிறார்கள் என்பதை நாய்க் குட்டிகள் ரூபத்தில் சில கணம் உருவகித்துக் காணுகின்ற பிரபலமான கவிஞர் ஒருவரை இங்கே பாருங்கள்

*நெஞ்சில் ஒரு நெருடல் நேரம் கழிந்ததென்று*
*கொஞ்சம் விரைவாய் மிதித்து*
*அந்தச் குச்சொழுங்கை தாண்டி*
*தவராசா வீட்டு முடக்காலை*
*நீண்டு கிடக்கும் வடலி வளவோரம்*
*பளீரென இருசோடிக் கண்கள்*
*பார்த்தேன் அவையிரண்டும் பெண்கள்*

அந்த ஒழுங்கை முடக்கில் கண்ட காட்சி, அவரின் மனத்தை நெருடுகிறது. அவரது கண்களை உறுத்தியவை இரு சோடிக் கண்கள். அந்தக் கண்களுக் குரியவர்கள் இருவருமே பெண்கள் - அதாவது பெட்டை நாய்க் குட்டிகள்

*காலைப் பனியில் கழுவி எடுத்தந்த*
*மூலையிலே காட்சிக்கு முன்னிறுத்தி விட்டதுபோல்*
*பளீரென இரு சோடிக் கண்கள்*
*பார்த்தேன் அவை இரண்டும் பெண்கள்*

காலைப் பனியிலே தோய்ந்து அவை கழுவிக் கிடந்தன. அவை அழகான குட்டிகள். அவர் கண்ட இரண்டு சோடிக் கண்களுமோ பெண்களுடையவை தான்.

*இந்தக் குளிரை வெயிலை எழும்பசியை*
*இந்த இளசுகள் தாம் எவ்வாறு தாங்குவதாம்?*
*காது செவிடுபடச் செல்கின்ற கார் லொறிகள்*
*மோத உயிர் பிரிய நேரின்? இவற்றுக்கு என்ன*
*எதிர்காலம்? எத்தனை நாள் வாழ்வு?*
*வலை பின்னும் மனம் எனது சைக்கிள் உருள்கிறது*

இந்த இளம் பெண் நாய்க்குட்டிகள் எவ்வாறு தனித்து வீதியோரத்திற் கிடந்து பசி தாகம் இவற்றைத் தீர்ப்பதற்கான தேடலை நிகழ்த்தப் போகின்றன?. பாதையிலே இரைச்சலிட்டுப் போகும் வாகனங்களுக் குள் சிக்காமல் இவை எவ்வாறு தப்பிப் பிழைக்கப் போகின்றன? ஏனென்றால் அவை சின்னஞ் சிறிசுகள், இளசுகள் என்றெல்லாம் மனம் பின்னுகின்ற எண்ணத்தோடு கவிஞர் போய்க் கொண்டே இருக்கிறார். அவை நாய்க் குட்டிகள். எனினும் அவை பெண்கள் என்று அழுத்திச் சொல்லுகின்ற வார்த்தையில் மானிட இனத்தில் பெண்வர்க்கத்தின் துயர நிலை இழையோடுகிறது. அவரது சைக்கிளோ உருள்கிறது.

*நிச்சயமற்ற நிலைமையிலும்*
*அந்த நாய்க் குட்டிகளின் கண்ணில்*
*குடியிருந்த நம்பிக்கை நெஞ்சைப் பிழியும்*
*நினைவில் இரு சோடிக் கண்கள் வரும்*
*அவை, அக்காலைப் பொழுதில் எனைக்*
*கெஞ்சி உரைத்த மொழி கேளாது வந்தேனே*
*பிஞ்சுகளின் நம்பிக்கை பிய்த்தெறிந்து விட்டேனே*

கவிஞரின் உள்ளம் துடிக்கிறது. அந்தச் சின்னஞ் சிறிய குட்டிகள் போட்ட ஓலத்தினிடையேயும் அந்த நாய்க் குட்டிகளின் கண்களில் நம்பிக்கை பளிச்சிடுகிறது. அவற்றின் நம்பிக்கையைச் சிதைத்து அவ்விடத்திலேயே அவை கிடந்து அரற்ற விட்டுவிட்டேனே என அங்கலாய்க்கிறார்.

இந்த உலகத்தைப் புரியாத அவற்றின் அறியாமையினால் இந்த உலகத்தின் மீது அவை கொண்ட நம்பிக்கை தவறெனக் காணினும் அவற்றின் அலறல் நெஞ்சைப் பிழிகிறது.

*தாயை உடன்பிறந்த தம்பியரைத் தாம்பிரித்த*
*தீய மனித இனத்தின் சிறுமையினைச்*
*சொல்லி எனது மனசைத் தொடுவதற்கோ*
*புல்லின் நுனியிற் பனிபோல நின்றிருந்தீர்?*
*பெண்ணாய் எடுத்த பிறவிக் கொடுந்துயரை*
*கண்ணால் எழுதாக்*
*கவியாய் உரைப்பதற்கோ*
*நின்றீர் எனக்காக*
*நீண்ட வழிபார்த்து?*
*நன்றியிலா மானிடவன்*
*நான்*

மானிடத்தில் பெண்ணாகப் பிறந்த கண்ணாள் படும் துயரங்களும் அவர்களின் திருமண வாழ்வில் இயல்பாகவே நிகழ்ந்து கொண்டிருக்கின்ற சீதனக் கொடுமையும் ஆண்களின் பார்வையில் மலிந்து காணப்படும் அடக்குமுறை எண்ணங்களும் நாய்க்குட்டிகளின் ரூபத்தில் பார்க்கப் படுகின்றன.

பெண்ணாய் எடுத்த பிறவியை நோகும் கவிஞர் நாய் வர்க்கத்திலும் பெட்டைக் குட்டிகள் ஆதரவற்று அல்லலுறுவதைக் கண்டபோது அவற்றுடன் ஒப்பிட்டு மானிட வர்க்கத்தின் நீதியற்ற செய்கைக்குள் மானிடனாகிய தன்னிடத்திலும் விளைந்துள்ள தீய மனதை நோகின்றார்.

ஐம்பது வருடங்களுக்கும் மேலாகக் கவிதை உலகில் பிரகாசித்துக் கொண்டிருக்கும் ஒப்பற்ற தமிழ்க் கவிஞர் சோ.ப என அழைக்கப்படும் சோ.பத்மநாதன் அவர்களின் வடக்கிருத்தல் எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து பெறப்பட்டகவிதை இது. பாடசாலைகளிலும் ஆசிரிய கலாசாலைகளிலும் ஆசிரியராக, விரிவுரையாளராக, அதிபராகப் பணியாற்றி இளைப்பாறியுள்ளார் .

மனிதத்தில் மலர்ந்த கவிஞனாகவும், கவிஞனுக்குள் ஒளிவிடும் மனிதனாகவும் அறியப்பட்டுள்ளார். ஆங்கிலப் புலமை மிக்கவரான கவிஞரால் நூற்றுக்கணக்கான பிறமொழிக் கவிதைகள் தமிழாக்கம் செய்யப் பட்டுள்ளன. தொடரும் இலக்கியப் பணியில் அவர் மேலும் பிரகாசிப்பார் என்பது இலக்கிய ஆர்வலர்களின் நம்பிக்கையாகும். ★

மைதிலி.தேவராஜா



# நடந்ததை மறத்தல்

அண்மையில் போர் வெற்றியின் இரண்டாம் ஆண்டு விழாவும், போரில் உயிர் துறந்த இராணுவ வீரர்களைக் கௌரவிக்கும் வைபவமும் வெகு கோலகலமாக இடம்பெற்றது. வழமைபோலவே இராணுவ அணிவகுப்புகள், மரியாதை வேட்டுகள், பிரித் ஓதல்கள், மலர் அஞ்சலிகள் பெருமித உரைகள் என சகல அம்சங்களையும் உள்ளடக்கி விழா நிறைவு பெற்றது.

இதில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரையில் போர் வெற்றி, படையினரின் தியாகம், பயங்கரவாத ஒழிப்பு, நாட்டின் இறைமையைப் பாதுகாத்தல் போன்ற வழமையான விஷயங்களுடன் மேலதிகமாக இம்முறை 'நடந்தவற்றை மறத்தல்' என்ற புதிய ஒரு அம்சமும் சேர்க்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

அதாவது நாட்டில் பயங்கரவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டு விட்டதாகவும், வெளிநாடுகளில் வாழும் பயங்கரவாதிகள் சில அந்நிய சக்திகளுடன் இணைந்து நாட்டுக்கு எதிரான சதி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், களத்தில் அர்ப்பணிப்புடன் போராடிய வீரர்களை தான் எப்போதும் காப்பாற்றுவேன் எனவும் அவர் குறிப்பிடப்பட்டிருந்தார். அது மட்டுமன்றி இங்கு தமிழ், சிங்கள, முஸ்லீம் மக்கள் சமாதானமாகவும், சுதந்திரமாகவும் வாழ்வதாகவும், நடந்த விஷயங்களை மீண்டும் மீண்டும் கிளறி ரணமாக்கும் நடவடிக்கைக்கு இடம் கொடுக்கக் கூடாது எனவும் குறிப்பிட்டிருந்தார்.

### வழமையான விடயங்களுடன் மேலும் ஒன்று

அவரின் உரையில் இடம்பெற்ற 'நடந்து முடிந்தவற்றை மீண்டும் கிளறி ரணமாக்குதல்' என்ற விஷயம் அவர் முன்னெப்பொழுதும் குறிப்பிடப்படாத ஒன்று. போரின் இறுதி நாட்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கையும், இதன் அடிப்படையில் சர்வதேச மட்டத்தில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என எழும் வலியுறுத்தல்களும் இலங்கை அரசின் அதிகாரபீடங்களைத் திக்குமுக்காட வைத்துள்ள நிலையிலேயே நடந்தவற்றை மறப்பது பற்றி ஜனாதிபதி பேசியுள்ளார்.

**சந்திரசேகர ஆசாத்**

கொடுமைகளையும் குற்றங்களையும் இழைத்தவர்கள் நடந்தவற்றை மறக்கும்படி கோருவது அப்படியொன்றும் ஆச்சரியமான விடயமல்ல. ஏனெனில், குற்றங்களுக்கான தண்டனைகளிலிருந்து அவர்கள் தப்புவதற்கு அவர்களுக்கு அது அவசியமாகிறது. ஆனால் பாதிக்கப்பட்ட மக்களால் அதை எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்? தென்னாபிரிக்காவில் நீண்டகாலமாகவே இன ஒடுக்கல் கொடுமைகளை அனுபவித்த கறுப்பின மக்கள் தங்கள் விடாப்பிடியான போராட்டங்கள் மூலம் விடுதலை பெற்றனர்.

### மன்னித்தாலும் மறக்கஇயலாது

அம் மக்களின் ஒப்பற்ற தலைவரான நெல்சன் மண்டேலா, தாம் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஆற்றிய உரையில் ''கறுப்பின மக்களின் மேல் இழைக்கப்பட்ட கொடுமைகளை நாம் மன்னித்து விட்டோம். ஆனால் அவற்றை நாம் என்றும் மறக்கப் போவதில்லை'' எனக் குறிப்பிட்டிருந்தார்.

தென்னாபிரிக்காவில் வெள்ளையின ஆட்சியாளர்கள் கறுப்பின மக்கள் மீது கொலை, பாலியல் கொடுமைகள், பொது இடங்களில் ஒதுக்கி வைத்தல் போன்ற மனிதகுலம் ஏற்றுக் கொள்ள முடியாத கொடுமைகளை இழைத்தனர். அதுமட்டுமன்றி அம் மக்களின் ஒப்பற்ற தலைவரான நெல்சன்மண்டேலாவை 27 வருடங்கள் தனிமைச் சிறையில் போட்டு வாட்டினர்.

எனினும் கறுப்பின மக்களின் நீண்டகாலப் போராட்டம் வெற்றி பெற்றது. எந்த உரிமைகளுக்காக அளப்பரிய தியாகங்கள் செய்து போராடினார்களோ, அவை அவர்களுக்குக் கிடைத்தன. வெள்ளையின ஆட்சியாளர்கள் தங்கள் தவறுகளை உணர்ந்து கறுப்பின மக்களின் உரிமைகளை வழங்கினர். அங்கு தவறு உணரப்பட்டது; அது மட்டுமின்றி திருத்தவும்பட்டது. எனவே நெல்சன் மண்டேலா பெருந்தன்மையுடன் வெள்ளையினத்தவர்களை மன்னித்தார். ஆனால் அவர்கள் இழைத்த கொடுமைகளை மறக்க முடியாது எனத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டார்.

ஒரு நாட்டில் அமைதி இருவிதமாக நிலவமுடியும்; ஒன்று, சகலரும் தங்கள் நியாய பூர்வமான உரிமை களுடன் ஐக்கியமாகவும் சமாதானமாகவும் வாழ்வது. இது நிரந்தரமானது. மற்றது, ஒரு சாரார் இன்னொரு தரப்பினர் மேல் கடுமையான அடக்கு முறையைப் பிரயோகித்து ஏற்படுத்தும் அமைதி. இது தற்காலிகமானதாகவே இருக்க முடியும்.

இலங்கை ஜனாதிபதியோ மன்னிப்பு என்ற கட்டத்தையும் தாண்டி மறந்தே போய்விடும்படி அறிவுறுத்துகிறார். தென்னாபிரிக்க மக்களோ தங்கள் மீது வெள்ளையர்கள் மேற்கொண்ட அடக்குமுறைகள் முற்றகவே நீக்கப்பட்ட நிலையில் மன்னித்தார்கள். இலங்கை ஜனாதிபதியோ அடக்கு முறைகள் தொடரும் நிலையிலும் மறக்கும்படி கேட்கிறார்.

### பகை மறப்பு சாத்தியமா?

இப்படியான ஒரு நிலையில் பகை மறுப்பு என்ற ஒரு சொல்லாடல் அரச தரப்பினரால் முன் வைக்கப்படுகிறது. ஆனால் பகைக்கான காரணங்கள் அமுக்கப்படாதது மட்டுமன்றி மேலும் வலுவடைந்து வரும் நிலையில் பகை மறுப்பு என்பது எப்படி சாத்தியமாகி விடமுடியும்.

அண்மையில் யாழ்.மாநகரசபையில் முள்ளி வாய்க்காலில் பலியான மக்களுக்கு அஞ்சலி செலுத்த தமிழ் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் முற்பட்ட போது ஆளும் தரப்பினரால் அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. மேசையில் அடித்துச் சத்தம் போட்டு குழப்பப்பட்டது. யாழ்.நகர மேயரும் கூட்டத்தை முடிப்பதாகக் கூறிவிட்டு வெளியேறி விட்டார். அதாவது போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் உரிமை கூட மறுக்கப்படுகிறது. அதாவது ஜனாதிபதியின் நடந்ததை மறப்பது என்பது போரில் இறப்பவர்களையே மறப்பது என்பது போலவே அரசாலும், அரச சார்பு சக்திகளாலும் கருதப்படுகிறது. போரில் இறந்த படையினருக்காக பெரும் விழாவெடுக்கப்படும் நிலையில் மன்னிப்பு, மறப்பு போன்ற விஷயங்களுக்கான வாய்ப்புகள் உருவாக முடியுமா?

### நாம் இழந்தவை ஏராளம்

இப்போரில் பிள்ளைகளை இழந்த பெற்றோர்கள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், தங்கள் சகோதர சகோதரிகளை இழந்தவர்கள் என ஏராளமான உயிரிழப்புகளால் எமது மக்கள் இடிந்து போயுள்ளனர். இவர்களால் இந்த இழப்புகளை மறந்து விட முடியுமா? அந்த உயிர்களின் இழப்பால் ஏற்பட்ட மனப்பாதிப்புகள் ஒருபுறமும், மறு புறத்தில் இறந்தவர்களின் இல்லாமையினால் ஏற்படும் பாதிப்புகளும் நடந்து முடிந்தவையை மறக்க அனுமதிக்குமா? இப்போரில் உடலுறுப்புக்களை இழந்தவர்கள் அவ்விழப்புக் காரணமாக ஒவ்வொரு கணமும் துன்பம் அனுபவிக்கும்போது நடந்தவற்றை மறந்து விடமுடியுமா?

ஆனால் அரசாங்கத்தாலும், அரசின் அடிவருடிகளாலும் நாம் நடந்து முடிந்தவையை நினைக்கும் உரிமை கூடப் பலவந்தமாகப் பறிக்கப்படுவது தான் இங்கு நிலவும் யதார்த்தம். எமது மக்களைக் கொன்று குவித்த படையினருக்காக நாம் அனுதாபப்பட வேண்டும் எனவும், அவர்களால் கொல்லப்பட்ட எமது மக்களுக்கு நாம் அஞ்சலி செலுத்தக் கூடாது என்பதும் எம்மீது தொடுக்கப்படும் வலிந்த நிர்ப்பந்தமாகியுள்ளது.

எமது நியாயபூர்வமான உரிமைகள் மறுக்கப்பட்ட காரணத்தினால் தான் எமது போராட்டம் ஆரம்பமாகியது. இப்போராட்டத்தின் காரணமாகத் தான் ஏராளமான உயிர்களைப் பலி கொடுத்தோம்; உடலுறுப்புகளை இழந்தோம்; காலம் காலமாகத் தேடிய சொத்துகளையும் இழந்தோம். இன்று வரை இழப்புகள் இழப்புக்களாகவே இருக்கின்றன. எந்த உரிமைகளுக்காகப் போராடினோமோ அவைகளும் இன்று வரை வழங்கப்படவில்லை. அது மட்டுமின்றி எஞ்சிக்கிடக்கும் சில உரிமைகளும் படிப்படியாகப் பறிக்கப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு இராணுவக்கெடுபிடிக்குள் தமிழன் என்றாலே சந்தேக நபர் என்ற ஒரு நிலைமை உருவாக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்க கறுப்பின மக்கள் எந்த உரிமைக்காகப் போரடினார்களோ அதைப் பெற்றார்கள். அப்படிப் பெற்ற பின்பு தான் தமக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளை மன்னித்தார்கள். ஆனாலும் அவர்கள் மறக்கவில்லை.

### மனிதாபிமானமற்ற போக்கு

ஆனால் எமது உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்படும் நிலையில் நாம் எல்லாவற்றையும் மறந்து விடவேண்டும் என்பது எவ்வளவு மனிதாபிமானமற்ற போக்கு என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டில் அமைதி இருவிதமாக நிலவ முடியும்; ஒன்று, சகலரும் தங்கள் நியாய பூர்வமான உரிமைகளுடன் ஐக்கியமாகவும் சமாதானமாகவும் வாழ்வது. இது நிரந்தரமானது. மற்றது, ஒரு சாரார் இன்னொரு தரப்பினர் மேல் கடுமையான அடக்குமுறையைப் பிரயோகித்து ஏற்படுத்தும் அமைதி. இது தற்காலிகமானதாகவே இருக்க முடியும்.

இன்று இந்த அடக்குமுறை மூலம் நிலைநாட்டப்படும் அமைதியின் மூலம் நாம் நடந்தவற்றை மறக்க நிர்ப்பந்திக்கப்படுகிறோம். இது கூட ஒரு மனிதாபிமானமற்ற கொடுமைதான்.

எனவே நடந்தவற்றை மன்னித்தல் என்பது கூட நாம் எமது உரிமைகளைப் பெற்று வாழும் போது மட்டுமே சாத்தியமானதாகும். ஆனால் நடந்தவற்றை மறப்பது எப்போதுமே சாத்தியமில்லை. ஏனெனில் எமது இனத்தின் மீது நடத்தப்பட்ட அந்தனை கொடுமைகளும் வரலாற்றுப் பதிவுகள்.■

வன்னியில் இறுதிப் போரை அரசு நடத்திய விதம் இன்று அரசுக்கு எதிராகத் திரும்பிவிட்டது. போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டும் என்று மேற்கு நாடுகளும் ஐ.நா. மனித உரிமை அதிகாரிகளும் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுத்து வருகிறார்கள்.

ஜெனீவாவில் நடந்து வரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 17ஆவது கூட்டத் தொடரிலும் இந்தப் பிரச்சினை பெரும் சர்ச்சையைக் கிளப்பி உள்ளது. நிர்வாணமாக்கப்பட்ட ஆண்களும் பெண்களும் கைகளும் கண்களும் பின்புறமாகக் கட்டப்பட்ட நிலையில் சுட்டுக் கொல்லப்பட்ட காட்சிகள் அடங்கிய வீடியோ, சந்தேகத்துக்கு இடமற்ற வகையில் உண்மையானது, நம்பகமானது, இலங்கை அரசு கூறுவது போல் சோடிக்கப்பட்டதல்ல என்று ஐ.நா. விசாரணையாளர் அந்தச் சபையில் கூறியிருக்கிறார்.

நீதிக்குப் புறம்பான கொலைகள் மற்றும் சட்ட விரோத மரண தண்டனைகள் குறித்த ஐ.நா. விசாரணையாளர் கிறிஸ்டோவ் கென்ஸ், மனித உரிமைகள் சபையில் சமர்ப்பித்த அந்த அறிக்கையுடன் இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பிலான மற்றொரு சுற்றுச் சர்ச்சைகள் ஆரம்பமாகின.

ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூனின் நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கையால் கிளம்பிய சூட்டையே அரசால் இன்னும் தணிக்க முடியவில்லை. அதற்கிடையில் புதிய வீடியோ விவகாரம் மேற்கிளம்பி விட்டது.

இதற்கிடையில், கடந்த மாத நடுப்பகுதியில் பிரிட்டனின் 'சனல்-4' தொலைக்காட்சி, இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர்பான விவரணம் ஒன்றை வெளியிட்டது. அதில், போரின் இறுதி நாள்களில்,


சுடர் ஒளி

05, ஜூன் - 11, ஜூன், 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. டெலிபோன்: 0115798005
பக்ஸ்: 0115517944 - 5
E-mail: editorial@sudaroli.com


## நெய்க்கு அலையும் அரசு

கண்ணில் கண்ட அனைவரையும் சுட்டுக்கொன்று தடயங்களை அழித்துவிடும்படி தமக்கு உத்தரவிடப்பட்டிருந்ததாக இலங்கை இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவரும் சிப்பாய் ஒருவரும் சாட்சியமளித்திருந்தனர்.

''வெள்ளைக்கொடியுடன் சரணடைந்த விடுதலைப் புலிகளையும் குடும்பத்தினரையும் முதலில் கைது செய்தோம்; பின்னர் சித்திரவதை செய்தோம்; இறுதியில் கொலை செய்தோம். போரில் படையினர் இறந்தனர்; புலிகள் இறந்தனர்; பொதுமக்களும் இறந்தனர். சண்டையின் இறுதி நாள்களில் யாரையும் கைது செய்யாமல் அனைவரையும் அந்தந்த இடங்களிலேயே சுட்டுக்கொன்றோம். பொதுமக்களையும் கொன்றோம்'' என்று தனது சாட்சியில் கூறியுள்ளார் அந்தச் சிப்பாய்.

மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் இராணுவத்தினரிடம் சரணடைந்த பிரபாகரனின் கடைசி மகன் துவாரகன் (14 வயது), தகப்பனின் இருப்பிடத்தைச் சொல்லும்படி கேட்டுத் துன்புறுத்தப்பட்ட பின்னர் சுட்டுக் கொல்லப்பட்டான் என்று 'சனல்-4' நிறுவனத்திடம் தெரிவித்திருக்கிறார் இராணுவ உயர் அதிகாரி. இவையும் அரசுக்கு எதிரான அஸ்திரங்களாக மாறியிருக்கின்றன.

இவ்வாறு குவிந்துவரும் அழுத்தங்களைச் சமாளித்து தாம் குற்றமற்றவர்கள் என்று நிரூபிப்பதற்கு இலங்கை ஆட்சியாளர்கள் இப்போது பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர். ஓடிஓடி ஒவ்வொரு நாடுகளின் கால்களிலும் விழுகின்றனர். மனித உரிமை அமைப்புக்களையும் அதிகாரிகளையும் சமாதானப்படுத்த தலைகீழாக நிற்கின்றனர்.

அரசும் அமைச்சர்களும் ஆட்சியாளர்களும் இதற்காகப் படாதபாடு படுகின்றனர். ஆனால் இந்தப் பிரச்சினைகளில் இருந்து மீள்வதற்கு இலகுவான ஒரு வழி இருக்கிறது என்பது அவர்களுக்கு ஏனோ தெரியவில்லை; அல்லது தெரிந்து, புரிந்திருந்து இருந்தாலும் அதனை நாட விரும்பவில்லை.

அந்த வழி தமிழர்களுடனான இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து அவர்களுக்கு உரிமைகளை வழங்குவதுதான்.

இலங்கை அரசு முன்னெடுத்த மூர்க்கத்தனமாக போருக்கு ஆதரவளித்த நாடுகள், போரின் பின்னர் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்று நம்பின. ஆனால் காலம் இழுத்தடிக்கப்பட்டதை அடுத்து அரசுக்கு எதிராக அவை இன்று போர்க் குற்றச்சாட்டு என்கிற சாட்டையைக் கையில் எடுத்துள்ளன.

பிரச்சினையை நேர்மையாகப் பேசித் தீர்த்து தமிழர்களுக்கு அதிகாரங்களைக் கொடுத்துவிட்டால் இவை எல்லாம் அடங்கிவிடும். ஆனால், கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலையும் இந்த அரசு, தான் குற்றவாளியாகித் தண்டிக்கப்பட்டாலும் பரவாயில்லை தமிழர்களுக்கு எதையும் தரமாட்டேன் என்று அடம்பிடிப்பதுதான் சோகம். அரசு இப்படி இருக்கும்போது இன நல்லிணக்கம் எப்படி ஏற்படும்?

# வன்னி குற்றங்களின் தேசமாகின்றதா?

அபிவிருத்தி நிலையில் பின்தங்கிய நிலையில் காணப்பட்டாலும் அந்தப் பிரதேசம் பண்பாட்டு நிலையில் சில தனித்துவங்களைக் கொண்டது. ஆடம்பர வாழ்க்கை அந்த மக்களுக்குக் கிட்டியிருக்கவில்லை. அது தமக்கு வேண்டும் என அவர்கள் யாரையும் வற்புறுத்தவும் இல்லை. கூலிவேலைக்குச் செல்லும் பலர் நாளாந்தம் தம் வாழ்க்கையை உறவுகளுடன் கூடி கூட்டுக் குடும்பமாகக் கழித்துவிடுவர்.

கலாசாரப் பிறழ்வு, பண்பாட்டுப் பிறழ்வு, ஆடம்பரம் என்று அநாகரிகத்தை விரும்புவர்கள் அங்கு வேறுவிதமாகக் கவனிக்கப்படுவர். அதனால் அதற்கான வாய்ப்புக்களும் இருக்கவில்லை. ''புதுமைப் பித்தனின் ஒரு நாள் கழிந்தது'' வாழ்க்கையாக அங்கு இருந்தது எனலாம்.

வயல்களும், புற்தரைகளும், காடுகளும் என எழில்மிகு வன்னிப் பிரதேசம் ஒரு காலத்தில் இப்படித்தான் இருந்தது.

சொல்லப்போனால் ''வன்னி மக்கள்'' என்றால் வேறு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் நீங்கள் வன்னியா? என்று கேட்பார்கள். மேலதிகமாக எதையும் அலட்டிக் கொள்வதில்லை. அதன் அர்த்தம் அவர்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தது ஒன்று; மற்றது அதன் காரணமாக தேசப்பற்றுடன் கூடிய பண்பாடு உடையவர்கள் என்பது மற்றையது. இதுபோன்ற காரணங்களால் தான் நீங்கள் வன்னியா! என்ற விழிப்பு ஏற்பட்டிருந்தது.

காலம் ஓடி மறைய, யுத்தம் முடிவுக்கு வந்த கையோடு அங்கு ஆரம்பித்த பிணிகளுடன் பண்பாட்டுப் பிணியும் ஆரம்பித்தது. முகாமில் அவர்களின் பண்பாடுகள், கலாசாரங்கள், விரும்பியோ விரும்பாமலோ சீரழிக்கப்பட்டது.

மீள் குடியேற்றம் ஆரம்பித்து பெரும்பாலான பகுதிகளில் இப்போது மக்கள் குடியேற்றப்பட்டு விட்டனர்.

இப்போது வன்னி மக்கள் என்ற வார்த்தைக்கு பின்னால் பல விமர்சனங்கள் எழுந்து கூச்சலிடுகின்றன. பத்திரிகைகள் பேசுகின்றன. அவை சமூகச் சீர்கேட்டுச் சம்பவங்களைப் பற்றியவைகளாகவே உள்ளன.

நீங்கள் வன்னியா? இப்ப என்ன சரியான மோசமாம்? நாங்கள் வந்தாலும் கிடைக்குமா? மௌனமான கேள்விகள்- பதில் யுத்தம் என்ற ஒன்று மக்களுக்கு இருந்த கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்துள்ளது. இதுவரையும் யாருக்காகப் பயந்து அவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க நேரிட்டதோ அவர்களும் இல்லையென்றாகிவிட்டது.

'நாணயக் கயிறு அறுந்த காளை போல' திடீர் திருப்பங்கள் அந்த மக்களின் நிராசையாக மாறியுள்ளது. கையடக்கத் தொலைபேசி இதன் நாரதராக இருந்து தனது செயலைச் சரிவரச் செய்து வருகின்றது.

வன்னியில் விபசாரம் மற்றும் பாலியல் தொழில்கள் அதிகரித்துக் காணப்படுவதுடன் சட்ட விரோத உறவுகள், தொழில்கள் என்பனவும் அதிகரித்து காணப்படுவதை தினமும் வெளியாகும் பத்திரிகைச் செய்திகள் பறைசாற்றுகின்றன.

முகாமுக்குள் மக்கள் இருக்கும்போது சிலர் பிணையில் வெளியில் வந்து வவுனியாவில் உள்ள விடுதிகளில் தகாத உறவுகளைப் பேணிய சம்பவங்கள் முதற்கொண்டு அடிதடி, குத்து வெட்டு, தற்கொலை, கொலை வரை இப்போது இந்தச் சம்பவங்கள் வியாபித்துள்ளன.

முன்பிருந்ததைவிட வன்னியில் யுத்தம் காரணமாக சமூகக் கட்டமைப்புக்கள் சிதைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக யுத்தகாலத்தில் கட்டாய ஆட்சேர்ப்பு இடம்பெற்றபோது தம்பிள்ளைகளைக் காப்பாற்றும் நோக்குடன் பாலியல் அறிவு அற்ற நிலையில் அறியா வயதுத் திருமணங்களை பெற்றோர் நடத்தி வைத்தனர்.

இந்தத் தம்பதிகள் தமது இச்சைகள் நிறைவேறியதும் முரண்பாட்டு நிலையில் பிரிந்து வாழ்கின்றனர். இவர்களுக்கு இருக்கும் ஆசை, ஏக்கம் தவறான நடத்தைகள் உருவாக வழிவகுக்கின்றன.

யுத்தம் காரணமாக கணவனை இழந்த இளம் விதவைப் பெண்கள் தமது பாலியல் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும் என்ற ஆசை காரணமாக வேறு நபர்களுடன் தொடர்பைப் பேணுவது பிரச்சினைகளை உருவாக்கியுள்ளது.

புனர்வாழ்வு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள முன்னாள் போராளிகளின் மனைவியரின் பரிதாப நிலைகளும் இங்கு கேள்விக்குரியதாக மாறியுள்ளது.

இவை தவிர தாய், தந்தையை இழந்த இளவயதுப் பராயத்தினர் கேட்பதற்கு ஆள் அற்றநிலையில் தமது சுய ஆசைகளை முன்பின் யோசனை இன்றி நிறைவேற்றத் துடிக்கின்றனர். இது சமூக விரோத செயற்பாடுகளாக மாற்றம் பெற்றுள்ளன.

இராணுவத்தினர் வன்னிப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளதால் இவர்களும் மிலேச்சத்தனமான செயல்களில் ஈடுபடுகின்றனர். சிசுக் கொலைகள், தகாத உறவுகளைக் கண்டறிந்ததால் ஏற்படும் முரண்பாடுகள், சச்சரவுகள், பரவிவரும் தொழிலாக மாறியுள்ள விபச்சாரம், சிறுவயதிலேயே கர்ப்பிணியாதல், பாலியல் வல்லுறவுகள், முறைதவறிய திருமணங்கள் போன்ற பாலியல்சார் குற்றங்கள் வன்னிப் பகுதியில் வற்றாத ஊற்றாக பிரவாகிப்பதைப் பிரசுரித்து, பத்திரிகைகள் தம் பக்கங்களை நிறைத்துக் கொள்கின்றன. ஊடகங்களில் வெளிவருகின்ற பாலியல் குற்றங்கள் வன்னியில் நடக்கும் நிகழ்வுகளில் ஒரு சிறுபகுதி மாத்திரமே. திரைமறைவில் இன்னும் ஏராளமான பாலியல் குற்றங்கள் மூடி மறைக்கப்பட்டுவிட்டன. சில இடங்களில் பகிரங்கமாகவே விபச்சாரத் தொழிலைச் செய்யும் அளவுக்கு வன்னி முன்னேறிவிட்டது (?).

முன்பு பாலியல், தகாத உறவு போன்ற குற்றங்களில் மாட்டிக் கொள்பவர்கள், பற்பொடி கொடுக்கும் போதுதான் பங்கருக்குள் இருப்பவர்கள் விடிந்துவிட்டதை உணருவார்கள். இன்னும் சிலர் நடு வீதியில் வைத்து மரணதண்டனை அனுபவிப்பர். இத்தகைய தண்டனைகள் சர்வாதிகாரத்தனமானவை என்ற விமர்சனங்கள் எழுந்தபோதும் குற்றங்களின் எண்ணிக்கைகள் குறைந்தே இருந்தன.

இது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் வன்னி இருந்தபோது நிலவிய சூழல். ஆனால் இப்போது சிறு இடைவெளி கிடைத்தால்கூட கண்மூடி முழிப்பதற்குள் பாலியல் சேஷ்டைகள் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றன.

கொடிய நோய்க் கிருமியை காவிவரும் பாதுகாப்பற்ற பாலியல் உறவு வன்னியில் மலிந்து கிடப்பதால் இவர்களின் எதிர்கால வாழ்வு எங்குபோய் முடியப் போகிறது என்பது கேள்விக்குறியாக மாறியுள்ளது.

யுத்தம் அழிவுகளை ஏற்படுத்தியதே தவிர எந்தச் சுதந்திரத்தையும் தமிழ் மக்களுக்குப் பெற்றுத் தரவில்லை.

யுத்தம் உறவுகளைப் பிரித்ததே தவிர எந்த உரிமைகளையும் பெற்றுத் தரவில்லை. மீள்குடியேற்றங்கள் சொந்த இடத்தில் மக்களை தனிமைப் படுத்தியதே தவிர எந்தப் பாதுகாப்பையும் வழங்கவில்லை.

கட்டுப்பாடற்ற சூழல், கலாசாரம், பண்பாட்டை சிதைக்க உருவாக்கியதே தவிர எவரையும் நெறிப்படுத்த, சட்ட ஒழுங்கை நிலைநாட்ட, சுதந்திரத்தை அனுபவிக்க வழி செய்யவில்லை.

இன்னும் அபாயங்களைத் தந்து கொண்டிருக்கும் சூழலே வன்னியில் ஏற்பட்டுள்ளது.

இதனை ஒவ்வொரு தமிழ் மக்களும் சிந்தித்தாக வேண்டும்.★

செந்தில்குமார்

# மூளையைத் தின்னும்



ஒரு இனத்தை நசுக்கவேண்டுமாயின், முதலில் அவர்கள் சிந்திப்பதைத் தடுக்கவேண்டும் என்பதே அதிகாரங்களின் மரபு ரீதியான கருத்தியலாக இருக்கின்றது. சரி - பிழை, நல்லது - கெட்டது, முதலாளி - தொழிலாளி, தமிழ் - சிங்களம் என வேறுபடுத்திப் பார்ப்பதற்கும், சரியான தீர்மானங்களை எடுப்பதற்கும் சிந்தனையே உதவுகிறது. எல்லாப் புரட்சிகளும் சிந்தனைகளின் வழியே தான் பிறப்பெடுத்தன. புரட்சிகளைத் தடுப்பதற்கு சிந்தனைகளைச் சிதைக்க வேண்டும்.

அந்தச் சிதைப்பின் வடிவங்களின் ஒன்றுதான் தமிழர்களின் அறிவுப்புல ஆதாரமான யாழ். நூலக எரிப்பு. 30 வருங்களுக்கு முன்னர் நடந்தேறிய அந்த நெருப்பு நிகழ்வு இன்னமும் ஆறாமலேயே இருக்கிறது. யாழ்ப்பாணத்தில் மையம் கொண்டிருந்த உக்கிரமான போர், நூலகத்தை மிக நீண்ட காலத்துக்கு அதன் சாம்பல்களின் படிவுகளோடுதான் வைத்திருந்தது. பின்னர் அது பெரும் பொருட்செலவோடு புனரமைக்கப்பட்டு, புதிய நூல்களோடு, உருப்பெற்றுள்ளது.

என்னதான் புதுப்பொலிவோடு எழுந்து நின்றாலும், இன்றுள்ள நூலகம் வேறு; எரிக்கப்பட முன்னர் இருந்த நூலகம் வேறு. முன்னர் இருந்த நூலகத்தின் ஆன்மா இப்போது உயிரோடு இல்லை. அது தீயோடு எரிந்து விட்டது. இப்போது நூலகத்தின் வெற்றுடம்புக்குள் வேறொரு ஆன்மா புகுத்தப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான். முன்னைய நூலகம் தந்த அறிவுப் பிரவாகிப்பை இப்போது பெறமுடியாது. ஒரு பிரபல்யமான சுற்றுலாத் தலமாகவே அது இப்போது அடையாளப்படுத்தப்பட்டு வருகிறது. விளம்பரங்களுக்கான குறியீடாகவும் அது மாற்றப்பட்டிருக்கிறது.

எனினும், நூலகத்தின் பழைய ஆன்மா இன்னமும் இங்கேயே சுற்றிக்கொண்டிருப்பதாக அதை எரித்தவர்களின் பரம்பரையினர் எண்ணுகிறார்கள். அதனாற்றான் அண்மையில் நூலகத்தின் புத்தகங்களைக் கிழித்தும், தளபாடங்களை சேதம் செய்தும் தம்மால் இயன்ற பணியை செய்து விட்டுப் போனார்கள்.

## புத்தரின் படுகொலை

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.

இரவில் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர்பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?"
என்று சினந்தனர்.

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஓர் ஈயினைக் கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால்......"
என்றனர் அவர்கள்.

"சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை"
என்று கூறி அமைச்சர்கள்
மறைந்தனர்.

சிவில் உடையாளர் பிணத்தை
உள்ளே இழுத்துச் சென்றனர்.
தொண்ணூறாயிரம்
புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி
மறைத்தனர்
சிகாலோவாத சூத்திரத்தினைக்
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான்
சாம்பரானது.

-கவிஞர் எம்.ஏ.நுஃமான்

**1981 மே 31ஆம் திகதி.**

ஆதங்கன்



# பின்னை இட்ட தீ!

பூமியை இருள் தின்னத்
தொடங்கியிருந்த உச்சத் தருணத்தில்
தீப் பந்தங்கள் சில நகர்ந்தன அந்தக்
கட்டடத்தை நோக்கி. அறிவின்
ஒளியாய் சுடர்விட்டுக் கொண்டிருந்த
நூலகம் சில நொடிகளில்
ஒரு பெரிய தீப்பந்தம்
போல எரியத்
தொடங்கியது. தமிழ் மீது
பற்றுக்கொண்டிருந்த
தாவீது அடிகளின்
காதுகளின் நூலகத்தின்
தகனச் செய்தி விழுகிறது.
அந்தச் செய்தியோடு அவர்
இதயம் இறுகிப் போனது.
அவர் மாரடைப்பால்
மரணமடைகிறார்.
அவருக்குக் கிடைத்த அதே
செய்தியை
யாழ்ப்பாணத்தில்
கேள்விப்பட்ட
ஒவ்வொருவரும்
ஒப்பாரி
வைத்தபடியே
யாழ்ப்பாணத்தின்
மையப் பகுதியை
நோக்கி ஓடுகிறார்கள். எரிந்து
கொண்டிருக்கும் தணல் மேட்டில்
இருந்து புகை கிளம்பிக்
கொண்டிருந்தது. ஓடி வந்தவர்கள்
சிந்திய எந்தக் கண்ணீராலும் அந்தத்
தீயை அணைக்க முடியவில்லை.
ஈழத்தமிழர்களின் தேசிய நூலகமான
யாழ் நூலகத்தில் இருந்த 97,000
புத்தகங்களும், ஓலைச்சுவடிகளும்,
ஒலி ஒளி நாடாக்களும்
அவர்களின் கண்முன்னே எரிந்து
சம்பலாகிக் கொண்டிருந்தன.
அன்றிலிருந்து அவர்களின் அடி
வயிற்றில் இன்னமும் அந்தத் தீ
கொழுந்து விட்டு
எரிந்துகொண்டுதான்
இருக்கிறது.

யாழ்ப்பாணத்தின் முதல் நூலகம் 1842 இல் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டாலும், 1933 இலேயே இன்றைய நூலகத்துக்கான முதல் விதை போடப்பட்டது. யாழ் நகரபிதா, வண. லோங் அடிகள், இந்திய தூதுவராலய செயலர், அமெரிக்கதூதுவர், பிரித்தானியத் தூதுவர் ஆகியோரால் புதிய நூலகத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

களியாட்ட விழாக்கள், பரிசுச் சீட்டு விற்பனை போன்றவற்றின் மூலம் மக்களிடமிருந்து நூலகம் கட்டுவதற்கான பணம் சிறிது சிறிதாகத் திரட்டப்பட்டது. இந்திய கட்டடக் கலைஞர் நரசிம்மன் என்பவரின் வழிகாட்டுதலில் யாழ். நூலகக் கட்டடம் உருப் பெறத் தொடங்கியது.

யாழ். நூலகம் ஆசியாவின் மிகப் பெரும் நூலகம். தமிழர்களின் கல்வி வளத்தின் ஆதாரமாகவும் தமிழரின் அடையாளமாகவும் உருப்பெற்று நின்றது. 11.10.1959 இல் பொதுமக்கள் பாவனைக்காக அப்போதைய யாழ். மேயர் அல்பிரட் துரையப்பாவினால் நூலகம் திறந்துவைக்கப்பட்டது. அன்று தொடக்கம் யாழ்ப்பாணத்தவரின் வாழ்வியலோடு நூலகம் ஒன்றிக்கத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தில் ஊருக்கு ஊர் இயங்கிய வாசிப்பு மையங்கள், சனசமூக நிலையங்கள், வாசிகசாலைகள் என்பவற்றின் மையப் புள்ளியாக யாழ். பொதுசன நூலகம் உருப்பெறலாயிற்று. இவ்வாறான அறிவுப்புல மையம் பேரினவாதிகளின் கண்களை உறுத்தியது. அவர்கள் தருணம் பார்த்திருந்தனர் 1981 மாவட்ட சபைத் தேர்தலை யொட்டிய நாள்கள் தமிழர் அறிவுப்புல ஆதாரத்தை அழிப்பதற்கான நாளாகக் குறிக்கப்பட்டது. அப்போது அமைச்சர்களாக இருந்த காமினி திஸாநாயக்காவும், சிறில் மத்தியுவும் குண்டர்களைக் களத்தில் இறக்கி, தம் கண்களை உறுத்திக்கொண்டிருந்த நூலகத்தைத் தகனம் செய்தனர். பிறிதொரு நாளில் காமினி திஸாநாயக்கா கொழும்பில் மனித வெடிகுண்டால் தகனமானது வேறு கதை.

# நாய்க்கு மரியாதை; மனிதர்களுக்கு...?



பிரமன்

நீண்டநாளைக்குப் பின்பு நாரதருக்கு பூலோகம் செல்லவேண்டுமென்ற ஆசை தொற்றிக்கொண்டது. ''எங்கே போகலாம்?'' என அவர் நீண்ட நேரம் யோசிக்கவில்லை. தேவலோக ஊடகங்களில் இப்போது பரவலாக அடிபடுகின்ற இலங்கைக்கே சென்றுவர முடிவெடுத்தார். முடிவெடுத்த மறுகணமே நாரதர் இலங்கையில் இருந்தார். வருகின்ற அவசரத்தில் பாதணிகளை மறந்துவிட்டதை எண்ணி அப்போது தான் நாரதருக்கு கவலை வந்தது. காலில் படிந்திருந்த புற்களை அகற்ற அவர் குனிந்த சமயத்தில் -

''சட்.சட்.சட்''


காதைப் பிளந்தது வேட்டொலி. நாரதருக்கு அடிவயிறு கலங்கியது. யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த சமயத்தில் பாதுகாப்புக் காரணங்களுக்காக தேவலோகவாசிகள் எவரும் இலங்கைக்குச் செல்ல தேவேந்திரன் தடை விதித்திருந்தான்.எனினும் இப்போது அங்கு நிலைமைகள் சீரானதாகக் கூறி அந்தத்தடை விலக்கப்பட்டிருந்தது. அப்படியிருக்கையில் மிக அண்மையில் கேட்ட வேட்டொலி நாரதரைக் கதிகலங்க வைத்ததில் வியப்பொன்றுமில்லை. கொஞ்சம் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு எட்டிப் பார்த்தார்.

ஒரு சவப்பெட்டியை ஏந்திக்கொண்டு சோகமே உருவெடுக்க சிப்பாய்கள் சிலர் சீராக வந்துகொண்டிருந்தனர். அவர்களின் அசைவை 'பாண்ட்' வாத்தியங்கள் தீர்மானித்துக் கொண்டிருந்தன. ஏராளமான மலர்வளையங்கள் அடுக்கப்பட்டிருந்தன. மிகப்பெரிய இழப்பொன்றைச் சந்தித்ததால் உண்டான அதிர்ச்சியையும் அவர்களின் முகங்கள் சூடியிருந்தன. பாண்ட் வாத்திய இசை, மலர்வளையங்கள், இராணுவ அதிகாரிகளின் கவலை இவற்றையெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்த்த நாரதரால் யாரோ மிகமுக்கியமான இராணுவ அதிகாரி ஒருவர் இறந்திருப்பதை மட்டும் உறுதி செய்ய முடிந்தது. கொஞ்சநேரம் மண்டையைச் சொறிந்தும் 'இறந்தது யார்?' என்பது மட்டும் அவருக்குப் புரியாத புதிராக நீண்டுசென்றது.

''என்பாட்டுக்கு யோசிச்சுக் கொண்டிருக்கிறதால ஒண்டும் தெரியவராது. ஆரிட்டையாவது போய் விசாரிப்பம்''.

என்ற முடிவோடு ஏதோ ஒரு மந்திரத்தை முணுமுணுத்தார். அடுத்த நொடியே பூரண இராணுவச் சீருடையுடன் ஆளே அடையாளம் தெரியாதபடி நாரதர் மாறினார். அவர் மந்திரம் சொல்வதை யாராவது கேட்டிருந்தால் ஏதோ புதிய சினிமாப் பாடல் ஒன்றைத்தான் அவர் பாடுவதாக எண்ணியிருப்பர். ஏனென்றால் அநேகமான மந்திரங்களின் இராகங்கள் இப்போது தேவலோகத்தில் 'ரீ-மிக்ஸ்' செய்யப்பட்டிருந்தன. அதனால் மந்திரங்களைக் கேட்பவர்கள் தம்மை மறந்து ஆடுவது நிச்சயம்.

''லெப்ட்! ரைட்'' சொல்லாத குறையாக, விறைப்பான நடையுடன் சவப்பெட்டி அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கும் இடத்தை அடைந்தார் 'நாது'. (நாரதரும் இப்போது தன்னுடைய பெயரை ஸ்டைலாக 'நாது' என்று சுருக்கியிருந்தார். உண்மையில் நார் என்றுதான் வைத்திருக்கவேண்டும். ஆனால் அது கொஞ்சம் தரக்குறைவாக இருந்ததாலும், நாரதரின் ராசிப்படி பொருத்தம் குறைவாக இருந்ததாலுமே நாரதர் 'நாது' என்ற செல்லப் பெயருக்கு மாற வேண்டியிருந்தது).



நாதுவையும் எல்லோரும் சக இராணுவ அதிகாரி என்றே நினைத்தனர். பின்னே, எம்.ஜி.ஆர் ஒரு கறுப்பு மச்சத்தை எடுத்துக் கன்னத்தில் ஒட்டினாலே அவரை அடையாளங் காண முடியாது வில்லன்மார் திண்டாடும் போது, நாது 'கமல்' மாதிரி முழுதுமாகக் 'கெட்டப்' மாறி வந்தால் யார் தான் கண்டு பிடிக்கமுடியும்?

மெதுவாகப் பக்கத்தில் நின்ற அதிகாரியிடம் பேச்சுக் கொடுத்தார் நாது.

''நான் இப்போதுதான் வருகிறேன். நடந்ததொன்றும் எனக்குத் தெரியாது. யார் இறந்தது?'' நாது 'கெட்டப்' மட்டுமல்லாது சிங்களமும் கதைக்கும் ஆற்றலையும் மந்திரத்தின் மூலம் பெற்றிருந்தார். அவரின் இந்தக் கேள்விக்கு சக அதிகாரியின் ஏளனப்பார்வையே அவருக்குப் பதிலாகக் கிடைத்தது.

''கொமாண்டோ ஸ்னோவி செத்துப்போனது உமக்குத் தெரியாதா?''

''கொமாண்டோ ஸ்னோவி.......?'' நாது இழுத்தார்.

''ஓம்! அவன்தான். நேற்று திடீரெண்டு மூச்சுவிட கஷ்டப்பட்டான். அம்புலன்ஸில கொண்டு போனம். ஆனா எங்கட கண்ணுக்கு முன்னாலேயே அவன்ர உயிர் பிரிஞ்சி.ட்.....டு......து..!!!'' அந்த அதிகாரியால் துக்கத்தை அடக்கமுடியவில்லை.பெரும் அழுகை வெடித்தது. ஆனால் நாதுவுக்கு இப்போது வேறொரு பிரச்சினை. ஸ்னோவி என்றவுடன் நன்றாகத் தெரிந்தவர் போல தலையை ஆட்டிவிட்டாரே தவிர, யாரந்த ஸ்னோவி என்பது மட்டும் அவரது மூளைக்கு இன்னும் எட்டாக் கனியாகவே இருந்தது. அதைப்பற்றி அறியாவிட்டால் அவருக்கு தலையே வெடித்துவிடும் போல இருந்தது. (ஒரு நாளைக்கு ஒரு கலகமாவது செய்யாவிட்டால் நாரதருக்கு- நாதுவுக்கு- தலை வெடித்துவிடுமென்பது வேறு சங்கதி) அதிகாரி அழுது ஓயுமட்டும் காத்திருந்தார் நாது.

''நீங்க அழுகிறதிலையும் நியாயமிருக்கு. கொமாண்டோ ஸ்னோவி எண்டால் சும்மாவோ? எவ்வளவு பெரிய இழப்பு'' நாது போட்ட தூண்டில் வார்த்தைகள் நன்றாகவே வேலை செய்தன.

அதிகாரி புறங்கையால் கண்களைத் துடைத்தபடி,

''சரியாச் சொன்னீங்கள். அவன் எவ்வளவு கெட்டிக்காரன். எத்தனை சண்டையளை அவனால நாங்கள் வெண்டிருப்பம். ஒண்டுக்கும் பயப்பிடமாட்டான். துணிஞ்ச கட்டை. எங்கட 'ஹாம்புகளை' றெக்கி எடுக்கவந்த பல புலிகளை அவன்தானே பல தடவை கண்டுபிடிச்சவன். ஒருக்கா புலியள் அடிச்ச ஆர்.பி.ஜி பட்டும், மணலாற்றில தப்பினவன் தானே?'' அதிகாரி கொமாண்டோ ஸ்னோவியின் சாதனையை அடுக்கிக் கொண்டே போக, நாதுவின் ஆவலும் அடக்கமுடியாத நிலைக்குச் சென்று கொண்டிருந்தது. செத்துப்போய் விட்ட இராணுவ அதிகாரியின் உடலைப் பார்த்தால் ஓரளவுக்கு இறந்தது யாரென்று கண்டுபிடித்து விடலாம் என எண்ணிய நாது, அதற்கும் ஒரு தந்திரம் செய்யத் தவறவில்லை.

''சரி! நான் ஒருக்கா ஸ்னோவியின் உடலுக்குக் கிட்டப்போய் அஞ்சலி செய்யவேணும். அதுக்கு கிட்ட கூட்டிக் கொண்டு போகமுடியுமே?'' கெஞ்சும் குரலில் நாது கேட்டார்.

''அதுக்கென்ன வாரும். காட்டுறன்'' அந்த அதிகாரி நாதுவை அழைத்துச் சென்று சவப்பெட்டியைத் திறந்து ஸ்னோவியின் சடலத்தைக் காட்டினார். அங்கே - சவப்பெட்டிக்குள் ஒரு பெரிய நாயின் உடல்!!!

''நாயின்ர 'பொடி' யெல்லோ கிடக்கு'' இதை அவர் கொஞ்சம் வாய்விட்டே சொல்லிவிட்டார்.

''ஸ்னோவி நாயில்லாமல் டைனோசரோ? அது செத்தால் பெட்டிக்குள்ள அதுகின்ர-நாயின்ர - 'பொடி'தானே கிடக்கும்''.

இப்போது நாரதருக்கு எல்லாம் புரிந்துவிட்டது: யுத்த வெற்றிக்காகப் பங்காற்றிய இராணுவ நாயொன்றின் இறுதிச்சடங்கே அதுவென்று!

அவரால் நம்பமுடியவில்லை. தேவலோக ஊடகங்கள் எல்லாம் இலங்கை அரசும், படைகளும் பயங்கர யுத்த வெறியர்கள் என்றும் மனிதாபிமானம் என்பதை அறவே அறியாதவர்கள் என்றுமே சொல்லி வந்தன. தமது கூற்றுக்கு ஆதாரமாக முள்ளிவாய்க்காலில் இறந்தவர்களின் ஆன்மாக்களைப் பேட்டி கண்டும் அவர்கள் வெளிப்படுத்தியிருந்தனர். இதனால் யமதர்மன் இலங்கையில் மனிதப்படுகொலையுடன் தொடர்புடையவர்களுக்கென்று அதி நவீன சித்திரவதைக் கூடங்களை நரகத்தில் தயார்ப்படுத்தி வைத்திருந்தார். அவையெல்லாம் வேண்டுமென்றே இட்டுக்கட்டப்பட்ட தகவல்களோ? என்ற நினைப்பே நாதுவின் மனதில் எழுந்தது.தன்னுடைய செல்போனில் ஸ்னோவி நாயின் இறுதிச்சடங்குகளைப் படம் பிடித்துக் கொண்டார்.

''முதலில் இதைக்கொண்டு போய் தேவலோக ஊடகங்களிட்ட குடுத்து அவையள் இவ்வளவு நாளும் சொன்னது பொய். இலங்கையில ஒரு நாயைக் கூட அது செத்தபிறகும்கூட மரியாதையோட நடத்துறாங் கள் எண்டதை நிரூபிக்கவேணும்'' எனச் சற்று உரத்துச் சொல்லியவாறே மீண்டும் தேவலோகத்துக்கு வந்தார்.

வந்திறங்கியதுமே அவரின் கண்ணில் தென்பட்டது யமதர்மனின் தலைமை அலுவலகம். நீண்ட நாளைக்குப் பிறகு அவரது அறை திறந்திருந்தது. முள்ளிவாய்க்கால், ஜப்பான் சுனாமி என்று அடுத் தடுத்து தலை நிமிர முடியாத வேலைகளால் சோர்ந்து போயிருந்த யமன், கொஞ்ச நாளைக்கு சித்திரகுப்தனை தனக்குப் பதிலாக -'அக்டிங்' காக- பதவியில் இருத்திவிட்டு குடும்பத்தோடு ரூர் போயிருந்தார். இப்போது வந்துவிட்டார் போலும்.

''ஆளுக்கு ஒருக்கா இந்த செல்போன் வீடியோவைக் காட்டி இலங்கை ஆமியும் அரசும் மனிதாபிமானம் உள்ள ஆக்கள் எண்டு நிரூபிப்பம்'' என்று நினைத்தவாறு யமனின் அலுவலகத்துக்குள் நுழைந்தார் நாது.அங்கு வியர்த்து விறுவிறுக்க , ஒரு 'லப்டொப்பை' எப்படி 'ஓன்' செய்வது என்று தெரியாமல் அதைப்போட்டுக் கிண்டிக்கொண்டிருந்தார் யமன். யமனுக்கு இந்த 'டெக்னோலொஜி' விஷயங்கள் அவ்வளவாக ஓடாது. 'எதற்கும் இருக்கட்டும்' என்ற நினைப்புடன் கணினியுடன் யமன் படுகின்ற பாட்டையும் தன்னுடைய செல்போனில் இரகசியமாகப் படம் பிடிக்கத்தொடங்கினார் நாரதர்.

''என்ன, செல்போனால வீடியோ எடுக்கிறீரோ? உந்த விளையாட்டாலதானே இலங்கை இப்ப மாட்டுப்பட்டுப் போய் முழிக்குது'' என்று கூறிக்கொண்டு பின்னால் வந்த சித்திரகுப்தர் நாதுவின் செல்போனைப் பிடுங்கினார்.

''அப்பிடிச் சொல்லாதையுங்கோ. அவங்கள் நல்லவங்கள். உந்த மீடியாக்கள் தான் இல்லாததையும் பொல்லாததையும் சொல்லிப் பேய்க்காட்டுதுகள். அங்க ஒரு நாய் செத்தால் கூட எவ்வளவு மரியாதை எண்டு பாருங்கோவன்'' சொல்லிக்கொண்டே சித்திரகுப்தரின் கையில் இருந்த செல்போனில் தான் படம்பிடித்த காட்சிகளை ஓடவிட்டார் நாரதர்.

அந்தக்காட்சிகளைப் பார்த்தபின்னும் யமனும் சித்திரகுப்தரும் ஆச்சரியம் அடையவில்லை.மாறாக ஒரு விஷமப் புன்னகையையே புரிந்தனர்.

''நாரதரே! நீர் இதை ஒருக்கா பாரும்!'' என்று கூறியவாறு யமனின் லப்டொப்பில் ஒரு வீடியோத்துண்டத்தைக் காண்பித்தார் சித்திரகுப்தர். அந்தக்காட்சியில் நிர்வாணமாக்கப்பட்ட ஆண்களையும் பெண்களையும் சூடான இரத்தம் கொப்பளிக்க வெறிச் சிரிப்புடன் தலையில் சுட்டுக் கொன்ற இராணுவம், அவற்றை எவ்வளவு கேவலப்படுத்த முடியுமோ அவ்வளவு கேவலப்படுத்தி, அசிங்கம் செய்து, தம் காம இச்சையைச் சடலங்களில் காண்பித்து...


நாதுவால் தொடர்ந்து பார்க்கவே முடியாதிருந்தது. வீடியோ தவிர பல புகைப்படங்களும் இருந்தன. ஒரு புகைப்படத்தில் உயிரிழந்த ஒருவரின் தலையில் பூட்ஸ் காலை வைத்தபடி ஒரு சிப்பாய். அது நாயின் செத்த வீட்டில் ஸ்னோவியின் கதையைச் சொன்ன அதிகாரியே தான். அந்தப்படத்தைக் கூர்ந்து கவனித்தார் நாரதர் என்கிற நாது. இறந்த சடலத்தில் சில நாய்க்கடிகள். பக்கத்தில் வாயில் இரத்தம் சொட்டும் தசையோடு ஸ்னோவி நாய்.

''இந்த நாய் சாகத்தான் வேண்டும் . நாய் செத்தா மாலை மரியாதை. மனிசர் செத்தால் காலால தள்ளுறாங்கள்'' நாரதர் கூவியபடி தனது செல்போனைத் தூர எறிந்தார். அவருக்கு இப்போது தலை சுற்றத் தொடங்கியது. சித்திரகுப்தர் கொடுத்த யூஸ் கூட அவருக்கு இரத்தம் போலவே தோன்றலாயிற்று. ஸ்னோவி நாயின் ஆன்மாவை நரகத்துக்குக் கொண்டு செல்லும் வாகனம் நாரதரைக் கடந்து விரைந்தது.✸

# ஐ.நா. - இலங்கை கயிறிழுப்புப் 'போர்'

Image 1008 shows a zoomed in image of the victims.

For reference purposes, the body positions are identified.





As the camera pans to the left, image 1054 shows the right shoulder of a soldier's uniform. The uniform has an insignia that appears to designate a military rank.

This soldier is carrying a weapon under his right arm.

இலங்கையில் தொடர்ந்த பயங்கரவாதத்தை ஒழித்துவிட்டோம் என மார்தட்டி இரண்டாவது வெற்றிவிழாவையும் நடத்திக் களிப்புற்றிருக்கும் இலங்கை மீது மீண்டும் வந்த வீழ்ந்துள்ளது போர்க் குற்றச்சாட்டு.

போரின் இறுதிக்கட்டத்தில் நடந்தவற்றை படம் பிடித்து 'சனல்4' தொலைக்காட்சிச் சேவை பகிரங்கப்படுத்தியது. கற்பனையான படங்கள் அவை என இலங்கை கூறிவந்தது.

அவற்றுக்கெல்லாம் ஆப்பு வைப்பது போல், அந்தப்படங்கள் உண்மையானவை; போர்க் குற்றங்கள் நடந்தது உண்மைதான் என்று இப்போது ஐ.நா அறிவித்துள்ளது. அதற்கான ஆதாரங்களையும் தனது நீண்ட அறிக்கையில் ஐ.நா. வெளியிட்டுள்ளது.

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 17ஆவது கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் இறுதிக் கட்டப் போரில், போர்க் குற்றங்கள் இடம் பெற்றுள்ளன என எழுந்த குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு தொடர்ந்து மறுத்துவரும் நிலையில் -

**யாழவன்**

அந்தப் போர்க்குற்றங்களை உறுதிப்படுத்தும் தொலைக்காட்சிப் படங்களை 'சனல்4' தொலைக் காட்சி தொடர்ந்து வெளியிட்டுவந்தது.

இந்தப் படங்கள் அந்தத் தொலைக்காட்சிச் சேவைக்கு எப்படிப் போயின என்று தெரியாத நிலையில் தலையைப் பிய்த்துக் கொண்டிருந்தது இலங்கை அரசு. இறுதிக்கட்டப் போரின் போது பத்திரிகையாளர்களோ, வேறு எவருமோ அங்கு செல்லத்தடை விதிக்கப்பட்ட நிலையில் எப்படி இந்தப் படங்கள் களத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டன என்ற மர்மம் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இலங்கையில் இயங்கி வந்த மனித உரிமை அமைப்பு ஒன்றுதான் இந்தப் படங்களை எடுத்து 'சனல் 4' தொலைக்காட்சிச் சேவைக்கு அனுப்பியிருந்ததா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

படங்கள் என்ன மாதிரிச் சென்றன என்பதற்குப் புறம்பாக, தொடர்பான அந்தப்படங்கள் களத்தில் உண்மையாகவே எடுக்கப்பட்டவை என்பது இப்போது உறுதியாகியுள்ளது.

ஐ.நாவுக்குக் கிடைத்த இந்தப் படங்களை ஒன்று திரட்டிய ஐ.நாவின் சட்டத்துக்குப் புறம்பான படுகொலைகள் விசாரணையாளர் கிறிஸ்டோவ் கென்ஸ், அவற்றை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்துள்ளார். தென்னாபிரிக்காவைச் சேர்ந்த சட்டப் பேராசிரியரான கென்ஸ், தாம் ஒன்று திரட்டிய படங்களை, தகவல்களைப் பல்வேறு தரப்புக்களிடம் கையளித்தார்.

தொழில் நுட்ப நிபுணர்கள், தடயவியல் நிபுணர்கள், வீடியோ தொழில்துறை நிபுணர்கள் உட்பட பலரின் ஆலோசனைகளைப் பெற்று அந்தப் படங்கள் உண்மையானவை தான் என்று அறிவித்துள்ளார்.

அவரின் இறுதி ஆய்வறிக்கை 482 பக்கங்கள் கொண்ட நீண்ட அறிக்கையாக அமைந்துள்ளது. அந்த அறிக்கையில் இலங்கை விவகாரம் தொடர்பாக எடுக்கப்பட்ட படங்கள் உண்மை என்பதை உறுதி செய்யும் ஆய்வறிக்கை 59 பக்கங்களில் படங்களுடன் வெளியிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு படமும் துல்லியமாக ஆய்வு செய்யப்பட்டு, படுகொலைகள் இடம்பெற்றுள்ளன என்பதைக் காட்டும் வகையில் ஆய்வு அறிக்கைகள் அந்த இறுதி அறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளன.

''அந்த வீடியோக் காட்சிகள் உண்மையானவை. நம்பகமானது. அங்கு நடந்தவை என்ன என்பதை மிகத் தெளிவாக விளக்குகின்றன'' என்று அறிக்கையில் தெரிவித்துள்ள கென்ஸ் -

''மிகப் பாரதூரமான குற்றம் நிகழ்ந்துள்ளது என்பதை இந்த வீடியோ க் காட்சிகள் பிரதிபலிக்கின்றன. அவை போர்க் குற்றங்கள் என வரையறுக்கப்படுகின்றன'' என அடித் துக் கூறியுள்ளார்.

இலங்கையில் போரின் இறுதிக் கட்ட மோதலில் அரச படைகளும், விடுதலைப்புலிகளும் சர்வதேச சட்டங்களைப் பரந்த அளவில் மீறியுள்ளதற்கு நம்பத் தகுந்த குற்றச்சாட்டுக்கள் இருக்கின்றன என்று ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்த நிபுணர் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்தது.

இரு தரப்புக்களாலும் மீறப்பட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களையும் அந்த அறிக்கையில் தெரிவித்திருக்கும் நிபுணர் குழு பொறிமுறை விசாரணை ஒன்று நடத்த வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

ஆனால் இப்போது வெளியாகியுள்ள ஐ.நா.அறிக்கையாளர் கென்ஸின் அறிக்கை, முற்று முழுதாக இறுதிப் போரில் போர்க் குற்றம் நிகழ்த்தப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது.

ஐ.நா.நிபுணர்குழு அறிக்கையே பொய்யானது; ஆதாரமற்றது என்று துள்ளிக் குதித்து, அதற்கு எதிராகக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் இலங்கை அரசு, இப்போது என்ன செய்யப்போகிறது என்பதே இப்போது எழும் கேள்வியாகும்.

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கையை எதிர்ப்பதற்காகத் தனது நட்பு நாடுகளை எல்லாம் தமது குடைக்குள் கொண்டுவர முயற்சி மேற்கொண்டிருக்கும் இலங்கைக்கு, கென்ஸின் அறிக்கை பெரும் தலையிடியாக வந்து வீழ்ந்துள்ளது.

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள மனித உரிமைச் சபையின் இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை மீது குற்றம் ஏதும் விழாது. அடுத்த கூட்டத் தொடர் செப்ரெம் பரில் ஆரம்பமாகும்போது, இலங்கைக்கு எதிராகத் தீர்மானம் ஏதும் கொண்டுவரப் படலாம் என்று செய்திகள் வெளியான நிலையில் -

கூட்டத் தொடர் ஆரம்ப நாளன்றே பெரும் பாறாங்கல்லொன்று இலங்கை மீது வீழ்ந்துள்ளது.

கென்ஸின் அறிக்கைக்குப் புறம்பாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரை ஆரம்பிக்கும் போதே, அந்தப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கை விவகாரத்தைக் கையில் எடுத்துள்ளார்.

''ஐ.நா.நிபுணர் குழுவால் ஆவணப்படுத்தப்பட்டு எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பாரதூரமான முறைகேடுகள் குறித்து இந்தச் சபை கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும்'' என்று கூறியுள்ள நவநீதம்பிள்ளை -

''குற்றங்கள் எந்தத் தரப்பால் மேற்கொள்ளப்பட்டன என்பதை விடுத்து சர்வ மனிதாபிமானச் சட்டங்கள் மற்றும் மனித உரிமைகள் மீறப்பட்டமை தொடர்பில் இலங்கை விரைவாகவும் நம்பத் தகுந்த வகையிலும் விசாரணைகளை மேற்கொள்வது அவசியம்.''

''இலங்கைமீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரிக்க வேண்டியது அந்த நாட்டின் கடமையாகும். இந்த விசாரணையைக் கண்காணிக்க சர்வதேச பொறிமுறை ஒன்று அவசியம்.'' எனத் திட்டவட்டமாகத் தனது ஆரம்ப உரையில் தெரிவித்து இலங்கையை பேரவையின் விவாதத்துக்கும் இழுத்துள்ளார்.

நவநீதம்பிள்ளையின் மேற்கொண்ட கருத்தை உடனடியாகவே மறுத்துரைத்து தமது கருத்தை முன்வைத்தார் இலங்கைக் குழுவுக்குத் தலைமை தாங்கிச் சென்ற மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க.

இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு நாட்டுக்குள்ளேயே தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படும். அத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கை வருத்த மளிக்கும் வகையில் அமையப் பெற்றுள்ளது'' என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க மறுதலித்துள்ளார்.


''நாட்டில் மீண்டும் வன்முறைகள் ஏற்படாத வகையிலான நடவடிக்கைகள் குறித்து அரசு கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது. ஐ.நா.நிபுணர் குழு அறிக்கை அதிருப்தி அளிக்கும் வகையில் அமைந்துள்ளது. இருந்தும் நிபுணர்குழுவின் அதிகாரங்களுக்குப் புறம்பான வகையில் அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது'' என்றும் அமைச்சர் மகிந்த சமரசிங்க ஐ.நா. பேரவையில் கூறியுள்ளார்.

ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை வெளியான காலத்தில் இருந்தே இலங்கை இதே விதமான கருத்தையே வெளியிட்டுக் கொண்டிருக்கிறது.

ஆனால் இலங்கையின் கருத்தை ஐ.நாவும், சர்வதேச நாடுகளும் தொடர்ந்து கண்டித்துக் கொண்டிருக்கின்றன.


நடந்துகொண்டிருக்கும் ஐ.நா. மனித உரிமைப் பேரவைக் கூட்டத்தொடரில் முதல்நாளே இலங்கைக்கு எதிராகக் குற்றச்சாட்டு வீழ்ந்துள்ளது.

இரண்டு வாரங்கள் நடக்கப்போகும் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராக வந்து விழப்போகும் குற்றச்சாட்டுக்கள் இன்னும் எத்தனையோ!.★




The camera continues to pan to the left. Image 227 shows Victim #6 on the ground on the right side of the image. Victim #5's left leg is also partially visible.

Two other men are seen on the ground to the left. Victim #8, dressed in a white shirt appears to have a significant head wound with what appears to be blood on the ground under his head. Victim #7 is close to Victim #8's feet.




The camera continues to pan to the left revealing additional bodies on the ground. Image 247 shows four naked bodies; at least three are men. A blood-like substance appears to be at the head of two of the men.


# நான் ரஜினியின் நாயகி

பொலிவூட்டின் தற்போதைய பரபரப்பு சித்தார்த் மல்லையா - தீபிகா படுகோன் நட்புத்தான். ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகளைத் தொடர்ந்து பார்ப்பவர்களுக்கு இந்த அதீத நட்பு தொலைக்காட்சியிலேயே தெரிந்திருக்கும். ரோயல் சேலஞ்சர் அணி வெற்றி பெறும் போதெல்லாம் இருவரும் சினிமாக் காதலர்களைப் போல் கட்டிக்கொள்வதும் கைகளைப் பிடித்துக்கொள்வதும் கண்கொள்ளாக் காட்சிகள்.

சமீபத்தில் மும்பையில் பதினாறு கோடி ரூபாய் மதிப்புள்ள மாடிவீட்டை தீபிகா வாங்கியிருக்கிறாராம். அந்த மாடிவீட்டுக் கொள்வனவுக்குக் காரணம் சித்தார்த் மல்லையா என்று கிசுகிசுக்கிறார்கள். 'பிடித்தாலும் பிடித்தார், பல்லாயிரம் கோடி ரூபாய் வாரிசைப் பிடித்துவிட்டார்' என்று பொலிவூட் நடிகைகள் பொறாமைப்படுகிறார்களாம். சரி, இந்த நட்பைப் பற்றி என்ன சொல்கிறார் தீபிகா படுகோன்? 'ராணா'வில் ரஜினியின் ஜோடியான அடுத்த நொடியே தமிழகத்தின் முக்கிய ஹீரோயின் ஆகிவிட்டார். அவர் அளித்த பேட்டியில் சில தகவல்கள் இங்கே.

கே:- உங்களுடைய சினிமா உலக நுழைவு பற்றி...?

ப:-என்னுடைய அப்பா பிரகாஷ் படுகோன் பட்மிண்டன் ஆட்டக்காரர் என்பதால் நானும் விளையாட்டுத் துறைக்கு வரவேண்டும் என்று விரும்பினார். நானும் மாநில அளவில் விளையாடியிருக்கிறேன். கல்லூரிக்குப் படிக்கப் போனபோது 'மொடலிங்' செய்வதிலேயே மிகவும் ஆர்வம். நிறைய விளம்பரங்களில் தலையைக் காட்டினேன். அப்படியே சினிமா வாய்ப்பும் வந்தது. கன்னடத்தில் தொடங்கி ஹிந்திக்குப் போய் இப்போது தமிழில் சூப்பர் ஸ்டார் ஹீரோயின் ஆகிவிட்டேன்.



கே:- தமிழகத்தில் படப்பிடிப்பு அனுபவங்கள் எப்படியிருந்தது?

ப:- ரஜினி, அவருடைய மகள்மார் சௌந்தர்யா, ஐஸ்வர்யா, இயக்குநர் கே.எஸ்.ரவிகுமார், டான்ஸ் மாஸ்டர் பிருந்தா, இவர்கள் எல்லோரும் மிகவும் அன்போடு பழகினார்கள். முதல்நாள் படப்பிடிப்பில் ரஜினிக்கு திடீரென்று உடல்நிலை சரியில்லாமல் வைத்தியசாலையில் சேர்த்தபோது மிகவும் படபடத்துவிட்டேன். ஆனால் அடுத்தநாளே படப்பிடிப்பில் கலந்துகொண்டார். வேலையின் மேல் அவருக்கிருந்த பக்தியைப் பார்த்து ஆச்சரியப்பட்டேன். அவருடைய சுறுசுறுப்பு அடுத்த ஆச்சரியம்.

கே:-தினமும் படப்பிடிப்பு முடிந்து மாலை வேளையில் சென்னையில் எங்கேயாவது சென்று வந்தீர்களா?

ப:-இந்தத் தடவை அதற்கான சந்தர்ப்பம் அமையவில்லை. அடுத்தமுறை சென்னையில் உள்ள எல்லா இடங்களையும் என் நண்பி சௌந்தர்யாவோடு சுற்றிப் பார்க்கப் போகிறேன்.

கே:-தமிழ்நாட்டின் உணவு எல்லாம் உங்களுக்குப் பிடித்திருந்ததா?

ப:-படப்பிடிப்பின்போது ரஜினி வீட்டிலிருந்து மரக்கறி உணவை சௌந்தர்யா கொண்டு வந்து என்னைத் திக்குமுக்காடச் செய்துவிட்டார். எல்லாம் பிரமாதமாக இருந்தது. குறிப்பாக வத்தல்க்குழம்பு, மோர்க்குழம்பு பிரமாதம். விரும்பிக் கேட்டு வாங்கி ரசித்துச் சாப்பிட்டேன்.

கே:-உங்களுக்கும் சித்தார்த் மல்லையாவுக்கும் உள்ள நட்பு?

ப:-இந்த விடயத்தை அடுத்த முறை சந்தோசமாகப் பேசுவோமா?. ★

# அழுத குழந்தையை அலுமாரியில் வைத்துப் பூட்டிய தாதி!



புதிதாகப் பிறந்த குழந்தை அழுததால், அதை அலுமாரியில் வத்துப் பூட்டினார் ஒரு தாதி.

இந்த அபூர்வத் தாதி இப்போது வேலையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்.

இந்தக் குழந்தையை ஆஸ்பத்திரியில் இருந்து கடத்தும் ஒரு மோசடி நோக்கிலேயே இவர் இப்படிச் செய்திருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.


நீண்ட அனுபவம் உள்ள ஒரு மருத்துவத் தாதியே இவ்வாறு நடந்து கொண்டுள்ளார்.

இந்தக் குழந்தை அதிகம் அழுததாகவும் அது பற்றி ஏனையவர்கள் முறையிட்டதாலுமேதான் இப்படி நடந்து கொண்டதாக அந்த மருத்துவ தாதி தெரிவித்துள்ளார்.

லண்டன் எஸக்ஸ் பிரந்தியத்தில் உள்ள குயீன்ஸ் ஆஸ்பத்திரியிலேயே இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

ஆஸ்பத்திரி நிர்வாகம் இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.★

# கலக்கும் திகில் கும்பல்



பகலில் கொலை செய்து விட்டு, இரவில் அந்த உடலை ஆளரவமற்ற பகுதியில் தீ வைத்து எரித்து விட்டுத் தப்பிச் செல்லும் கும்பல் குறித்த திடுக்கிடும் செய்தி வெளியாகியுள்ளது.

சமீபத்தில் சென்னையைச் சேர்ந்த மாசிலாமணி என்ற ஒய்வு பெற்ற அரசு அதிகாரி தனது காரில் தீ வைத்து எரிக்கப்பட்ட நிலையில் பிணமாக கண்டு பிடிக்கப்பட்டார். பொலிஸார் நடத்திய தீவிர விசாரணையில் அவருடைய கார் டிரைவரான சுரேஷ் என்பவர் மீது சந்தேகம் வலுத்தது.

தற்போது பொலிஸ் விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகியுள்ளன. மிகப் பெரிய கொலைக் கும்பல் இந்தக் கொலையின் பின்னணியில் இருப்பது தெரிய வந்துள்ளது.

இதுகுறித்து பொலிஸ் தரப்பில் கூறப்படும் தகவல்கள்...

இந்தக் கொலையில் ஈடுபட்டவர்கள் ஒரு கொடூரக் கொலைக் கும்பலைச் சேர்ந்தவர்கள். கார் டிரைவர் சுரேஷும் இந்தக் கும்பலைச் சேர்ந்தவன்தான். மேலும் அவனது உண்மையான பெயர் சுரேஷ் அல்ல. சிவா என்பதுதான் அவனது உண்மையான பெயர்.

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகே உள்ள பேயன்விளை என்ற கிராமத்தைச் சேர்ந்தவன் அவன். ஊரில் சரியாக வேலை பார்க்காமல் சுற்றி வந்த அவன் பெற்றோரின் கோபத்தைச் சம்பாதித்தான். இதனால் சென்னைக்கு வந்துள்ளான். வரும் போது நான் பெரிய கோடீஸ்வரனாகத்தான் இந்த ஊருக்குத் திரும்பி வருவேன் என்று சினிமா ஹீரோக்கள் பாணியில் சவாலும் விட்டுள்ளான்.

சென்னைக்கு வந்த சிவா ஒரு மிகப் பெரிய கொலைக் கும்பலில் இணைந்துள்ளான். இந்தக் கும்பலின் வேலையே கொடூரமாகக் கொலைசெய்து உடலை தீ வைத்து எரித்து விடுவதுதான்.

பெரும் பணக்காரர்கள் வீடுகளை இவர்கள் குறி வைப்பார்கள். பின்னர் அந்த வீட்டில் யாராவது ஒருவர் கார் டிரைவராகப் போய் சேர்வார்கள். அந்த வீட்டாருடன் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்ட பின்னர் நம்பிக்கைக்குப் பாத்திரமாகி, பிறகு பணம், நகைகளைக் கொள்ளையடித்து விடுவார்கள்.


இதற்கு இடையூறாக யார் வந்தாலும் அவர்களைக் கொன்று விடுவார்கள். பின்னர் உடலை இரவில் எங்காவது ஆளரவமற்ற இடத்தில் வைத்து தீ வைத்து எரித்துச் சாம்பலாக்கி விடுவார்கள்.

இந்தக் கொலைகார, கொள்ளைக்காரக் கும்பல் இப்படிப் பலரைக் கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். சிவா சிக்கினால் தான் உண்மை தெரிய வரும்.

மாசிலாமணியிடமும் சிவா, சுரேஷ் என்ற பெயரில் சேர்ந்து அவரிடம் பெரும் பணம் புழங்குவதை அறிந்து தனது கூட்டாளிகள் நான்கு பேருடன் இணைந்து கொலை செய்துள்ளான். ஆனால் சம்பவத்தன்று மாசிலாமணியிடம் பெருமளவில் பணம் இல்லாததால், அவர் வைத்திருந்த பணத்தையும், நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

தற்போது இந்தக் கும்பலைப் பொலிஸார் சுற்றி வளைத்துள்ளதாகத் தெரிகிறது. விரைவில் இவர்கள் கைது செய்யப்பட்டு அவர்கள் குறித்த விவரம் வெளியிடப்படும் என்று காவல்துறை தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கொலை வழக்கில் மிகப் பெரும் அதிர்ச்சித் தகவல்கள் காத்திருப்பதாகவும் பொலிஸ் தரப்பில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.★

**கரோலின் தாக்குதலிலிருந்து றொப்பைக் காப்பாற்றிய மைக், றொப்பைத் தன் காரில் ஏற்றிக் கொண்டு அங்கிருந்து தப்பி பண்ணை வீட்டுக்கு வருகிறான். காயமுற்றிருந்த றொப்பைக் கவனிக்கும் பொறுப்பைப் பண்ணைக்காரியிடம் ஒப்படைத்து விட்டுச் செல்கிறான். இதனிடையே பத்திரிகையாளன் ஜோர்ஜ் கரோலினது சொத்துக்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக அவனது டிரஸ்ட்டிடமும் சட்டத்தரணிகளிடமும் ஆலோசனை நடத்துகிறான்.**






**விறுவிறுப்பூட்டும் மர்மத்தொடர் - 16**

அந்த டிரஸ்ட் பெருமளவில் கரோலினது சொத்துக்களை நம்பியே இயங்கி வந்தது. அதில் பிழைத்தவர்கள் பலர். கரோலை சரணாலயத்தில் காணவில்லை என்றதும் அதிகம் துடித்தவர்கள் அவர்கள்தான். அவள் சட்ட ரீதியாகச் சொத்துக்களைக் கோர வந்தால் அவர்களின் பிழைப்பில் மண்.

கரோலுக்குரிய சொத்து என கிட்டத்தட்ட ஆறு மில்லியன் அமெரிக்க டொலர்கள் பணமாக இருந்தன. டிரஸ்ட்டிடம் இரண்டு கிலோ வரையான தங்கம் இருந்தது. இரண்டு பங்களாக்கள் இருந்தன. வாகனங்கள் பழுதாகி விட்டன. இந்த இரண்டு பங்களாக்களில் ஒன்றில்தான் றொப்பும் மைக்கும் குடியிருந்தார்கள். வைரங்களைக் கைப்பற்றினார்கள்.

டிரஸ்டிடம் கரோலின் சொத்தாகத் தேடப்படும் வைரங்கள் இருந்தன. அவற்றின் விலை மதிப்போ தொகையோ தெரியாது. அவற்றைத் தேடுகிறோம் என்று சொல்லி அவர்கள் அமெரிக்கா முழுவதும் உல்லாசமாகப் பறந்தபடி இருந்தார்கள்.

தனது சொத்து விவரத்தைக் கேள்விப்பட்ட போது கரோலுக்கே ஆச்சரியமாக இருந்தது. இவ்வளவையும் வைத்துக் கொண்டு நீயும் நானும் அமைதியாக - நிம்மதியாக வாழ முடியுமா என்று கேட்டான் டானியல். கேள்வி நியாயமானதுதான்.

கரோலும் பணத்தைப் பற்றி பெரிதாக அக்கறைப் படவில்லை. மீண்டும் டானியலின் பண்ணைக்குத் திரும்ப வேண்டும். அதைச் சீர்ப்படுத்த வேண்டும். அங்கே அமைதியாக வாழ வேண்டும். அவனோடு சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க வேண்டும். இதுவே அவளது ஆசை.

விடயம் வெளியே கசியும் போது டானியலையும் கரோலையும் பிரித்து அவளை அடையப் பல பெரிய புள்ளிகள் முயற்சிக்கலாம். இதனால் பல தலைவலிகள் ஏற்படலாம்.

எல்லாச் சாத்தியங்களையும் நிதானமாக ஆராய்ந்தனர் டானியலும் கரோலும். பண்ணை போல ஒரு பெரிய அனாதை ஆச்சிரமத்தைக் கட்டி அங்கே ஆயிரக்கணக்கான அனாதைகள், மன நிலை தவறியோர், வலுவிழந் தோர், ஏழைகள் போன்றோரைப் பராமரிக்கலாம் எனச் சொன்னாள் கரோல். டானியலுக்குத் அது பிடித்திருந்தது. அளவுக்கு மீறி அன்பைச் செலுத்த விட்டால் அவள் ஆபத்தானவளாக சில வேளைகளில் மாறிவிடுவாள் என்ற ஏக்கமும் அவனிடம் இருந்தது.

இன்னும் இரண்டொரு தடைகளைத் தாண்டிய பின் எல்லாம் சிந்திப்போம் என்றிருந்தான் டானியல். பண்ணையை ஒருமுறை போய்ப் பார்க்க வேண்டும் என மனம் எண்ணியது. ஜோர்ஜின் காரில்தான் போக வேண்டும். அவசரப்பட்டுப் போக வேண்டாம் என ஜோர்ஜ் ஆறுதல் கூறினான்.

மைக் மீண்டும் சில நாள்கள் கழித்து அந்தப் பண்ணைக்கு வந்தான். தான் தங்கியிருக்கும் பிளாட்டில் இருந்து தலைமறைவாகாமல் அடிக்கடி அங்கும் உலாவி நடித்து விட்டே திரும்பி இருந்தான். அங்கே அவனை யாரும் எதுக்கும் சந்தேகப்பட்டதாகத் தெரியவில்லை.

வந்ததும் றொப்பின் கையைப் பிடித்துப் பார்த்தான். நாடித்துடிப்பு இருந்தது. வாயில் தண்ணீரை விட்டதும் நா அசையத் துடித்தது. தொண்டை, கண் காயங்களுக்கு ஏதோ இலைகளை அரைத்து அப்பி இருந்தாள் பண்ணைக்காரி. சேலைனில் சில மருந்துகளையும் ஏற்றி இருந்தாள்.

உணர்வுகள் அற்றவனாகவே றொப் காணப்பட்டான். இவனால் இனி ஏதும் செய்ய முடியாது என்ற நம்பிக்கை பிறந்தது. பாங்கில் ஒரு பெரிய லொக்கரை எடுத்து இவனதும் தனதும் ரொக்கங்களை வைத்துவிடல் வேண்டும் என நினைத்தான். வைரங்கள் முழுவதும் தனக்கே சொந்தம் என்ற நினைவு அவனை எங்கெங்கோ மிதக்க வைத்தது.

தொலைவில் ஒரு வாகனத்தின் உறுமல் கேட்டது. இங்கு பிற வாகனங்கள் வருவதில்லை. மரம் ஒன்றில் ஏறி உயர நின்று அவதானித்தான். வெள்ளை நிற வான் ஒன்று பண்ணையை நோக்கி வந்து கொண்டிருந்தது. இறங்கி வந்து தனது காரை மறைவாக விட்டு விட்டு மீண்டும் மரத்தில் ஏறிக் கொண்டான். அடர்ந்த இலைகளுக்குள் மறைந்து கொண்டு நிலைமையை அவதானித்தான்.

வான் மெல்ல மெல்லப் பண்ணைக்கே வந்தது. வீட்டு முற்றத்தில் நின்றது. ஒருவன் அதிலிருந்து இறங்கினான். பண்ணைக்காரியுடன் ஏதேதோ பேசினான். வான் நிறைய இருந்த வெள்ளைப் பெட்டிகளை இறக்கி விறாந்தையில் அடுக்கினான். வான் புறப்பட்டுப் போனது.

''யாரது வந்தது?''

''யாரோ றொப்பின் சினேகிதி கொடுத்து விட்டதாம். அவனுக்குரிய பொருள்கள்'' என்றாள் அவள்.

'அடடே இவருக்கு கள்ளத் தொடர்பும் இருக்கோ? இடமும் சொல்லி வைத்திருக்கிறாரோ? ஆசாமி பொல்லாத ஆள்தான். நல்லவேளை இனி மீளமாட்டார்.'

போய்ப் பெட்டிகளை ஒவ்வொன்றாகத் திறந்தான். உள்ளே மூடியின் உட்பக்கம் 'கரோல் - டானியல்' எனப் பொறித்திருந்தது. பெட்டியின் உள்ளே ஆயிரம் ஆயிரம் வெள்ளை ரோஜா மலர்கள்.

மைக்கின் நிலைமையைச் சொல்லவா வேண்டும்? ஒரு பூவைக் கண்டு கலங்கிய கலக்கம் தெரியாதா? இவ்வளவையும் கசக்கி எறிய முடியுமா? ஒரு பூவை எடுக்க பெட்டிக்குள் கையை விட்டான். முள் ஒன்று கையைக் குற்றிவிட்டது.

வெடுக்கென்று கையை இழுத்தான். றொப்பிடம் ஓடினான். அங்கே றொப்பின் நாடித்துடிப்பு அடங்கி இருந்தது. திகைத்தான். திணறினான்.

பண்ணையிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த வேளை மைக்கிற்கு ஆறுதலாகவும் இருந்தது. இனிப் பண்ணைப் பக்கமே போகக் கூடாது. றொப்பைப் புதைத்து ஆயிற்று. யாராவது ஒருத்தியைக் கட்டிக் கொண்டு கௌரவமாக வாழ வேண்டும் என மனதும் உடம்பும் துடித்தன. இனி அலைந்து சீவியம் நடத்தக் கூடாது.

கற்பனைகள் காற்றோடு கலக்கக் கார் காற்றைக் கிழித்துக் கொண்டு பயணம் செய்தது. நகரத்துக்கு வந்தபின் அடிக்கடி ஜோர்ஜைக் கண் காணிக்காமல் இருக்க மனம் இடம் தரவில்லை.

கரோலின் அழகை ஒரு முறை அனுபவிக்க வேண் டும் என்ற ஆவல் உடம்பைச் சூடேற்றியது. அவள் அவனை நிச்சயம் அடையாளம் கண்டு விடுவாள். இணங்கியும் வர மாட்டாள். பழி வாங்குவாள் என்ற பயமும் இருந்தது. இவளைப்போல் எத்தனை அழகிகளை அனுபவிக்கலாம். இவளா வேண்டும்?... என்றாலும் அவளை ஒரு முறை....

போய்ப் பெட்டிகளை ஒவ்வொன்றாகத் திறந்தான். உள்ளே மூடியின் உட்பக்கம் 'கரோல்– டானியல்' எனப் பொறித்திருந்தது. பெட்டியின் உள்ளே ஆயிரம் ஆயிரம் வெள்ளை ரோஜா மலர்கள். மைக்கின் நிலைமையைச் சொல்லவா வேண்டும்?

அந்த இரகசிய அறைக்கு வந்தான் மைக். றொப் எனப் பெயர் பொறிக்கப்பட்ட இரண்டு இரும்பு பெட்டிகள், கை உழைத்தாலும் சரி பாதியாகப் பிரித்து ஒவ்வொன்றுக்குள்ளும் போட்டிருந்தார்கள்.

இரண்டு பெட்டிகளையும் திறந்தான். டொலர் நோட்டுகளை அளைந்தான். எடுத்துச் சீராக அடுக்கினான். சுமார் ஒன்பது லட்சம் அமெரிக்க டொலர்கள் இருந்தன. நல்லவேளை றொப் இல்லை. இருந்திருந்தால் நாலரை லட்சம்தான் தேறி இருக்கும்?

பவுண் காசுகளும் தங்க பிஸ் கட்டுகளுமாக மூன்றரைக் கிலோ தேறும். இதைவிட வைரங்கள் ஜொலித்தன. போதும், ஆயுள் முழுவதுக்கும் போதும் என நினைத்தான். ஆனால் கரோலின் சொத்துக்களோடு பார்க்கையில் இது எந்த மூலைக்கு? ஏதோ ஓசை கேட்டுக் கலங்கினான். லைட்டை நிறுத்திவிட்டு வெளியே வந்தான். வாசற் கதவுகளைப் பூட்டாமலே தான் இரும்புப் பெட்டிகளைத் திறந்து வைத்தது தெரிய வந்தது. நல்ல வேளை யாரும் கண்டிருக்க வாய்ப்பு இல்லை என உணர்ந்தான்.

(இனியும் முள் குத்தும்..)

# துவேசத்தைத் தொலைப்போம், நியாயத்தை மதிப்போம்



மடத்துடி மாரிமுத்தர்

என்னத்தைச் சொல்ல, இந்த வெறுப்பிருக்குது பாருங்கோ ! அதுதான், துவேசம் எண்டு சொல்லுறது. அது ஒரு மாதிரியான வியாதி. எல்லாரிடத்திலையும் தொத்திக் கொண்டு இறங்கமாட்டேனெண்டு அடம் பிடிக்குது. இந்தக் காலத்தில பரவி இருக்கிற நோய்களுக்குள்ள, இது ரொம்பப் பொல்லாதது.

தனிப்பட்ட முறையில எனக்கு விருப்பமில்லாததை வெறுக்கிற தென்கிறது வேறை விசயம். இந்தத்துவேசம் எண்டு சொல்லுற வெறுப்பிருக்குதே, அது எங்களோட தொடர்பில்லாத கண்காணாத சனத்தோடையும், அதுகளின்ரை வாழ்க்கையோடையும் எங்களுக்கு வெறுப்பையும் பொறாமையையுமெல்லோ ஏற்படுத்துது.

சாதித்துவேசம், இனத்துவேசம், ஊர்த்துவேசம், ஆளையாள் அறியாமலே துவேசம் கொள்ளச் செய்யிற அநியாயத்தை என்னெண்டு சொல்லுறது. அது எவருக்கும் தெரியாமலேயே ஒவ்வொருத்தருடைய மன துக்கையும் பூந்து கொண்டு அழிவுகளையும் குழப்பங்களையும் ஏற்படுத்துது.

சாதித் துவேசம், இனத் துவேசம், மதத்துவேசம் எண்டு இங்க பல துவேசங்கள் இருக்கிறதைப் பார்க்கிறியள்தானே, அதுகளை என்னெண்டு சொல்லுற தெண்டும் எனக்குத் தெரிய இல்லை. ஆனால் அந்தச் சாதிக்காரரெல்லாம் கூடாதவங்களெண்டு எண்ணிற மாதிரி ஒரு வெறுப்பை ஏத்திப் போடுறாங்கள். அது என்னெண்டுதான், ஆளை ஆள் தெரியாமலிருந்தாலும் துவேசமா வளர்ந்து ஆறாமல் கிடக்கு தெண்டும் தெரியயில்லை. சில வேளைகளிலை அது என்ன மாதிரிப் பூதமாய்ப் புயலாய்ப் புறப்பட்டு உயிரையும் உடமையளையும் சிதைச்சுப் போடுது பாத்தியளே!



ஆரெண்டும் தெரியாமல், எந்த ஊரெண்டும் தெரியாமல் அந்த இனத்தில ஏனோ வெறுப்பை வளர்த்திட்டாங்கள். இதுக்கெல்லாம் இந்தச் சுயநலம் கொண்ட பொதுநலவாதியளின்ரை கொடிய எண்ணந்தான் காரணம்.

இந்த இனத் துவேசத் தால எத்தினைசனம் செத்து மடிஞ்சுதுகள். இப்பவும் எத்தினை சனம் பயந்து பயந்து உயிரைக் கையில பிடிச்சுக் கொண்டு பயணம் பண்ணுதுகள். ஒரு கூட்டம் செய்யிற வேலையாலை ஒட்டு மொத்தமா அந்த இனத்திலையுமல்லோ வெறுப்பை, துவேசத்தை ஏற்படுத்துறாங்கள். துவேச மெண்டா என்னெண்டு தெரியாமலும் அதை ஏன் நாங்கள் எங்களுக்குள்ளை வளர்த்துக் கொண்டம் எண்டெல்லாம் தெரியாமலே அது வளர்ந்து கொண்டே போகுதெல்லோ.

இந்தத் துவேசம் தான் வெறுப்பாய், பொறாமையாய் விளைஞ்சு எங்கட சனத்தின்ர ஐக்கியத்தைக் கெடுக்குது. இதுவரைக்கும் அது எத்தினை சனத்தைப் பாதிச்சுப் போட்டுது தெரியுமே? இப்படியே துவேசத்தை வளர்த்தா இனிப் பிறந்து வளர்ந்து வாழப்போற எங்கடை எதிர்காலச் சந்ததியிட்டையும் ஐக்கியம் எண்ணிறது இந்தச் சென்மத்திலையும் வராது பாருங்கோ!

ஏன், எதுக்கு இப்படியொரு கொடுமையை வளர்த்தனீங்கள்? எண்டு கேட்டா ஒருத்தருக்குமே பதில் சொல்லத் தெரியாது. ஆனால் மற்ற இனத்திலையும் ஊரிலையும் ஒரு வெறுப்பு எப்படி உருவாக்கிறாங்கள் எண்டு தெரியயில்லை. இதைத்தான் பாருங்கோ பிரதேசவாதமெண்டும் சொல்லுகினம்.

சும்மா தேவையில்லாம வெறுப்பை ஏத்திறாங்கள் ! அறிவுகெட்ட சிலதுகள் தாங்கள் பெரிய இனப் பற்றுள்ளவையெண்டும் ஊர்ப்பற்றுள்ளவையெண்டும் காட்ட அப்பாவிகளை வெருட்டிறதும் தாக்கிறதும் கூடத் தேவையெண்டெல்லோ நினைக்குதுகள்.

இப்படியே வெறுப்பை ஏற்படுத்தி ஏற்படுத்திப் பிரிவினையை வளர்த்துச் சில சின்னத்தன முள்ளதுகள் பெரியாக்களாய் உலவித்திரியுதுகள். ஆனால், எங்கட சனம் அவையைளைப் பிடிச்சிட்டி நம் எண்டால் அவையள் எங்கைபோய் ஒளிக்கப் போகினமோ தெரியாது.

துவேசம் எண்டிறது ஒண்ணும் தெரியாத அப்பாவிகளையும் ஆர் எவரெண்டும் பாராமல் பாதிக்கிற ஒரு பயங்கரவாதம். இனம், பிரதேசம் இவைகளைச் சொல்லிச் சொல்லியே உணர்ச்சிகளைக் கிளறிப் போட்டு அதுக்குள்ளை லாபம் காணுகிறகூட்டம் இருக்குது. அதுதான் எல்லாத்துக்கும் காரணம்.

நீதி நியாயம் ஒண்டையும் பேசவிடாமல் இந்தத் துவேசம் எல்லாத்தையும் கெடுத்தெல்லோ போடுது. இந்தத் துவேசத்தை, அதுதான் இந்த அர்த்தமில்லாத வெறுப்பை விட்டுப் போட்டு நீதியை நியாயத்தைப் பேசுங்கோ. பேச்சு வார்த்தையில நியாயத்தைச் சொல்ல ஏலாதெண்ட உடனை துவேசத்தை வளர்க்கிறதோ நியாயம்?

கொஞ்சம் ஆறுதலா யோசியுங்கோ? மனிசரெல்லாம் ஒண்டுதான் இந்த மதங்களெல்லாம் ஒண்டுதான். எல்லாரும் மனிசரெண்டு ஐக்கியமாய் இருக்கிறதுக்கு அந்தத் துவேசம் தடையா இருக்கெண்டது விளங்கும். உருவமில்லாத இந்தத் துவேசத்துக்கு உருக் கொடுத்து நீதியைச் சிதைக்காம இருக்கப் பாருங்கோ!


மனிசரெல்லாரும் ஒற்றுமையா வாழ வேணும். அதுக்கு ஊறு விளைவிக்கிற துவேசத்தை விட்டுப் போட்டு நியாயத்தை மனிசர் எண்ட வகையிலை பேசுங்கோ! சந்தோசமா இருங்கோ. அதுதான் தேவை. அது மனதுக்கு அமைதியையும், திருப்தியையும் தரும். ★

## புன்னகையால் சாதிக்கலாம்


இந்த உலகில் நம்மைச் திடீரென்று கவர்பவர்கள் யார் என்று சொல்லுங்கள் பார்க்கலாம்? ஐஸ்வர்யா ராய், சினேகா போன்ற பிரபலங்களை சற்றே தள்ளி வைத்துவிட்டுப் பார்த்தால், நம்மை திடீரென்று கவர்ந்து இழுப்பவர்கள், நிச்சயமாக, சிரித்த முகத்துடன் இருப்பவர்கள் தான். புன்னகை அவ்வளவு சக்தி வாய்ந்தது. அதனால் தானோ என்னவோ, நம் முன்னோர் 'புன்னகை இருக்க, பொன் நகை எதற்கு?' என்ற பழமொழியைக் கூறியுள்ளனர். புன்னகை மூலம், எதிரிகளைக் கூட நண்பராக்கிக் கொள்ளலாம். ஒருவரின் தோற்றத்தை, செலவே இல்லாமல் வசீகரமாக மாற்றக் கூடியது அவரது புன்னகையே. நமக்குப் பிடித்த எவரையாவது பார்த்தவுடன், நம்மையும் அறியாமல் நாம் புன்முறுவல் பூக்கிறோம் அல்லவா?


அந்தச் சிரிப்பு, வெறும் உதடுகளின் அசைவு மட்டும் அல்ல. அது உறவின் வெளிப்பாடு. சிரித்த முகத்தைப் பார்க்கும் போது, எத்தனையோ பிரச்சினைகளை மீறி, ஒரு நம்பிக்கை விதை மனதில் துளிர்க்கிறது. உங்கள் சிரிப்பு, தனித்துவத்தை உயர்த்துவதோடு, உங்களை வசீகரமாகவும் காட்டும். எனவே, சிரித்த முகத்துடன் இருக்கப் பழகுங்கள். அழும் குழந்தையை விட, சிரிக்கும் குழந்தையைத் தானே நாம் அனைவரும் விரும்புகிறோம். சிடுசிடுக்கும் பெண்ணை விட, சிரித்த முகம் கொண்ட பெண் தானே விளம்பரங்களுக்கு ஏற்றவள். ஆக, சிரித்த முகமே கூடுதல் வசீகரம். பிறரை வசீகரப்படுத்தவும், எப்படிப்பட்ட ஒருவரையும் சமாளிப்பதற்கும், அவசியமான ஒன்று உங்கள் புன்னகை என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே, வீடாக இருந்தாலும் சரி, பணியாற்றும் இடமாக இருந்தாலும் சரி, எப்போதும் புன்னகை பூத்திடுங்கள். பணியிடத்தில் புன்னகையையும், ஆதரவான பார்வையையும் தவழ விடுங்கள். இது செயற்கையான விஷயமாகத் தோன்றலாம். ஆனால், கடுமையான அலுவலகச் சூழலை சரி செய்யும் கருவியாக, உங்கள் புன்னகை செயற்படும். சிடுசிடுக்கும் உயரதிகாரியையோ அல்லது சுமுகமாக இல்லாத கணவனையோ பார்த்து உங்களுக்கு புன்னகை வராவிட்டாலும், செயற்கையாக நீங்களாகவே புன்னகையை வரவழையுங்கள். உடனடியாக இல்லாவிட்டாலும், காலப் போக்கில் உங்கள் புன்னகை அவர்களிடம் மாற்றத்தை ஏற்படுத்தி, அவர்கள் உங்களை நடத்தும் விதம் மாறலாம்.

உங்களின் இந்தப் புன்னகை, நீங்கள் மற்றவருடன் கொள்ளும் உறவை, வலுப்படுத்துவதற்கான மிகச் சிறந்த ஆயுதம் என்றாலும், உங்கள் புன்னகையை தேவையற்ற இடங்களிலோ அல்லது தேவையற்ற நபரிடமோ காட்டினால், நீங்கள் தேவையில்லாத பிரச்சினையைச் சந்திக்க நேரிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். குறிப்பாக, நக்கல் பேச்சுப் பேசும் சக ஊழியர்களிடமோ, பெண்களிடம் தவறாக நடக்கும் ஆள்களிடமோ புன்னகையை நீங்கள் தொடர்வீர்களானால், விளைவு வேறு மாதிரியாக இருக்கும் என்பதை மறக்கவேண்டாம். அப்படி மறந்தால், அனாவசியமாக சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். தேவையான இடங்களில், உங்கள் புன்னகையை தவழவிட்டு, வாழ்க்கையில் வெற்றி பெறுங்கள். ★



# கவிதைப்புனல்





## ஊடுருவல்

சீர்மையுறும் மீன்பாடும் தேன்நாட்டின்
சேற்றினிலே முளைத்ததோர் அரசங்கன்று
ஊரவர்கள் ஒன்றுமே செய்யாததனால்
உயரமாய் வளர்ந்தது அந்தக்கன்று

மாதங்கள் பலசென்று வருடமாக
மரமாகி விட்ட அதன் நிழலை நாடிப்
பாதையிலே செல்பவர்கள் வந்து நிற்பர்-
பகல்வேளை இரப்போரும் படுத்திப்பர்
வீதியிலே வலம் வரும் காவல்துறையின்
விழிகளிலே பட்டத்திவ் வரசங்கன்று
காத தூரம் நடந்தகளை யாறவென்று
கல்லொன்றை யதனருகே வைத்துவிட்டார்

கருவுற்ற தாய் வயிற்றுச் சிசுவைப் போல்
கட்டங்கள் பல கடந்து காலப் போக்கில்
உருமாற்றம் பெற்றதது உருவச்சிலையாக
இரவிலே மெழுகுதிரி விளங்க
பருவக்குமர் பெண்டிருடன் பலரும் வந்து
பக்குவமாய் மலர் வைத்து மண்டியிட்டு
குருமார்கள் ''பிரித்' தோதக் குனிந்த வண்ணம்
காவல்துறையினரும் கைகூப்பி நிற்பர்

சுற்றிவரச் செங்கல்லாற் சுவரமைத்துச்
சோதி பகவானைச் சேபிக்குமிடமாய்க்
கற்றோரும் மற்றோரும் கபோதிகளாகக்
கச்சிதமாய் ஊடுருவி நகரின் நடுவே
பெற்றதொரு தனியிடத்தைப் பேரினவாத
புத்தமதக் கலாசாரம்; இதனையிட்டு
உற்றுழித் தீர்கின்ற அரசியலாகும்
ஒன்றுமே பேசாது ஊமையானார்

போயா தினங்களிலே மணியினோசை
பேரிரைச் சல்களுடன் பாராயணங்கள்
மேயாத மான்களும் விசாகத்திருநாள்
வேடிக்கை பார்த்திட வந்து நிற்கும்
தாயா பெண்களும் 'பொசன்' தினத்தில்
தம்பிள்ளை சகிதமாய்க் கூடிநிற்பர்
நாயாக அலையும் பல வம்பர் கூட்டம்
நகரத்திற் கெழிலூட்டும் நாகரீகங்கள்.

- அல்.கையிஸ்,
ஏறாவூர்.

## ஏக்கம்

என்னைச் சுற்றி
ஏழெட்டு
சொறி நாய்கள்.
உரோமங்கள் கொட்டி
குட்டை விழுந்து
பார்ப்பதற்கே
அசிங்கமாய்.
சீச்...சீ
என்ன ஜென்மங்கள்
ஏதேதோ திட்டித் தீர்த்தேன்.
யாரினதும்
அனுமதியின்றி அதிலொன்று
முட்கம்பி கடந்து
வெளியே போகும் போது.
என் மனம்
ஏங்கித் தவித்தது.
இந்த நாயாக
நான்
பிறந்திருக்கக் கூடாதா...
- சி.சங்கர்.

## மரத்த மனம்

விறைத்துப் போன
உணர்வுகளையும்
சபிக்கப்பட்ட மௌனத்தின்
உறுப்புகளையும்
தேடி அலையும் என் விரல்கள்
விடியலின் நிறங்களும்
கரைந்து போக
கனத்த மாலைகளும் புழுதியான
தென்றலும்
என் உடலுக்காக காத்திருக்கும்

உடைந்த நீர்க்குடத்தில்
முளைத்த பூச்செடியைப்
பார்ப்பதற்கு
ஏங்கும் கண்களை நோக்கி
கட்டெறும்புகள்
படையெடுக்கும்
ஆறடி குழியுள் விழுவதற்கு
முன்பும்
மரத்த மனதுடன்
சாவைத் தொலைத்துவிட்டு
சபிக்கப்பட்ட பிறவியாக
நான் உன்னுடன்.
- நிஷங்கன்.



## நீளும் பயணம்

இரவின் நிழலாய்
நீள்கிறது விழிப்பு.
கதவுகளற்ற
ஜன்னல் கம்பிகளினூடே
ஒளிரும் விழிகளுடன்
கரும் பூனை ஒன்று
பாய்ந்து மறைகிறது.
கண்களை மூடுகையில்
இனம்காணமுடியா
சின்னதும் பெரியதுமாய்
மீன்குஞ்சுகள்
நீந்திப்பரவுகின்றன.
குருவி ஒன்றின்
கீத ஒலி
இறங்குகிறது உடலுள்.
உணர்வுகள் தோறும்
மெதுமெதுவாய்
பூக்கள் முகையவிழும் ஓசை
எரிவுடன்
விழிவழியே
திரள்கிறது கண்ணீர்.
போர்வையை
ஒருக்களித்து எழும்புகையில்
வானத்தில் விடிவெள்ளி.
சூரியன் தனது பயணத்திற்காய்
மீண்டும்.
- நளாயினி.

## ஆணிகளிலான இரவு

கால்களில் இரும்புக் குண்டுகள்
அசையாதவாறு
கட்டப்பட்டிருக்கின்றன
எழமுயற்சித்தும்
களைத்து மீண்டும் விழுகிறேன்

தலையை யாரோ
வருடுகிறார்கள்
கால்களை யாரோ
உருவி விடுகிறார்கள்
எனது உடல் முழுவதும்
தண்ணீரால் யாரோ
ஒற்றியெடுக்கிறார்கள்
நான் காற்றாகிக் கொண்டிருந்தேன்

நான் பாரத்தில் நசிகிறேன்
எனது தலை
எல்லாப் பக்கங்களிலும்
திரும்புகிறது
பின்
நிமிரமுடியாதவாறு களைத்துத்
துவள்கிறது
கை கால்கள் எல்லாவற்றிலும்
ஆணிகள்
முட்படுக்கையில் நான்


நோய் என்னைச் சிலுவையில்
அறைந்திருந்தது
சிலுவையின் ஆணிகளை அவர்கள்
ஒவ்வொன்றாய்
எடுத்துக் கொண்டிருந்தனர்

நான் ஒரு பள்ளத்தாக்கில் இருந்து
உங்கள் எல்லோரின்
வார்த்தைகளையும் கேட்கிறேன்

எடுக்கப்பட்ட ஆணிகளில் இருந்த
இரத்தத்தினால்
நான் எனது கதையை எழுதப்
போகிறேன்

கொஞ்சம் பொறுத்திருங்கள்
ஆணிகளை உங்களிலும்
அறையப் போகிறேன்.

- அஜந்தகுமார்.



சினிமா

கடந்த சில நாட்களுக்கு முன்பு நடிகை ஷில்பா ஷெட்டி கர்ப்பமாக இருப்பதாக மீடியாக்களில் செய்திகள் பரவின. இதனால் ஷில்பாவின் சினிமா நண்பர்கள் ஏராளமானோர் அவருக்கு போன் செய்து வாழ்த்துச் சொன்னார்களாம். அதன்பிறகுதான் இப்படியொரு செய்தி தனக்குத் தெரியாமலேயே பரவியிருக்கும் செய்தி அவருக்கு தெரிய வந்திருக்கிறது.

இதனால் தனது டுவிட்டரில் தற்போது அதற்கு மறுப்பு செய்தி கொடுத்துள்ளார் ஷில்பா ஷெட்டி. செய்திகள் வெளியானது போல் நான் கர்ப்பமடையவில்லை. எப்படி இப்படியொரு செய்தி வெளியானது என்றே எனக்கு தெரியவில்லை. அதனால் இந்த வதந்தியை எனது அபிமானிகள் யாரும் நம்ப வேண்டாம். மேலும் மீடியாக்கள் இதுபோன்று வதந்தி பரப்புவதால் பிரபலங்களான என்போன்றோருக்கு நிம்மதி கெடுகிறது என்றும் தனது மனவேதனையைத் தெரிவித்திருக்கிறார் ஷில்பாஷெட்டி.

மேலும், நிஜமாகவே நான் கர்ப்பமானால் அந்தச் சந்தோசமான செய்தியை அனைவருக்கும் நானே தெரிவிப்பேன் என்றும் தெரிவித்திருக்கிறார் ஷில்பா.



# என்ன கொடுமை சார் இது
## நான் கர்ப்பமாக இல்லை!



காஜல் அகர்வால்

நீச்சல் உடை மட்டும் த
இல்லை, மாடர்ன் டிரசில் ச
இருக்கு, நான் கண்டிப்ப
உடையில் நடிக்க மாட்டே
கூறுகிறார் காஜல் அகர்வால்.

தமிழில் பழனி, மோதி விளை
மகான் அல்ல உள்ளிட்ட
நடித்தவர் நடிகை காஜல் அகா
தவிர தெலுங்கிலும் முன்னணி
இருக்கிறார். சமீபத்தில் தெலு
ஒன்றில் காஜல் அகர்வால்

இந்தி சினிமாவில் நடித்து வரும் அசினுக்கும், சல்மான்கானுக் குமிடையே காதல் உருவாகியிருப்பதாகவும், அவர்கள் விரைவில் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்திருப்பதாகவும் செய்திகள் வந்தவண்ணம் உள்ளன. ஆனால் சம்பந்தப்பட்ட அசின் இதற்கு மறுப்புச் சொல்கிறார். இதுபற்றி அவர் கூறுகையில்,

சல்மான்கான், அமீர்கான் போன்ற நடிகர்களுடன் நடித்திருக்கிறேன். அந்த வகையில் அவர்களுடன் நட்பு இருக்கும். ஆனால் அதையே காரணம் காட்டி நான் அவர்களைக் காதலிப்பதாக சொல்வது எந்த வகையில் நியாயம். மேலும் சல்மான்கான் வயதில் பாதிதான் எனக்கு. அப்படி இருக்கையில் எப்படி இது சாத்தியமாகும் என்று கவலைப்படுகிறார் அசின்.

மேலும், நான் திருமணம் செய்து கொள்ள இன்னும் காலம் இருக்கிறது. அப்போது கண்டிப்பாக தென் இந்தியாவைச் சேர்ந்த ஒருவரைத்தான் திருமணம் செய்து கொள்வேன் என்றும் வதந்திகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கூறுகிறார் அசின்.



# தென் இந்தியரைத் தான் திருமணம் செய்வேன்



சட

சிறுத்தை
சங்கர் தயாள் எ

இப்படத்தின்
இந்நிலையில் ரே
செய்திகள் வெளி
சகுனி படத்திற்
என்று கூறியுள்ள

அதுமட்டும
சந்தித்து இருக்
தனுஷ் எனக்
துள்ளார்.

தற்போ
நடித்து வ

# தாவூத்இப்ராகிம் காதலி வேடத்தில் இலியானா?



மும்பை தொடர் குண்டு வெடிப்புச் சதி செயலில் ஈடுபட்ட தாவூத் இப்ராகிம் வாழ்க்கை வரலாறு இந்தியில் படமாகிறது. இதில் தாவூத் இப்ராகிம் காதலியான மந்தாகினி வேடத்தில் இலியானா நடிக்கப் போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இவர் தற்போது ஷங்கர் இயக்கும் நண்பன் தமிழ் படத்தில் நடித்து வருகிறார். இலியானா அளித்த பேட்டி வருமாறு

தாவூத் இப்ராகிம் வாழ்க்கை வரலாறு படமாவதாகவும் அவரது காதலி வேடத்தில் நான் நடிப்பதாகவும் செய்திகள் வந்துள்ளன. இந்த மாதிரி செய்திகள் எப்படி வருகின்றன என்று புரியவில்லை. இந்திப்படம் ஒன்றில் நடிக்கிறேன். அதன் கதை என்ன, எனது கேரக்டர் எப்படிபட்டது என்பதை எல்லாம் இப்போது சொல்ல முடியாது. நான் நடித்த சில தெலுங்குப் படங்கள் தொடர்ச்சியாக தோற்று விட்டன.

அதற்கான காரணத்தை என்னால் கண்டு பிடிக்க முடியவில்லை. ஒவ்வொரு படத்திலும் கஷ்டப்பட்டுதான் நடிக்கிறேன். சமீபத்தில் எனக்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டது. காய்ச்சலால் அவதிப்பட்டேன். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று திரும்பியுள்ளேன். ஷங்கர் இயக்கும் நண்பன் படப்பிடிப்பு அந்தமானில் நடந்தது. அங்கு நீண்ட தூரம் படகில் பயணம் செய்தோம். அது என் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாததால் காய்ச்சல் வந்தது.

இவ்வாறு இலியானா கூறினார்.



# நீச்சல் உடையா

## வேண்டவே வேண்டாம்...

நீச்சல் உடையணிந்து நடிப்பதாக தகவல் பரவி வருகிறது. ஆனால் இதனை காஜல் அகர்வால் மறுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, நீச்சல் உடையில் நடிப்பதால் தான் கவர்ச்சி என்று கூறினால் அதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. கவர்ச்சி என்பது நீச்சல் உடையில் மட்டுமல்ல, மாடர்ன் டிரெசில் கூட கவர்ச்சி இருக்கிறது. என்னை நீச்சல் உடையில் நடிக்க வற்புறுத்தினால் கண்டிப்பாக நான் நடிக்க மாட்டேன். தற்போது நான் தெலுங்கு மற்றும் இந்தி படங்களில் நடித்து வருகிறேன். தொடர்ந்து என்னைப்பற்றி நிறைய வதந்திகள் வந்து கொண்டு இருக்கின்றன. அவற்றில் எதுவும் உண்மையில்லை. விரைவில் நிரந்தரமாக ஐதராபாத்திலேயே தங்க வீடு பார்த்து வருகிறேன் என்று கூறினார்.



ட மட்டும் தான் கவர்ச்சி
ன் டிரசில் கூட கவர்ச்சி
கண்டிப்பாக நீச்சல்
க்க மாட்டேன் என்று
அகர்வால்.

, மோதி விளையாடு, நான்
உள்ளிட்ட படங்களில்
காஜல் அகர்வால். தமிழ்
ும் முன்னணி நடிகையாக
பத்தில் தெலுங்கு படம்
அகர்வால் கவர்ச்சியாக,

# சகுனியில் ஸ்ரேயா இல்லை!

சிறுத்தை படத்தை அடுத்து கார்த்தி நடித்து வரும் படம் சகுனி. இப்படத்தை
கர் தயாள் என்ற புதுமுக இயக்குனர் இயக்கி வருகிறார்.

இப்படத்தின் நாயகிகள் யார் என்பது இதுவரை முடிவு செய்யப்படவில்லை.
நிலையில் நேற்று கார்த்திக்கு ஜோடியாக ஸ்ரேயா ஒப்பந்தம் ஆகி இருப்பதாக
திகள் வெளியாகின. ஆனால் எனக்கு கார்த்தியுடன் நடிக்க ஆசை தான். ஆனால்
ி படத்திற்காக என்னையும் இதுவரை யாரும் தொடர்பு கொள்ளவில்லை
று கூறியுள்ளார் ஸ்ரேயா.

அதுமட்டுமல்லாது தனது டிவிட்டர் இணையத்தில் அஜீத், சிம்பு ஆகியோரை
ந்தித்து இருக்கிறேன். ஆனால் அவர்களுடன் இன்னும் இணைந்து நடிக்கவில்லை.
னுஷ் எனக்கு நெருங்கிய நண்பர். நான் தீவிரமான விஜய் ரசிகை என்று தெரிவித்
துள்ளார்.

தற்போது ஸ்ரேயா ஜீவாவிற்கு ஜோடியாக ரௌத்திரம் படத்தில் மட்டும் நடித்து வருகிறார்.

# திரிஷாவின் மார்பகத்தை வைத்து தெலுங்கில் எடுக்கப்படும் கவர்ச்சிக் குளியல்



தெலுங்குப் பட இயக்குனர், ஸ்ரீனு வைட்லா தற்போது திரிஷாவை நமோ நாராயணா படத்துக்காக இயக்கினார். இதில் திரிஷாவின் மார்பகத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் திரிஷா ரசி கர்களுக்கு நமோ நாராயணா படம் மாபெரும் விருந்தாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப்படத்தில் வரும் பாடல் காட்சிகளில் திரிஷா கவர்ச்சியாக நடித்துள்ளார். இப்பாடல் காட்சிகளில் மிகவும் சிறிய மேலாடையினை திரிஷா பயன்படுத்தியுள்ளார். குசும்பு ரசிகர்களுக்கு சும்மா கும்முன்னு இருக்கும், தனது மார்பில் உள்ள டாட்டூவை (பச்சை குத்தல்) வெளிகாட்டவே சிறிய மேலாடையினைப் பயன்படுத்தியதாக தெரிகிறது.

இந்தப் படம் திரிஷா ரசிகர்களுக்கு விருந்தாக அமையும். படம் வெளிவருவதற்காக காத்திருக்கின்றனர்.

திரை விமர்சனம்



# கண்டேன்

தன் பேரன் சாந்தனுவுக்கு திருமணம் செய்து வைக்க. ஆசைப்படுகிறார் தாத்தா விஜய குமார். இதற்காக சென்னையில் இருக்கும் சாந்தனுவை வரவழைத்து. உள்ளூர் பெண் ஒருத்தியை திருமணம் செய்து வைக்க ஏற்பாடு செய்கிறார். தாத்தாவின் இந்த திடீர் ஏற்பாட்டிலிருந்து தப்பிக்க. சென்னையில் ஒரு பெண்ணைக் காதலிப்பதாகப் பொய் சொல்கிறார் சாந்தனு. அப்படியானால் அவளை ஒரு மாதத்துக்குள் அழைத்து வரவேண்டும் என்று தாத்தா கெடு விதிக்கிறார். இதனால் அவசர அவசரமாகத் தனக்கு பிடித்த அழகான பெண்ணைத் தேடுகிறார் சாந்தனு. அவர் எதிர்பார்க்கும் அனைத்து அம்சங்களுடனும் ரேஷ்மி அமைகிறார்.


பார்வையற்றவர்கள் மீது அதீத அன்பு உடையவராக ரேஷ்மி இருப்பதால் தானும் ஒரு பார்வையற்ற இளைஞனாக நடித்து ரேஷ்மி மனதில் இடம் பிடிக்கிறார். ஆனால் ரேஷ்மியின் தந்தை ஆஷிஷ் வித்யார்த்தி, பார்வையற்ற ஒருவரை மருமகனாக ஏற்க முடியாது என்கிறார். இதனால் ரேஷ்மி. சாந்தனுவை பதிவு திருமணம் செய்யப்போன இடத்தில் சாந்தனு குட்டு வெளிப்படுகிறது. அவரை வெறுக்கிறார். அதன் பிறகும் சாந்தனு. ரேஷ்மியை மன்னிப்புக்காக துரத்த. ஒரு கட்டத்தில் மனம் மாஷீ ரேஷ்மி. சாந்தனு காதலை ஏற்றுக் கொள்கிறார். திருமண ஏற்பாடுகள் நடக்கிறது. இந்த நிலையில் நடக்கிறது ஷாக் ஆன அந்த விபத்து. அதன் பிறகு என்ன என்பது மீதிக் கதை.

சாந்தனு நடிப்பில் பக்குவமும், மெருகும் கூடியிருக்கிறது. சந்தானத்துடனான நகைச்சுவையும் கைகூடி வந்திருக்கிறது. ரேஷ்மி மனதில் இடம்பிடிக்க. பார்வையற்றவராக நடிப்பதும். மாட்டிக் கொள்ளும்போது சாமர்த்தியமாய் தப்பிப்பதுமாக சந்தானத்துடன் அவர் அடிக்கிற லூட்டிகள் கலகல களம். பார்வையற்றவராக நடிக்கும் காலத்தில் மோட்டர் சைக்கிள் ஓட்டி ஒரே நேரத்தில் போலீசிடமும், ரேஷ்மியிடமும் மாட்டிக்கொண்டு அதிலிருந்து தப்பிக்க அடிக்கும் அந்தர்பல்டிகள் தொடரான நகைச்சுவை. புதுமுகம் ரேஷ்மி தோற்றத்திலும். நடிப்பிலும் ஸ்கோர் பண்ணுகிறார். ஒவ்வொரு நிமிஷமும் அவனை நான் காதலிச்சேன். ஆனா ஒவ்வொரு நிமிஷமும் அவன் என்னை ஏமாற்றியிருக்கான் என்று அப்பாவிடம் கதறும் காட்சியில் கலங்க வைக்கிறார். கண்டிப்பான போலீஸ் அதிகாரி, அன்பான அப்பா கேரக்டரில் ஆஷிஷ் வித்யார்த்தி கவர்கிறார். ஆலமரமும். செம்பும் மட்டும்தான் இல்லை. மற்றபடி அதே நாட்டாமைவிஜயகுமார்தான். எண்ட்ரா அவன் என் பேரனாக்கும். அவனைப் பத்தி தப்பா பேசுன. உன்ற தலைய சீவிடுவேனாக்கும் என்று தியேட்டர் வெடிக்க கத்தி வெறுப்பேற்றுகிறார். ஒளிப்பதிவாளரும். இசை அமைப்பாளரும் படத்துக்குத் தேவையான அளவுக்கு பணியாற்றி யிருக்கிறார்கள்.

கலகலப்பான காதல் கதையைத் தர முயற்சித்திருக்கும் இயக்குனர். அதை நகைச்சுவையாகக் கொண்டு செல்வதா. சீரியசாகக் கொண்டு செல்வதா என்பதில் தடுமாறியிருக்கிறார். பார்வையற்றவனாக தன்னை ஏமாற்றிய சாந்தனுவை. பின்னர் ரேஷ்மி ஏற்றுக் கொள்வதற்கு வலுவான காரணம் இல்லை. தனக்குப் பார்வை போனதை ஏதோ கையில் நகச் சுத்து வந்ததுபோல சாந்தனு இயல்பாக எடுத்துக் கொள்வது ஆச்சர்யமாக இருக்கிறது. பேரன் கண்பார்வை இழந்தது தாத்தா விஜயகுமாருக்கு தெரியாமல் போவதிலும். அரண்மனை மாதிரியான வீட்டில் அவர் மட்டுமேவாழ்வதிலும்... லாஜிக் மிஸ்ஸிங். இருந்தாலும். கலகலப்புக்கு குறைவில்லை.








# ஏர்ப்பு

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, ''சரி இஞ்சை தான் இனிமேல் நானும் நீயும் இருக்கிறது'' எண்டார் அப்பா. அவற்றை அந்த வார்த்தையிலே ஒரு உறுதி தெரிஞ்சுது . நான் அப்பாட்டை என்னண்டப்பா திடீரெண்டு இப்பிடி முடிவு செய்தியள்? எண்டு கேட்டன். ''நீ தானையா எனக்கு எல்லாம். உன்ரை விருப்பம் தான் என்ரை விருப்பம்,'' எண்டு சிரிச்சார். அப்பா சிரிச்சது நல்ல வடிவா இருந்தது.

சித்தியைப் பார்க்க எனக்கு கோபம் கோபமாய் வந்துது. ஏனென்டால் ''நீ சின்னப் பிள்ளையடா; உனக்கு ஒன்றும் தெரியாது. நீ வளர்ந்தாப்பிறகு பழைய கதைகளை எல்லாம் சொல்லுறன். இப்ப சாப்பிடடா எண்டு சொல்லிப் போட்டா. ''நீங்கள் தானே சித்தி அப்பா என்னைப் பார்க்க இண்டைக்கு வருவார் என்று சொன்னீங்கள். இன்னமும் காணேல்ல? பொய்யோ சொன்னீங்கள்?'' எண்டு. பெலத்துக் கத்திப்போட்டன். கத்தினாப் பிறகுதான் யோசிச்சன், எண்டாலும் அப்பிடிக் கத்தியிருக்கக் கூடாதெண்டு. இனி என்ன செய்யிறது? சித்தி அங்காலை போகும் போது ''முளைச்சு மூண்டு இலை விட இல்லை, கோபத்தைப் பார் கோபத்தை . நான் பெத்தபிள்ளையாய் இருந்தால் இப்படி இருக்குமோ? எல்லாம் என்ர பிழைதான்'' எண்டு சொல்லிக் கேட்டுது. பிறகு திரும்ப அவ எனக்குக் கிட்ட வந்து ''நீ சாப்பிட்டா என்ன, சாப்பிடாட்டி என்ன'' எண்டு சொல்லிப் போட்டுப் போனா, நான் ஒண்டும் கதைக்காமல் சித்தியைப் பாத்தன் . ''உதுக்கு மட்டும் குறைச்சலில்லை . தாயின்ரை அதே பார்வை'' எண்டு ஒண்டும் செய்யாத என்ரை அம்மாவைப்பற்றியும் குத்திக் காட்டிக் குறை சொல்லிக் கத்திப் போட்டுப் போனா.

அதுக்குப் பிறகு நான் அவவோடை கதைக்க இல்லை.கொஞ்சத்தாலை வந்து''டேய் அருண், நாளைக்கு உன்ர அப்பா வருவார் தானே . அவரிட்ட உன்ரை பிடிவாதத்தைக் காட்டு '' எண்டுிட்டுப் போனா. எனக்கெண்டா ஒண்டுமே விளங்கேல்ல. இண்டைக்குத் தானே அப்பா வாறதெண்டவர். பிறகேன் நாளைக்கெண்டு சித்தி சொல்லுறா? எண்டு யோசிச்சன். விடை தெரியவில்லை . என்ரை அம்மாவெண்டால் இப்படியே?. அவ எவ்வளவு நல்லவ. அவ சித்தியைப் போல வாய்க்காறி இல்லை. இப்பிடியெல்லாம் நான் சித்திக்குச் சொல்லிறேல்ல. சொன்னாக் கோபம் வந்திடும் சித்திக்கு. பிறகு அவ என்னைப் பற்றி என்ர அப்பாட்டை ஏதேனும் ஏடா கூடாமாச் சொன்னாலும் சொல்லிப் போடுவா எண்ட பயம் எனக்கு .

அப்பா நல்லவர் எண்டுதான் நான் குழந் தைப் பிள்ளையா இருக்கேக்கை அம்மா சொன்னதாய் ஞாபகம். ஆனா அவரை நான் நேரிலே பார்த்ததில்லை. போட்டோவிலை தான் பாக்கிறனான். ஒரு நாள் அம்மா ஒரு போட்டோ காட்டினா. அதில நான், அம்மா, அப்பா மூண்டு பேரும் நல்லா சிரிச்சுக்கொண்டு இருந்தம். நான் அந்தப் படம் எப்ப எடுத்தது எண்டு கேக்க அம்மா சிரிச்சா . பிறகுதான் ஒருநாள் சொன்னா. அது போட்டோவை வெட்டிப் பொருத்தினதாம். எனக்கொரு மாதிரி இருந்துது. எங்கட குடும்பப் போட்டோவைக் கூட அப்பிடிப் பொருத்தியோ எடுக்க வேணுமெண்டு. ஒருநாள் அம்மாட்டைச் சொன்னனான், அப்பா வந்தவுடனை நாங்கள் மூண்டு பேரும் உடனே ஒரு குடும்பப் படம் எடுக்கவேணுமெண்டு . அதுக்கிடையில அம்மாவும் வருத்தம் வந்து சாமியிட்ட போட்டா. எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போச்சு. எல்லாத்தையும் யோசிக்க தலையுக்கை இடிச்சுது. பேசாமல் போய் படுத்திட்டன். எனக்கு யார் பக்கத்திலை இருந்து தூங்க வைக்க இருக்கினம்? சித்தியும் தன்ரை வேலை. நான் தனிய நித்திரையாயிட்டன். வேற என்ன செய்யிறது?

ஒரு மாதிரி அடுத்தநாள் விடிஞ்சுது. அப்பாவும் வந்திட்டார். போட்டோவிலை பார்த்ததாலைதான் எனக்கு அப்பாவை ஞாபகம். நான் ஓடிப்போய் அப்பாவைக் கட்டிப்பிடிச்சன். அப்பவே ''எட்டு வயசுப் பிள்ளையை விட்டுட்டுப் போவானே?கூட்டிக் கொண்டுதான் போவான்'' . என்று எங்கேயோ யாரோ இரகசியம் கதைச்சதை நினைச்சுக் கவலைப்பட்டன். ஆனா எனக்கு வெளிநாட்டுக்கெல்லாம் போக விருப்பமில்லை. என்ரை ஊரிலை இருந்து எங்கட தமிழிலை கதைக்க வேணும் எண்டுதான் எனக்கு ஆசை. ஆருக்கேன் இப்படிச் சொன்ன னெண்டால் காணும், விழுந்து விழுந்து சிரிப்பினம். சிலர் இப்ப இப்படித்தான் சொல்லுவான். வளர்ந்தவுடனை தகப்பனோடை போயிடுவான்'' எண்டு தத்துவமெல்லாம் பேசுவினம். ஏன் நான் சின்னப் பையனெண்டா எனக்கெண்டு சில விருப்பங்கள் இருக்ககூடாதோ? படிக்கிறதெண்டாலும் விளையாடுறதெண்டாலும் எனக்கு என்ரை ஊர்தான் வேணும்.

திடீரெண்டு ''அருண்'' என்று அப்பா கூப்பிட நான் திடுக்கிட்டு நிமிர்ந்தன். ''என்ன ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?'' எண்டார். நான் ஒண்டுமில்லை எண்டு சொல்லிப் போட்டன். கொஞ்ச நேரம் எல்லாரோடையும் இருந்து கதைச்சுக் கொண்டிருந்தார். அடுத்தடுத்த நாளுகளிலை அப்பா தான் போன ஒவ்வொரு இடத்துக்கும் என்னையும் கூட்டிக்கொண்டு போனவர் . அப்பிடித்தான் ஊரிலே இருந்த எல்லா இடங்களுக்கும் ஒரு மாதிரிப் போட்டு வந்திட்டம். அண்டைக்கு ஒரு பூந்தோட்டத்துக்கு அப்பா என்னைக் கூட்டிக்கொண்டு போனார். நல்ல வடி வான ரோசாப்பூ,செவ்வந்திப்பூ எல்லாம் பூத்திருந்தது. அதைவிட அதுக்குள்ளாலை அஞ்சு,ஆறு வாத்துகள் நடந்து போச்சுதுகள். அதுகள் மெல்லமா ஆடி அசைஞ்சு போறதைப்பார்க்க எனக்கு ஆசையாக் கிடந்துது.''அப்பா வாத்துக்கள் நடக்கிறது நல்ல வடிவாய் இருக்குதெல்லோ?'' எண்டு அப்பாவிட் டைச் சொல்லிப்போட்டன். அவ்வளவுதான். கொஞ்ச நேரம் அப்பா ஒண்டும் பேசாமல் இருந்திட்டு பிறகு என்னைத் தூக்கிக் கொஞ்சினார்.எனக்கெண்டால் ஒண்டும் விளங்கேல்ல. என்ர முகத்திலை ஏதோ ஈரப் பிசுபிசுப்பு. அப்பாவைப் பார்த்தன். அவற்றை கண்ணாலே கண்ணீர் வடிஞ்சுது.எனக்கு விளங்கியிட்டுது, அப்பா அழுகிறார் எண்டு.ஆனால் ஏன் அழுகிறார் எண்டுதான் விளங்கேல்லை.

நானும் கொஞ்ச நேரம் பேசாம இருந்திட்டு 'அ...ப்..பா' எண்டு மெல்லமாய்க் கூப்பிட்டன். ''அருண் நீ முந்தி சின்னக்குழந்தையாய் இருந்த போது மெல்ல மெல்ல நடக்கேக்கை ஒரு வாத்துப் போல நடக்கிறாயெண்டு உன்ரை அம்மா பவிதா சொல்லிச் சொல்லிச் சந்தோசப்பட்டவ. கடைசியாக அவ இப்ப ....என்று கூறித் தடுமாறினார். அவற்றை கண்கள் கலங்கின.

பிறகு நான் அப்பாவிட்டை''அதுக்கு இனி என்னப்பா செய்யிறது?. நீங்கள் இனி எப்ப வெளிநாட்டுக்கு போவீங்கள்?'' எண்டு கேட்டன்.எனக்கு அழுகை அழுகையா வந்துது.அப்பாவையும் பிரிஞ்சு தனியனாய் வளர வேண்டி இருக்கிறதே எண்டுதான். இனி உன்னையும் கூட்டிக்கொண்டுதானப்பன் நான் போவன் எண்டு அப்பா சொல்ல நான் திடுக்கிட்டுப்போனன்.பிறகு நான் அவரிட்டை ''ஏனப்பா அங்கை போக வேணும்?, உங்களுக்கு உங்கடை ஊரிலை இருக்க விருப்பமில்லையோ? நீங்கள், நான், அம்மா எல்லோருக்கும் இதுதானே சொந்த இடம். இங்கேயே என்னோடை இருந்திடுங்கோ'' எண்டு சொன்னன். அப்பா என்னைப் பார்த்தார். ஒரு எட்டு வயசுப் பிள்ளை இப்பிடியெல்லாம் கதைக்குமோ எண்டு யோசிக்கிறதைப் போலக் கிடந்துது. இருந்தாலும் என்ரை ஏக்கத்தை அவராலை புரிஞ்சு கொள்ள முடிகிறது எண்டு அவற்றை தடுமாற்றத்திலை இருந்து புரிஞ்சு கொண்டன்.

கொஞ்ச நேரத்துக்குப் பிறகு, ''சரி இஞ்சை தான் இனிமேல் நானும் நீயும் இருக்கிறது'' எண்டார் அப்பா. அவற்றை அந்த வார்த்தையிலே ஒரு உறுதி தெரிஞ்சுது . நான் அப்பாட்டை என்னண்டப்பா திடீரெண்டு இப்பிடி முடிவு செய்தியள்? எண்டு கேட்டேன். ''நீ தானையா எனக்கு எல்லாம். உன்ரை விருப்பம் தான் என்ரை விருப்பம்,'' எண்டு சிரிச்சார். அப்பா சிரிச்சது நல்ல வடிவா இருந்தது. என்னையும் அப்பா ஒரு ஆளா மதிச்சதை நினைக்க எனக்கும் சந்தோஷமா இருந்துது. இப்பதான் விளங்கிச்சுது, அம்மா சொன்னது எவ்வளவு உண்மை. ஓ... என்ரை அப்பா என்னை நல்லாய் வளர்த்துப் படிப்பிச்சு ஆளாக்கி வைப்பார், எண்ட நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிட்டுது. இந்தப் பாசமும் பற்றும் உள்ள நல்ல அப்பாவையும் என்னையும் பிரிச்சு அம்மாவைத் தன்னோடை அழைச்சுக் கொண்ட சாமி மேலை ஒரு பக்கம் எனக்குக் கோபமும் வந்துது. அதேசமயம் என்ன இருந்தாலும் இப்படி ஒரு நல்ல அப்பாவை எனக்குத் தந்த அந்தச் சாமி மேலை என்னையறியாமலே எனக்கு ஒரு நன்றி உணர்வும் ஏற்பட்டது.★

செல்வி.நிரஞ்சனி சபாரத்தினம்,சங்கத்தானை

# அழகுக்கு அழகு...!



நல்ல உணவு, அமைதியான மனம், மலர்ந்த முகம் இந்த மூன்றுமே உலகின் தலைசிறந்த டாக்டர்கள். இந்த மூன்றும் நன்றாக இருந்தால் தோற்றத்தில் அழகு துள்ளும். இயற்கையாகவே பெண்கள் அழகுதான். அழகுக்கு மேலும் அழகு சேர்க்க சில குறிப்புகள்.

✱ பசுமையான மரம் செடி கொடிகளை அடிக்கடி பார்ப்பது, கண்ணுக்கு குளிர்ச்சி. மனதுக்கும் மகிழ்ச்சி.

✱ கன்னம் ஒட்டிப் போய் இருக்கிறதா? தினமும் வாயில் தண்ணீர் ஊற்றி கன்னத்தின் உட்பகுதி விரியுமளவுக்கு நன்றாகக் கொப்பளியுங்கள்.

✱ ஆடை அணிவது முதலில் வசதிக்காக என்பது நினைவிருக்கட்டும். உடை, உடலைக் கௌவ்விப் பிடிக்கும் அளவுக்கு இறுக்க மாக இருக்கவேண்டாம்.தளர்வாக இருக்கிறது என்று அதிகம் தொளதொளவாக அணியவும் வேண்டாம். கச்சிதமாக இருப்பதே அழகு.

✱ வேலைக்குப் போகும் பெண்களுக்குப் புடவை கம்பீரமாக இருந்தாலும், இன்றைய சூழலில் அதை எப்போதுமே கட்ட முடிவதில்லை. புடவை கட்ட முடியவில்லையே என்ற ஏக்கமின்றி அணியுங்கள்.

✱ கூந்தலில் சிக்கு விழுகிறது என்ற பயத்தில் பலர் வாரம் ஒருமுறை தலையில் முழுகுவதைக்கூடத் தவிர்க்கின்றனர். தலையைக் குனிந்தபடி கூந்தலை முன்னால் போட்டு கைவிரல்களால் கோதி அழுத்தி நன்றாக அலசிச் சுத்தம் செய்யவேண்டும். அழுக்கு எளிதில் நீங்குவதுடன், சிக்கு விழாது. வெயில் காலங்களில் வாரத்திற்கு மூன்று தடவையாவது முழுகுதல் நல்லது.

✱ வெயில் காலத்தில் உடற்பயிற்சி செய்யும்போது கூந்தலை இறுக்கிக் கட்டக்கூடாது. முடி அதிகமாக உதிரிந்து விடும்.

✱ தலையைத் துடைக்க தனியாக துவாய் வைத்துக்கொள்ளுங்கள். முகத்துக்கு அதே துவாயைப் பயன் படுத்தும்போது, தலையில் இருக்கக் கூடிய பொடுகு, முகத்தில் பருக்கள் வரக் காரணமாகலாம்.

✱ என்னதான் பொறுமையாக நடந்து கொண்டாலும் அதை மீறி ஆத்திரம் உண்டாக்கும் வகையில் யாராவது ஏதாவது பேசுவார்கள், செய்வார்கள். இது வீட்டுக்கும் அலுவலகத்துக்கும் பொதுவானது. ஆனால் நம்மால் கோபத்தை வெளிப்படுத்த முடியாத நிலை இருக்கும். இதனால் உணர்ச்சிகள் உள்ளேயே அடக்கப் பட்டு பதற்றம் நிறைந்திருக்கும். இது மிகவும் ஆபத்தானது. இத்தகைய சந்தர்ப்பத்தில் என்னதான் முயன் றாலும் நம்மால் அழகாகக் காட்சியளிக்க முடியாது. தியானம், யோகாசனம், இசை கேட்பது, பாடுவது, நடன மாடுவது போன்ற ஏதாவது ஒரு பொழுது போக்கில் ஈடுபட்டு மன அழுத்தத் தைக் குறைக்க வேண்டும்.✱

# மறதிக்கு மருந்து



செல்போனில் பேசினால் 'மறதி' குணமாகும் எனப் புதிய ஆய்வில் தெரிய வந்துள்ளது. 'அல்ஷ் கெய்மெர்ஷ்' என்ற மறதி நோயினால் உலகில் பலர் அவதிப்பட்டு வருகின்றனர். மூளையில் உள்ள செல்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் செயல் இழப்பதால் இந்த நோய் உருவாகிறது. இந்த நோயை ஜேர்மனியை சேர்ந்த 'ஆலியோஸ்' என்ற விஞ்ஞானி 1906 ஆம் ஆண்டில் கண்டு பிடித்தார். அன்று முதல் இந்த நோயை குணப்படுத்த விஞ்ஞானிகள் தீவிரமாக முயன்று வருகின்றனர்.

இந்த நிலையில், தற்போது தான் இந்த நோயைக் குணப்படுத்த புதிய யுக்தி ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். தொடர்ந்து செல்போன் பேசுவதன் மூலம் இந்த நோயைக் குணப்படுத்தலாம் என ஆய்வு மூலம் தெளிவு படுத்தியுள்ளனர். அமெரிக்காவின் தெற்கு புளோரிடாவில் உள்ள பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்தப் புதிய ஆய்வை மேற்கொண்டனர். இவர்கள் 96 எலிகளுக்கு நாள் ஒன்றுக்கு இருமுறை செல்போன்கள் மூலம் எலக்ட்ரோ மேக்னடிக் அலைக் கற்றைகளை ரிமோட் கண்ட்ரோல் மூலம் பாய்ச்சினர். இதன் மூலம் அல்ஷ்கெய் மெர்ஷ் நோயினால் பாதிக்கப்பட்ட எலிகளின் நினைவாற்றல் அதிகரித்தது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மறதி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் செல்போனில் உள்ள எலக்ட்ரோ மேக்னடிக் அலைக்கற்றைகள் மூலம் சிகிச்சை அளித்து குணப்படுத்த முடியும் என்ற முடிவுக்கு ஆராய்ச்சியாளர்கள் வந்துள்ளனர்.✱

# கற்பழித்த பெண்கள்

தினமும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளையும், அது தொடர்பான போராட்டங்களையும் அறிக்கைகளையும் பார்த்தும், படித்தும், கேட்டும் தான் நமக்குப் பழக்கம். ஆனால் இது கொஞ்சம் வித்தியாசமான செய்தி, ஒரு பெண்ணை 3, 4 பேர் சேர்ந்து பலாத்காரம் செய்ததைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருப்போம். ஆனால் ஒரு சிறுவனை 10 பெண்கள் சேர்ந்து பலாத்காரம் செய்துள்ளனர் என்றால் ஆச்சரியமாகவும் அதிர்ச்சியாகவும் இருக்கிறது அல்லவா?

ஆஸ்திரேலியாவின் தெற்கு ஹைலட்ஸ் மாகாணத்தில் கடந்த வாரம் பள்ளி சென்று கொண்டிருந்த 17 வயது சிறுவனை 10 பெண்கள் திடீரென வழிமறித்தனர். சமையலுக்குப் பயன்படுத்தும் கத்தியைக் காட்டி மிரட்டினர். இதில் 4 பெண்கள் அந்த சிறுவனைப் பாலியல் பலாத்காரம் செய்தனர். இது குறித்துப் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், சிறுவனிடம் பலாத்காரம் செய்த பெண்கள் அனைவரும் ஆபிரிக்க நாடான பாப்புவா நியூகினியா நாட்டினைச் சேர்ந்தவர்கள். தற்போது அந்தச் சிறுவன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறான். மேலும் அவன் அளித்த வாக்குமூலத்தில் தனக்கு ஏதேனும் எயிட்ஸ், எச்.ஐ.வி. பாதிப்பு வந்துவிடும் என அஞ்சுவதாகவும், தன்னைப் பலாத்காரம் செய்த பெண்களுக்கு ஏதேனும் எச்.ஐ.வி. உள்ளனவா எனச் சோதனை செய்யும்படியும் கூறியுள்ளான். ஐ.நா. அமைப்பு சமீபத்தில் வெளியிட்ட அறிக்கையில், உலகில் அதிகம் எய்ட்ஸ் நோயாளிகள் உள்ள நாடு பாப்புவா நியூ கினியா தான் என கூறப்படு கிறது. அண்மையில் பெண்களால் பாதிக்கப்படும் ஆண்கள் அமைப்பு என்று ஒரு அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது நினைவுக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை.✱



# வெளியில் இதயம்



உடலுக்கு வெளிப்புறத்தில் இதயம் ஒட்டியிருக்கும் நிலையில் பிறந்த இரண்டு வயது சிறுமியொருவர் ரஷ்யாவில் வாழ்ந்து வருகிறாள். இந்த உடற்கோளாறு எக்டோபியர் கோர்டிஸ் எனக் குறிப்பிடப்படுகிறது. 80 லட்சம் பேர்களில் ஒருவருக்கு இந்த நிலை ஏற்படக்கூடும் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.மேற்படி சிறுமி ரஷ்யாவின் நொவோரோஸிஸ்க் பகுதியில் வசித்து வருகிறாள்.

இக்குழந்தையின் மருத்துவ சிகிச்சைக்கு நிதி உதவி தேவைப்படுவதாக இக் குழந்தையின் தாய் மிஹிடிரியன்ட் தெரிவித்துள்ளார். இது தொடர் பாக அவர் கூறுகையில், இக்குழந்தையின் இதயத்தைத் தொடர்ந்தும் இயங்கச் செய்வதற்கு 5 வகையான சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதற்குச் சுமார் 20,000 ஸ்ரேலிங் பவுண்களைத் திரட்ட வேண்டியுள்ளது என்று மிஹிடிரியன்ட் தெரிவித்துள்ளார். உண்மையில் இது மிகவும் கடினமான காரியம். நாங்கள் பண வசதிக் கொண்டவர்கள் இல்லை. அதனால் நாம் எப்படி அவ்வளவு தொகை பணத்தைத் தேட முடியும்? என்று கவலையுடன் கேட்கிறார் அவர். அக் குழந்தையின் இதயத்தை உள்ளே வைப்பதற்குச் சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டுமென்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். அதற்கு மில்லியன் கணக்கிலான பணம் செலவாகும் என்றும் கூறுகின்றனர். இப்போது நாங்கள் அவ்வளவு தொகையான பணத்தைத் தேடாவிட்டால் எமது குழந்தையின் அடுத்த பிறந்ததினத்தைப் பார்க்க முடியாது என்று மிஹிடிரியன்ட் தெரிவித்துள்ளார்.✱




# குடியானவனும் சக்கரவர்த்தியும்



ரஷ்யாவின் சக்கரவர்த்திகளுக்கு 'ஜார்' என்று பட்டம் உண்டு. முதலாவது பீட்டர் என்ற ஜார் ஒருநாள் வனத்தில் வழி தெரியாமல் தனியே திகைத்துக் கொண்டிருந்தார். அப்போது அங்கே மரத்தில் விறகு வெட்டிக் கொண்டிருந்த குடியானவன் ஒருவனை அவர் கண்டார்.

அவர் அவனிடம் சென்று, 'அன்பா! எல்லாம் ஆண்டவன் உதவி! என்று சொன்னார்.

'ஆம், அவர் உதவிதான் எனக்குத் தேவை!' என்றான் குடியானவன்.

ஜார், உன் குடும்பம் மிகப் பெரியதா?' என்று கேட்டார்.

'எனக்கு இரண்டு பையன்களும், இரண்டு பெண்களும் இருக்கிறார்கள்'

'நல்லது. அவ்வளவு பெரிய குடும்பமில்லை. நீ உன் பணத்தையெல்லாம் என்ன செய்கிறாய்?'

'நான் என் வருமானத்தை மூன்று பங்குகளாகப் பிரிக்கின்றேன். முதற் பகுதியைக் கொண்டு ஒரு கடனை அடைக்கிறேன்; இரண்டாம் பகுதியைக் கடனாக கொடுத்து வைக்கிறேன்; மூன்றாம் பகுதியை வெளியே போட்டு விடுகிறேன்!' என்று குடியானவன் மறுமொழி சொன்னான்.

அவன் சொன்னதைப் பற்றி ஜார் சிந்தித்துப் பார்த்தார். அதன் பொருள் அவருக்கு விளங்கவில்லை. குடியானவனே மேலும் விளங்கிச் சொல்லலானான். என் பெற்றோர்களுக்கு உணவளித்து நான் பட்ட கடனை அடைக்கிறேன்; என் பிள்ளைகளுக்கு உணவளிப்பதன் மூலம் அவர்களுக்குக் கடனாகக் கொடுத்து வைக்கிறேன்; பெண்களை வளர்ப்பதில் பணத்தை வெளியே எறிகிறேன்.'

'அப்பா நீ பேசுவது அழகாயிருக்கிறது!' என்று சக்கரவர்த்தி அவனைப் பாராட்டிவிட்டு, நான் வழிதவறி இந்தப் பக்கம் வந்துவிட்டேன். இங்கிருந்து வெளியேயுள்ள மைதானத்திற்குப் போக நீ வழிகாட்ட வேண்டும்' என்று வேண்டினார்.

'நீங்கள் பாதையைக் கண்டு கொள்ளலாம், நேரே போய் வலது புறம் திரும்புங்கள்; பிறகு இடது புறம்; மறுபடி வலது புறமாய்ப் போக வேண்டும்' என்று சொல்லிக் குடியானவன் இருந்த இடத்திலிருந்தே கையால் திசையைக் காட்டினான்.

'இப்படிச் சொல்வதில் எனக்கு வழி துலங்கவில்லை; நீயே கூட வந்தால் நலம்!' என்றார் ஜார்.

'ஐயா, உங்களுக்கு வழிகாட்ட எனக்கு நேரமில்லையே! குடியானவர்களாகிய எங்களுக்கு நேரம் தான் பணம். 'நேரம் தான் பணம் என்றால், நான் பணம் தருகிறேன்!'

'ஓ, அப்படியானால் நான் உங்களுடன் வருகிறேன். வாருங்கள் போவோம்!'

அருகில், நின்று கொண்டிருந்த ஜாரின் 'ரேக்ளா' வண்டியில் இருவரும் ஏறி அமர்ந்து கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர். குதிரையை ஓட்டிக் கொண்டே சக்கரவர்த்தி குடியானவனிடம் பேச்சுக் கொடுத்தார்.

'ஏனப்பா, நீ இதைவிட்டு வெளியே எங்காவது தொலை தூரங்களுக்கு எப்பொழுதாவது போனதுண்டா?' 'ஆகா! போயிருக்கிறேன். இங்கும் அங்குமாகச் சில இடங்கள் தெரியும்.'

'ஜார் சக்கரவர்த்தியை நீ எப்பொழுதேனும் பார்த்திருக்கிறாயா?'

'நான் ஜாரைப் பார்த்ததேயில்லை! ஆனால், ஒரு முறையாவது அவரைக் காண வேண்டும் என்று எனக்கு ஆசை.'

'வெளி மைதானத்திற்கு நான் போனதும், நீ அங்கே ஜாரை நேரில் பார்க்கலாம்!'

'ஜார் எவர் என்பதை நான் எப்படிக் கண்டு கொள்ள முடியும்?' 'ஜாரைத் தவிர மற்ற எல்லோரும் தலைகளில் தொப்பிகள் அணியாமல் இருப்பார்கள்; அவர் மட்டும் தொப்பியுடன் இருப்பார்;

அவர்கள் மைதானத்திற்கு வந்து சேர்ந்தனர். சக்கரவர்த்தியைக் கண்டதும், அங்கேயிருந்த மக்கள் அனைவரும் அவருக்கு மரியாதை செலுத்துவதற்காகத் தத்தம் தொப்பிகளைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டனர். குடியானவன் கூட்டத்தினரைக் கூர்மையாகக் கவனித்துப் பார்த்தான். ஆனால், ஜாரை அவனால் கண்டு கொள்ள முடியவில்லை.

'ஜார், எங்கேயிருக்கிறாய்?' என்று அவன் கேட்டான். பீட்டர் சக்கரவர்த்தி அவனை நோக்கி, 'இங்கே தொப்பி அணிந்துள்ளவர்கள் நீயும் நானும் தான். நம் இருவருள் ஒருவரே ஜாராக இருக்க வேண்டும்' என்றார்.★

## இளஞ்சுடர் அங்கத்தவராகுங்கள்

மாணவர்களே, இது உங்கள் பக்கம். இதில் உங்கள் ஆக்கங்களை வெளியிடுவதன் மூலம் உங்கள் திறமைகளை வெளிப்படுத்துங்கள். பக்கத்தில் உள்ள படிவங்கள் மூன்றை நிரப்பி உங்கள் பாஸ்போட் அளவான புகைப்படத்துடன் இளஞ்சுடருக்கு அனுப்பி வையுங்கள். பதிவு செய்யப்படும் அங்கத்தவரின் ஆக்கங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

## இளஞ்சுடர் விண்ணப்பப் படிவம்

பெயர்:- ..................................................

பிறந்த திகதி:-....................................

வகுப்பு:-....................................

பாடசாலை:-.......................................

சொந்த முகவரி:-.......................................

கையொப்பம்:-.......................................

மேற்படி மாணவர் எங்கள் பாடசாலையில் கல்வி கற்கிறார் என்பதை உறுதிப்படுத்துகிறேன்.


அதிபர்/ ஆசிரியர்

**அனுப்பவேண்டிய முகவரி** ............................

'இளஞ்சுடர்', சுடர் ஒளி, கையொப்பம்


361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அமீபா




அமீபா நுண்ணுயிர்களிலேயே மிகவும் எளிமையான கட்டத்தைக் கொண்டது சாதாரண அமீபா ஆகும். நுணுக்குக்காட்டியின் வழியே பார்க்கும்போது அமீபா நிறமற்ற ஒரு பாகு உருண்டை போலத் தோன்றும். அமீபாக்களில் இருந்துதான் பூமியும் மற்ற உயிரினங்களும் தோன்றியதாகவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அமீபாவின் வடிவம் இடைவிடாது மாறிக்கொண்டிருக்கிறது. அமீபா என்ற கிரேக்கச் சொல்லுக்கு மாறிக்கொண்டேயிருப்பது என்பது பொருளாகும். ஒளிபுகும் அமீபாவின் சிற்றுடலுக்குள் உருண்டையான அதன் உட்கரு காணப்படும். அதன் உடல் பிற ஒரு செல் உயிர்களைப் போலவே புறோட்டோ பிளாஸம் என்னும் அல்புமின் கூழால் ஆனாது. உட்கருவில் அடங்கிய புறோட்டோ பிளாஸா பகுதி உட்கரு உயிர்அணுநீர் எனப்படுகிறது.★

## ரூசோ



அறியாமை எனும் புதைமணலில் மூழ்கியிருந்த மக்களை வெளிக்கொணர உழைத்தவர் ரூசோ. அவர் அதிகாரவர்க்கத்தின் மிரட்டலுக்கும் கெடுபிடிகளுக்கும் அடங்காது தமது தத்துவச் சிந்தனைகளை உலகுக்கு வழங்கினார்.

'மனிதன் மிருகத்தை அடக்கி ஆள்கிறான். அதைப் போல நாகரிகத்தால் உயர்ந்த மனிதன் நாகரிகமற்ற மக்களை அடக்கி அடிமைப்படுத்துகிறான். இவற்றுக்கெல்லாம் காரணம் மனிதரிடையே தோன்றியுள்ள ஏற்றத்தாழ்வுகளே ஆகும். அந்த ஏற்றத் தாழ்வுகளைப் போக்க அனைவரும், சமத்துவமாக வாழும் காலத்தை உருவாக்க நான் பாடுபடுவேன்' என பேசியும் எழுதியும் வந்தார்.

ரூசோ வாழ்ந்த காலத்தில் அவர் மதவாதிகளாலும் அதிகாரவர்க்கத்தினராலும் விரட்டி வேட்டையாடப்பட்டார். ஊர் ஊராகத் துரத்தப்பட்டார். அவருக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் எல்லாம் துன்புறுத்தப்பட்டனர். அடக்கு முறைகளையும் அநீதியையும் எதிர்த்த அவர் பலதுன்பங்களுக்கு ஆளானார். இவர் 1717 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 17 ஆம் திகதி ஐரோப்பாவில் உள்ள அழகிய சுவிச்சலாந்து நாட்டின் எழில்மிகு நகரமான ஜெனிவாவில் பிறந்தார். ரூசோவின் முன்னோர்கள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள். ஐசாக் ரூசோ, சுசன்னே பேனாட் என்னும் தம்பதிகளுக்கு இரண்டாவது மகனாக ரூசோ பிறந்தார். ரூசோவின் முழுப் பெயர் லேன் லக்கி ரூசோ. இவர் 1778 ஆம் ஜூலை மாதம் 2ஆம் நாள் காலமானார். இறக்கும் வரையிலும் அவர் மக்களின் முன்னேற்றத்திற்காகப் போராடினார். ★

## மூளைக்கு வேலை தரும் மாயச் சதுரம்


### கணிதப் புதிர் - 19

| | | | | |
|---|---|---|---|---|
| 45 | 15 | 110 | 80 | 75 |
| 10 | 105 | 95 | 70 | 40 |
| 125 | 100 | 65 | 35 | 25 |
| 90 | 60 | 30 | 05 | 120 |
| 55 | 50 | 20 | 115 | 85 |

இடம் மாறியுள்ள நான்கு எண்களை மாத்திரம் உரிய கூட்டிற்குள் மாற்றியிடுவதன் மூலம் நிரை, நிரல், மூலைக்கு மூலை கூட்டுத்தொகை 325 ஆகும் வண்ணம் எண்களை ஒழுங்கமையுங்கள். உங்கள் முயற்சி வெற்றியளித்ததா? என்பதை அறிய அடுத்த வாரம் இளஞ்சுடரைப் பாருங்கள்.

**கணிதப் புதிர் - 18 இன் சரியான விடை**

| | | | | |
|---|---|---|---|---|
| 75 | 40 | 05 | 120 | 85 |
| 80 | 70 | 35 | 25 | 115 |
| 110 | 100 | 65 | 30 | 20 |
| 15 | 105 | 95 | 60 | 50 |
| 45 | 10 | 125 | 90 | 55 |



# எலும்புகளில் ஏற்படும் தேய்மானமே மூட்டு வாதத்துக்கு மூலகாரணம்

**கேள்வி:** எனக்கு வயது 60. ஆண். கடந்த சில ஆண்டுகளாக எனது இரு முழங்கால்களிலும் தாங்க முடியாத வலி அடிக்கடி ஏற்படுகிறது. இரவில் இது அதிகமாக இருப்பதாக உணர்கிறேன். வைத்தியர்களின் ஆலோசனைப்படி Neodol போன்ற மருந்துகள் பாவித்தும் நோய் குறையவில்லை. தங்களது ஆலோசனை இது விடயத்தில் எனக்கு உதவியாக இருக்கும் என நம்புகிறேன்.

**பதில்:** இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட என்புகள் சந்திக்கும் இடத்தை மூட்டுக்கள் என அழைப்போம் மூட்டுக்களை ஒரு மென்சவ்வு பாதுகாக்கிறது. இது Synovial Membrane என அழைக்கப்படும். இந்த Synovial Membrane ன் உள்ளே Synovial Fluid என்னும் ஒரு பதார்த்தம் உண்டு. இது பாகுநிலையானது. பொதுவாகவே எமது மூட்டுக்களில் சம்பந்தப்படுகின்ற எலும்புகள் ஒன்றோடு ஒன்று முட்டுவதில்லை. ஆனால் வயது ஏற ஏற அல்லது உடற்பருமன் அதிகமாக உள்ளவர்களுக்கு அல்லது அதிக பாரம் தூக்குபவர்களுக்கு என்புகள், அதிலும் குறிப்பாக முழங்கால் மூட்டை ஆக்குகின்ற என்புகள் ஒன்றோடொன்று தொட ஆரம்பிக்கின்றன. இதனால் என்புகளின் முனைகள் தேய ஆரம்பிக்கின்றன. (Degeneration) அதுமட்டு மல்லாமல் என்புகள் உராய்வடைவதனால் கல்சிய இழப்பு ஏற்படுவதோடு இழக்கப்பட்ட கல்சியம் Synovial Fluid ஐ சென்றடைகிறது. இதனால் Synovial Fluid ன் பாகுநிலை மாற்றமடைகிறது. இதுவும் மூட்டினை அசைப்பதில் நோவைத் தருகிறது.

நீங்கள் பாவிக்கின்ற மருந்துகள் வலி நிவாரணி மட்டுமே (Pain Killer) எனவே மருந்து பாவிக்கும் போது நோ அல்லது வலி தெரியாமல் இருக்கும். ஆனால் மருந்தின் தாக்கம் முடிந்த பின்னர் மீண்டும் நோகத் தொடங்கும். எனவே தான் மருந்து பாவித்தும் குணமாகவில்லை என நீங்கள் தெரிவிக்கும் நிலை தோன்றுகின்றது.

ஆனால் தற்போது Degeneration ஐ குணமாக்கக் கூடிய மருந்துகள் பாவனைக்கு வந்துள்ளன. குறிப்பாக Glucosamine வகை மருந்துகள் பாவனையில் உண்டு. ஆனால் இவை மாதக்கணக்கில் தொடர்ந்து பாவிக்கப்பட வேண்டியவை என்பதோடு, மிக விலையுயர்ந்த மருந்துகளாகவும் உள்ளமையால் எல்லோராலும் இவற்றை வாங்கிப் பாவிக்கக் கூடியனவாக இல்லை என்பதே யதார்த்தமாகும்.

தங்களுடைய நோயை Osteoarthrila என அழைப் போம். ஒரு என்பு சத்திர சிகிச்சை நிபுணரை அணுகி உரிய ஆலோசனை பெறுங்கள். ஏனெனில் இப்போதெல்லாம் இத்தகைய நோய்களுக்கு சத்திர சிகிச்சை உட்பட நல்ல சிகிச்சை முறைகள் வழக்கத்தில் உள்ளன.

> இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.
>
> **இலவச மருத்துவ ஆலோசனை**
>
> I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
> 361,கஸ்தூரியார் வீதி,
> யாழ்ப்பாணம்.
>
> II.) சுடர்ஒளி,
> 85,ஐயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
> கொழும்பு-14.

**கேள்வி:** எனக்கு வயது 30. திருமணமானவள். கடந்த மூன்று வருடங்களாக மூட்டு வாதத்தால் வருந்துகிறேன். இதற்கு ஒவ்வொரு மாதமும் Pencillin ஊசி போட்டு வருகிறார்கள். இந்நோய் ஏன் ஏற்படுகிறது. நான் தொடர்ந்தும் Pencillin ஊசி போட்டு வர வேண்டுமா?

**பதில்:** பொதுவாகவே எமது உட லைக் கிருமிகள் அணுகினால் அதனைத் அழித் தொழிக்கும் பொறிமுறை எமது உடலில் உண்டு. கிருமிகளைப் பிறபொருள் (Antibody) என்றும், அவற்றை அழிப்பதற்காக உடலால் உருவாக்கப்படும் பொருட்கள் பிறபொருள் எதிரிகள் (Anthbody) என்றும் அழைப்போம்.

எமது உடலை Sterptococus வகைப் பக்ரீறியாக்கள் தாக்கும்போது உருவாக்கப்படும் Anthbodies உம் கிருமியும் சேர்ந்து Antigen- Antibody Complex ஒன்றை உருவாக்குகின்றது. இந்த Antigen- Antibody Complex ஆனது குருதிச் சுற்றோட்டத்தில் கலந்து உடலின் பல பாகங்களுக்கும் செல்லும். திசுக்களில் இவை படியும் போது (tissue) அங்கே பல மாறுதல்களை அல்லது கெடுதல்களை அவை விளைவிக்கும்.

குறிப்பாக தொண்டையில் (Tonsils) அழற்சி ஏற்படும் போது (Tonsilitis) அல்லது தோற்புண்களில் (Steptococus) தொற்று ஏற்படும் போது இத்தகைய அபாயநிலை தோன்றுகின்றது. இதன்போது பல இழையங்கள் பாதிப்படையக் கூடும். உதாரணமாக,

1.இதயத்தில் பாதிப்பு ஏற்படும் போது Rheumatic Carditis என்றும்,

2.முழங்காலில் அல்லது மூட்டுக்களில் பாதிப்பு ஏற்படும் போது Rheumatic Arthritis என்றும்,

3.சிறுநீரகம் பாதிக்கப்படும் போது Acule Glomerulanephritis என்றும் இந்நிலைகள் குறிக்கப்படும்.

உங்களது கேள்வி யில் இருந்து உங்க ளுக்கு Rheumatic Arth ritis ஏற்பட்டுள்ளதாக ஊகிக்க முடிகிறது.

இந்த நோயானது பொதுவாக இளம் பிள்ளைகளையே அதிகம் பாதிக்கும். ஆயினும் எந்த வயதினரும் விதிவிலக்கல்ல.

மேலும் ஒருமுறை இந்த நோய் வந்தவர்களுக்கு மீண்டுமொரு முறை Rheumatic arthritis தொற்று ஏற்பட்டால் நிலமையை மேலும் சிக்கலாக்கும் என்பதனால் பாதுகாப்பிற்காக முன்னேற்பாடாக (Proply Laxsu Benyathine Pencillin) எனும் ஊசி மருந்தை நான்கு வாரங்களுக்கு ஒருமுறை வழங்குவது வழக்கம். ஆனால் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து எடுக்க வேண்டி ஏற்படுவதில்லை. இது தொடர்பில் முடிவு எடுக்க வேண்டிய பொறுப்பு உங்களைக் கவனிக்கும் வைத்தியரைச் சார்ந்தது. ★

# ஆஸ்துமா நோய்க்கு மிகச் சிறந்த மருந்து சூரியஒளி

மனித வாழ்க்கையுடன் இயற்கை எவ்வாறு பின்னி பிணைந்துள்ளது என்பது வியப்பை ஏற்படுத்துகின்றது. அந்த வகையில் இயற்கை அற்புதமான கொடை நோய் நிவாரணியாகவும் திகழ்கின்றது.

சிறுவயதில் ஏற்படும் ஆஸ்துமா (மூச் சுத்தடை) நோய்க்கு சூரிய ஒளி அரிய மருந்தாக அமைகின்றதென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உயிர்ச்சத்து 'டி' பொதுவாக சூரிய ஒளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

வெலன்சியன் ஆய்வாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் சூரிய ஒளிக்கும் ஆஸ்துமா நோய்க்கும் இடையிலான தொடர்பு கண்டறியப்பட்டுள்ளது. அதிகளவில் சூரிய ஒளி உடலில் பட்டால் புற்று நோயைக் கூட ஏற்படுத்தக் கூடிய ஆபத்து காணப்படுகின்றது.

எனினும் முற்று முழுதாக சூரிய ஒளியை நிராகரிப்பதும் ஆபத்துக்களை ஏற்படுத்தும். சூரிய ஒளியினால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து சமநிலையாகப் பேணுவதே புத்திசாதூரியமானது என ஆஸ்துமா நோய் தொடர்பான முன்னணி ஆய்வாளர் அல்பர்ட்டோ அர்னிடொ பென்னா தெரிவித்துள்ளார்.

மனித உடலுக்குத் தேவையான 90 வீதமான உயிர்ச்சத்து 'டி' சூரிய ஒளியின் மூலம் உடலுக்குக் கிடைக்கப்பெறுகின்றது. ஆஸ்துமா நோயாளிகளின் உடலில் உயிர்ச்சத்து 'டி' குறைந்தளவிலேயே காணப்படும். வடக்கு ஸ்பெய்ன் போன்ற குளிரான பரதேசங்களைச் சேர்ந்த சிறுவர் சிறுமியர் ஆஸ்துமா நோயினால் அதிகம் அவதியுறுகின்றனர்.

ஸ்பெய்னின் முக்கியமான ஒன்பது நகரங்களில் 45,000 சிறுவர் மற்றும் இளைஞர்களிடம் ஆஸ்துமா தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வு தொடர்பான தரவுகள் சர்வசே பயோமெட்ரியல் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆஸ்துமா நோய் ஏற்படுவதற்கு பிரதான காரணியாக காலநிலை மாற்றத்தைக் குறிப்பிடுகின்றனர். போதியளவு உயிர்ச்சத்து டி கிடைப்பதற்கு சூரிய ஒளி மிகவும் அவசியமானது. ஆஸ்துமா, கசம் போன்ற



தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த உயிர்ச்சத்து 'டி' மிகவும் இன்றியமையாதது என ஆய்வாளர் அர்னி டொபென்னா தெரிவித்துள்ளார்.

மேலும் நாள்தோறும் 20 முதல் 30 நிமிடங்கள் சூரிய ஒளியை பெற்றுக் கொள்வது போதியளவு உயிர்ச்சத்து 'டி' யைப் பெற்றுக் கொள்ள வழிகோலும் என அவர் குறிப்பிட்டுள்ளார். குளிர்காலங்களில் சில நாடுகளில் போதியளவு சூரிய வெளிச்சம் கிடைக்காது. எனவே இவ்வாறானவர்கள் செயற்கை உயிர்ச்சத்து 'டி' பெற்றுக் கொள்ள வேண்டுமென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். ★



# கும்பகர்ணன்


வருடத்தில் 6 மாத காலம் தொடர்ந்து உறங்கி 6 மாத காலம் தொடர்ந்து விழித்திருக்கும் விநோத நோய் ஒன்றினால் பாதிக்கப்பட்டுள்ள நபரொருவரைக் குணப்படுத்த சீன மருத்துவர்கள் போராடி வருகின்றனர். 74 வயதுடைய லி ஷிமிங் Li Zhiming என்ற குறிப்பிட்ட நபரை உறக்கத்திலிருக்கும் 6 மாத காலமும் அவரது குடும்பத்தினரே சிரமப்பட்டு பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அவர் தன்னிலை மறந்து உறக்கத்தில் இருக்கும் காலகட்டத்தில் அவர் பட்டினியால் இறந்து விடாமலிருக்க அவரை அமர வைத்து அவரது வாயினூடாகச் சிறிது சிறிதாகச் சூப் உணவைக் குடும்பத்தினர் பருக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அந்த ஆறு மாத காலப்பகுதியில் அவர் தானாக எழுந்து மலசலகூடம் செல்லும் உணர்வு கூட இல்லாமல் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதால் படுக்கையிலேயே மல சலம் கழிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 'லி ஷிமிங்'கின் விசித்திர நோய் குறித்து அவரது மருமகளான 'பு யிப்' விபரிக்கையில், அவர் உறக்கத்திலிருக்கும் போது கோமா நிலைக்குச் சென்ற ஒருவர் போலவே இருப்பார்.

நாங்கள் கரண்டியால் சூப்பைப் பருக்கும் போது, அதை அவர் தன்னிச்சையாக விழுங்குவார். எதை யும் சுயமாகச் செய்யவோ உணரவோ முடியாத நிலையில் அவர் காணப் படுவார். ஆனால் அவர் விழித்தெழுந் தால் தொடர்ந்து 6 மாத காலத்திற்கு சிறிதும் உறங்காது இருப்பார். அவர் வீதிகளில் அலைந்து திரிவதிலும், தொலைக்காட்சி பார்ப்பதிலும் இரவைக் கழிப்பார் என்று கூறினார்.★

# மூத்த டைனோசர்



சீனாவின் ஷாண்டாங் மாகாணத்தில் டைனோசரின் எலும்புக் கூடுகளைத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஷாண்டாங் மாகாண த்தின் சுசெங் பகுதியில் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது டைனோசரின் மண்டை ஓடு மற்றும் தாடை எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. இது 11 மீற்றர் நீளம், 4 மீற்றர் உயரம், 7,000 கிலோ எடை கொண்ட புதுவகை டைனோசர் என்று கண்டுபிடித்தனர். டைனோசாரஸ் ரெக்ஸ் என்ற இனத்தை சேர்ந்த இது வட அமெரிக்கா மற்றும் கிழக்கு ஆசியாவில் 65 முதல் 99 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்தனர். மேலும் இப்பகுதியில் 1960ல் இருந்து 10க்கும் மேற்பட்ட டைனோசர் எலும்புகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது.★

# தலைகீழ் ரயில்

ரயில்கள் மலைப் பாதையில், கடலுக்கு மேல் சென்று பார்த்திருக்கிறோம். தொங்கும் ரயிலைப் பார்த்ததுண்டா? தொங்கும் ரயில் ஜேர்மனியில் உள்ளது. இந்த ரயில் பாதை வுப்பர் நதியின் மேலே அமைந் துள்ளது. ஜேர்மனி யில் இந்த ரயில் 'ச்வேபெபஹன்' என்று அழைக்கப்படுகிறது. இதன் ரயில் பாதை 13.3 கி.மீ நீளம் 8 மீற்றர் அகலம் கொண்ட தாகும்.★





© Nicolas Martin

# காதல் பூட்டு

ஜேர்மனின் பிரபல்யமான பாலத்தை மூடும் காதல் பூட்டுக்கள் காதல் பூட்டுக்கள் உண்மைக் காதலின் சின்னம்: ஜேர்மனியின் பிரபல்யமான கொலோனின் ஒன்றில் உங்கள் பெயரைப் பொறித்து பாலத்தில் வைத்துப் பூட்டி விட்டு சாவியை அடியிலுள்ள ஆற்றுக்குள் போட்டுவிடுங்கள்.

இந்தப் பழக்கம் இத்தாலியில் உள்ள பொன்டே மிலிவியோவில் இருந்து ஆரம்பமானது என ச் சொல்லப்படுகிறது. ஆனால், ஆஸ்திரேலியாவிலிருந்து உருகுவே வரை இது பின்பற்றப்படுகிறது.


அருகிலிருந்து பார்த்தாலும் தூரத்தில் நின்று பார்த்தாலும் காதல் பூட்டுக்கள் இந்தப் பாலத்திற்கு பளபளப்பைக் கொடுக்கின்றன. இந்தப் பாலத்தின் கீழே எவரும் இந்தப் பூட்டுக்களை 20 யூரோக்களுக்கு விற்கவில்லை என்பதை உணரும்பொழுது உண்மையில் இன்னும் சில புனிதமான விடயங்கள் உள்ளன என்பதை ஊகிக்க முடிகிறது.★

# பளுத்தாரகை

பிரிட்டனைச் சேர்ந்த 11 வயதான சார்ளி கிறேக் பிரிட்டனின் மிகச் சிறந்த வலிமையான சிறுமியாக விளங்குகின்றாள். 4 அடி, 7 அங்குல உயரமான இச்சிறுமி 32 கிலோகிராம் எடையையே கொண்டுள்ளாள். தனது உடல் எடைக்குச் சமமான அளவு பளுவை தூக்கக்கூடியவளாக இவள் விளங்குகிறாள். பிரிட்டனின் கிளாஸ்கோவைச் சேர்ந்த சார்ளி கிறேக், கனிஷ்ட பொதுநலவாயப் போட்டியில் பங்குபெற வேண்டுமென்பதே தனது கனவு என்று கூறியுள்ளார். அவள் வாரத்தில் 12 மணித்தியாலங்களை பளு தூக்குவதற்கான பயிற்சிக்காகச் செலவிடுகின்றாளாம்.

அது உண்மையில் கடினமான வேலை. இந்தப் பயிற்சியில் ஈடுபடும்போது நான் பலதடவைகள் காயப்பட்டுள்ளேன். ஆனால் நான் என்ன செய்துள்ளேன் எனத் திரும்பிப் பார்க்கும்போது எனக்கு மகிழ்ச்சியே ஏற்படுகின்றது என்று சார்ளி கிறேக் கூறியுள்ளார். எனது பயிற்றுநர் நான் ஆற்றல் மிக்க சிறுமியென்று கூறி என்னை இந்த விளையாட்டில் முன்னோக்கி நகரும்படி வழிநடத்துவார். ஜிம்மில் எனது சகாக்களும் எனக்கு அதிகமாக உற்சாகம் ஊட்டுவார்கள். என்னால் பளுதூக்க முடியாமல் போகும்போது இன்னும் மேலே மேலே என்று கூறி உற்சாகப்படுத்துவார்கள்.

அதனை மனதில் நிறுத்தி நான் இதில் மேலும் கவனம் செலுத்தினேன் என்று அச்சிறுமி தெரிவித்துள்ளார். சேர்ளியின் தாய் 20 வருடங்களாக பளு தூக்குதல் விளையாட் டில் ஈடுபட்டவராம். 9 வயதில் பளு தூக் கும் விளையாட்டில் முதன் முதலில் ஈடுபட்ட சேர்ளி தின மும் நூடில்ஸ், மரக்கறிகள், பழங்கள் கொண்ட உணவு களை உட்கொள் வதை அவளின் தாய் உறுதிப்படுத்தி உள்ளார்.★



# ஜெ. திருந்திவிட்டாரா?



தமிழக முதல்வர் ஜெயலலிதா அவரது முந்திய இரு ஆட்சிக் காலத்திலும் கண்மூடித்தனமாக செயற்பட்ட ஒருவராவார். முதலில் 1991- 1996 வரையிலான ஆட்சிக் காலத்தில் ஊதாரித்தனமும், பகட்டும், படாடோபமும் ஆட்சியில் மின்னின. பின்பு 2001-2006 வரையிலான அவரது ஆட்சிக் காலத்தில் இந்தப் பகட்டு சற்றே தணிந்தது. ஆனால் கொள்கை ரீதியாக சில சிறுபிள்ளைத்தனமான முடிவுகளை எடுத்திருந்தார். இவையே சென்ற முறை அவர் ஆட்சியை இழக்கக் காரணமாயிற்று என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல. உதாரணமாக ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்களை ஒரே உத்தரவுக் கையெழுத்தில் பதவி நீக்கியதைக் கூறலாம். இதனால் அடுத்து வந்த 2004 லேக்சபா தேர்தலிலும் 2006 சட்டசபைத் தேர்தலிலும் ஜெயலலிதா மண் கவ்வினார். அரச ஊழியர்கள் தான் தேர்தல் வாக்களிப்பின்போது நிர்வாகிகளாக செயற்படுபவர்கள். கள்ளவாக்குப் போட வேண்டுமானால் இவர்களின் அனுசரணை தேவை. கள்ளவாக்கு மட்டுமன்றி உண்மை வாக்குகளுமே இவர்களின் குடும்பம், உறவினர், நண்பர்கள் வாயிலாக தி.மு.க அணிக்கு வந்து குவிந்தன. இவ்வாறே சிறுபான்மையினரை நேரடியாக இலக்கு வைத்து மதமாற்ற தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தார். ஏற்கனவே தி.மு.க அனுதாபிகளாக இருந்து வந்த கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களும் இதனால் வெறுப்படைந்து தி.மு.க வை மேலும் உறுதியாக ஆதரிக்கத் தலைப்பட்டனர். பி.ஜே.பி ஆளும் மாநிலங்களில் கூட இன்னமும் சில மாநிலங்களில் மத மாற்றத் தடைச் சட்டம் வரவில்லை. எனவே பி.ஜே.பியை விடவும் மதவெறி அதிகமுள்ள கட்சி எதுவெனக் கேட்டால் அது அ.தி.மு.க.வே என துணிந்து கூற முடியும். இருந்தபோதும் இந்தத் தடவை தேர்தலில் தி.மு.க.வின் ரவுடித்தனத்தைச் சகிக்க முடியாமல் அ.தி.மு.க அணிக்கு சிறுபான்மையினர் கணிசமாக வாக்களித்துள்ளனர். இவ்வாறு இவர்கள் நல்லெண்ணத்தைக் காட்டினாலும் அதைத் தானும் பரஸ்பரம் காண்பிக்க ஜெயலலிதா முதல் எடுப்பிலேயே தவறிவிட்டார். அவரது பதவியேற்பு விழாவில் ''பிரதம விருந்தினராக'' கௌரவம் தரப்பட்டவர் வேறுயாருமல்ல. சாட்சாத் முஸ்லிம்களுக்கு எதிரான அதே நரேந்திரமோடி தான். இதை அறிந்ததும் அ.தி.மு.க அணிக்கு முஸ்லிம் வாக்குகளை ஈட்டித்தந்த மனிதநேய மக்கள் கட்சியின் 2 எம்.எல்.ஏக்களும் நிகழ்வைப் புறக்கணித்தனர். பி.ஜே.பியுடன் பகைமை பாராட்டும் ஜெயலலிதா நரேந்திர மோடியுடன் குலாவுவது எதற்காக என்பதே பலரதும் கேள்வியாகும். அதற்கு விடை மிகத் தெளிவானது. ஜெயலலிதா பிராமணீய ஆதரவு கொண்ட, மதவாதப் போக்குக் கொண்ட மேட்டுக்குடிக்கிறுக்குத்தனம் கொண்ட ஒருவர் என்பதே அதுவாகும். அவரோடு பிறந்த இந்த மதவாதப்போக்கை அவரது குருவாகிய சோவினால் கூட மாற்றமுடியாது. மிக விரைவில் முஸ்லிம்கள், கிறிஸ்தவர்களை ஒடுக்கும் பல சட்டங்களை ஜெயலலிதா இயற்றவுள்ளார் என்று பலரும் எதிர்வு கூறுகின்றனர். 'வெட்டு ஒன்று; துண்டு இரண்டு' என அரசியல் நடத்துபவரே ஜெயலலிதா. தனது அரசியல் இருப்புக்காக அவ்வப்போது சிலசில விட்டுக்கொடுப்புகள், தியாகங்களை அவர் செய்தாலும், அவருக்கென சில அடிப்படைக் கொள்கைகள் உறுதியாக உள்ளன. இவை ஒருபோதும் மாறமாட்டா. இவற்றை விரல் விட்டு எண்ணிவிடலாம்:

1.பிராமண மேலாதிக்கவாதமும் இந்துமத வெறியும்

2.பிரபாகரனையும் புலிகளையும் அழித்தே ஆக வேண்டும். ஆனால் இலங்கைத் தமிழினத்துக்கு சிங்களவர்கள் உரிமையை வழங்வேண்டும்.

3.கூட்டணிக்கட்சி, தோழமைக்கட்சி என்பதெல்லாம் அரசியலுக்கு அவ்வப்போது ஆடும் நாடகமே; கூட்டணிக்கட்சியினருடன் உண்மை நட்பு, மதிப்பு கொடுப்பது என்பதெல்லாம் தேவையில்லாத வீண் வேலை.

4.நான் இந்தியப் பிரதமராக வந்திருக்க வேண்டியவள். அதை ஆண் வர்க்கம் எல்லாமே சேர்ந்து அநியாயமாக தடுத்து வருகிறார்கள்.

5.சட்டம், ஒழுங்கு என்பது நடைமுறையில் இருக்க வேண்டும். சகல அதிகாரமும் முதல்வரிடம் இருக்கும். சட்டத்தை எதிர்க்கும் எந்தச் சக்தியும் இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கப்படும். உ+ம் வீரப்பன்- ஜெயலலிதா உத்தரவில் வீரப்பனைக் கொன்ற உயர் பொலிஸ் அதிகாரி விஜயகுமாருக்கு ஜெயலலிதாவை எதிர்க்கும் மன்மோகன் அரசு சிலமாதங்களுக்கு முன்(CRPL) விசேட பொலிஸ் படைத் தலைமை அதிகாரி என்ற விசேட பதவி உயர்வை வழங்கியது.

உண்மையில் இந்தக் கடைசிக் கொள்கை வெளிப்படையாகப் பலரது பாராட்டையும் பெற்றதொன்று. ஜெயலலிதா ஆட்சியிலா கலைஞர் ஆட்சியிலா ரவுடித்தனம் மிகுந்திருந்தது எனக் கேட்டால், கலைஞர் ஆட்சியே என வெகு இலகுவாகப் பதிலிறுக்க முடியும். இன்றும் ஜெயலலிதாவின் இத்தனை ஆணவத்தின் பின்பும் மக்கள் அரியணையில் அவரை மீண்டும் ஏற்ற ஒரே காரணம் ரவுடிகளை ஒடுக்குவார் என்ற நம்பிக்கையே. தமது கடந்த ஆட்சிகளில் அவர் இதைத் தெளிவாகச் செய்து காட்டியுள்ளார். இது நடுத்தரவர்க்க மக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்ற நிலைப்பாடாகும். அ.தி.மு.கவில் இருக்கும் இரண்டாம் மூன்றாம் நிலைத் தலைவர்கள் கூட தி.மு.கவில் இருப்பவர்களை விட ரவுடித்தனம் குறைந்தவர்களும் கல்வியறிவில் உயர்ந்தவர்களுமாவர்.

தி.மு.கவில் 8ஆம் வகுப்பு படித்த அமைச்சர்களே மிக அதிகம். ஒரிரு பட்டதாரிகளே உள்ளனர். அ.தி.மு.கவில் கல்விமான்களுக்கு ஜெயலலிதா இடம் தருவது மற்றொரு சிறப்பாகும். உதாரணமாக சுகாதார அமைச்சராக டாக்டர் விஜய் என்ற மருத்துவரை நியமித்துள்ளார். இவர் இம்முறை தான் முதன் முதலாக எம்.எல்.ஏ ஆகியவர் என்பது கவனிக்கத்தக்கது.

கூட்டணித் தலைவர்களை அவமதிப்பது ஜெயலலிதாவுக்குக் கைவந்தகலை. ஆனால் இம்முறை பதவியேற்பில் விஜயகாந்துக்கு மட்டுமன்றி வைகோவுக்கும் அழைப்பு விடப்பட்டது. இதற்குமுன் பதவியேற்பில் தோழமைக் கட்சித் தலைவரான ராமதாஸை முதல்வரான ஜெயலலிதா பதவியேற்பில் அவமதித்தது பரவலாக குற்றமாகப் பேசப்பட்டது. எனவே இப்போது ஜெயலலிதா திருந்திவிட்டாரா என்ற வியப்பு பலரிடமும் எழுந்துள்ளது. திருந்தினால் நிச்சயமாக நாட்டுக்கு நல்லது தான். ஆனால் மோடியை அழைத்துக் குலாவியது தான் இடிக்கிறது. இதிலிருந்து தெரிவதென்ன? உடன்பிறந்த அந்த பிராமண இந்துமத வெறியை சாகும்வரை ஜெயலலிதா கைவிடமாட்டார் என்பதே. அப்படியென்றால் இது, நல்லாட்சியாக அமையாது என்பதைச் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.★

**எஸ்.சுரேந்திரஜித்**

# உங்கள் நண்பரை நீங்கள் காதலிக்கிறீர்களா?


**காதல்** எப்படி வரும், யாரிடம் வரும், எங்கு வரும் என்பதெல்லாம் சொல்ல முடியாது. காதல் என்பதற்கு முதலில் கண் இல்லை என்று சொல்வார்கள். அப்படி இருக்க ஒருவர் தனது நண்பரையே காதலிப்பதில் மட்டும் தவறு இருக்க முடியுமா?

பொதுவாக பார்த்ததும் காதல் வரலாம், அல்லது இப்படி பேசிப் பழகி நல்ல நண்பர்களாக இருப்பவர்களுக்கு இடையே காதல் மலரலாம். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு இருவரும் மனம் விட்டுப் பேசி தமக்குள் நடப்பதற்கும் மேலாக ஏதோ ஒன்று இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு பின் காதலர்களாக மாறியவர்களும் உண்டு.

ஆனால், நண்பர்களுக்குள் காதல் வருவது மிகப் பெரிய அவஸ்தை என்பது மட்டும் நிஜம். ஒருவர் தனது நண்பரைக் காதலிக்கிறார் என்றால், அதை அவர் உணர்வதற்கே சில காலம் பிடிக்கும். எப்போதும் அவருடன் நினைவில் பேசிக் கொண்டிருப்பது, அவரது பேச்சைக் காதுகள் கேட்டுக் கொண்டிருப்பது போன்ற உணர்வு, அவரைத் தவிர உலகத்தில் யாரையும் பிடிக்காத அளவிற்கு போவது வரை தனது நண்பரைத் தான் காதலிக்கிறோம் என்பதை உணரவே சில காலம் பிடிக்கும்.

அதற்குள், அவர்களது நட்புப் பற்றி அவர்களுக்குள்ளேயே ஒரு பெருமை வந்திருக்கும். அப்போது அவர்களது நட்பைப் பற்றி தம்பட்டம் அடித்துக் கொண்டிருப்பார்கள் தங்களை சுற்றியுள்ள நண்பர்களிடம். இந்த நிலையில், தனது நண்பரைத் தான் காதலிக்கிறோம் என்ற எண்ணமே முதலில் குற்ற உணர்ச்சியாக மாறவும் வாய்ப்பு உள்ளது. அதையும் மீறி, அவரும் தன்னைக் காதலிக்கிறாரா என்பதை ஆராய மனது அலைபாயும். இதற்கிடையே அவர் வேறு யாரையும் காதலித்து விடக் கூடாதே என்றும் மனம் பதபதைக்கும்.

தனது நண்பர் வேறு யாரிடமாவது பேசினால் முதலில் அதீத பற்று எனப்படும் தன்னுடன் மட்டுமே பேச வேண்டும், பழக வேண்டும் என்ற எண்ணம் பொறாமையாகவோ, கோபமாகவோ, வெறுப்பாகவோ கூட மாறலாம்.




ஒருவர் தன் நண்பரைக் காதலிக்கத் துவங்கியதும் செய்ய வேண்டிய விஷயம், தனது காதலை வெளிப்படுத்துவது அல்ல. அவரது மனதில் தன் மீது காதல் ஏற்படுவதற்கான விதை உள்ளதா அல்லது காதல் விதையைத் தூவுவதற்கான வாய்ப்பு உள்ளதா என்பதுதான். அதற்கு முன் வேறு யாரேனும் காதல் விதையை விதைத்து உள்ளனரா என்பதை அறிந்து கொள்வதுதான் முதல் வேலையாக இருக்க வேண்டும்.

அவரது மனதில் காதல் ஏற்படவே இல்லை, தன்னை மிகவும் நல்ல நண்பராக நினைக்கிறார் என்று உறுதியாகத் தெரிந்த பிறகு, காதலிக்க வைப்பதற்கான வழிகளில் ஈடுபடலாம். நமது நட்பை பெரிதாக மதிக்கிறார், என்னை ஒரு நல்ல நண்பராக அவர் நினைக்கிறார் என்று நீங்கள் எண்ணினால், உங்களது காதல் முடிவைச் சில காலம் தள்ளிப் போடலாம்.

ஒரு வேளை உங்கள் காதலை நீங்கள் அவசரப்பட்டு வெளிப்படுத்தி, அவரது மனதை அது பாதிக்குமானால், நீங்கள் இழப்பது ஒரு காதலியை அல்ல.. நல்ல நண்பரை. ஒரு வேளை நீங்கள் காதலை வெளிப்படுத்தியும், அது அவருக்குப் பிடிக்காமல் போனால், நீங்கள் இவ்வளவு காலமும் நண்பரைப் போல இருந்தது வெறும் நடிப்பாக அவருக்குத் தோன்றலாம். இதனால் உங்களுக்கு இடையே எந்தப் பந்தமும் இல்லாமலே போகலாம்.

காதலை மனதில் அடக்கி வைத்துக் கொள்வது கடினமான விஷயமாக இருந்தாலும் அதனால் ஏற்படும் பாதிப்பு பெரிதல்ல. உங்களுக்கு எந்தப் பிரச்சினையிலும் தோள் கொடுக்க உங்களுக்காக ஒரு நண்பர் உங்களுடன் இருப்பார். அதை விட வேறு என்ன வேண்டும் உலகத்தில்.★

# மாலைகளுக்கும் மரியாதைகளுக்கும் தான்.....!



வழமையாக மலையகத் தலைவர்களும் மாலை மரியாதைகளுக்கும், பொன்னாடைகளுக்கும் கௌரவத்திற்கும் அடிமையானவர்கள்தான்.

தாம் செல்லும் கூட்டங்களுக்கு முன்னோடியாக தமது ஆட்களை அனுப்பி கூட்டத்துக்கு ஆள் சேர்த்து வைக்கவும், மாலைகளைப் போடவும் ஏற்பாடு செய்த பின்னரே கூட்டங்களுக்கும் செல்வார்கள். பல சந்தர்ப்பங்களில் தமக்குப் போடும் பெரிய மாலைகளுக்கும் பொன்னாடைகளுக்கும் தலைவர்களே பணம் செலுத்தியதாகவும் கதைகள் உண்டு.

தலைவர்களுக்குத்தான் மாலை போடவேண்டும். அவர்கள் தான் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படவேண்டும் என்றும் இருந்தது. தலைவர்களுக்கு மட்டும் தான் கௌரவமும் மரியாதையும் என்ற நிலைமை துணிச்சலாக முறியடித்துள்ளார் மத்திய மாகாணத்தின் முன்னாள் கல்வி அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினரும், மலையக மக்கள் முன்னணி அரசியல்துறைத் தலைவருமான வி. இராதாகிருஷ்ணன்.

அண்மையில் இடம்பெற்ற மேதின மேடையில் இராதாகிருஷ்ணன் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை ஏனைய தலைவர்களைச் சற்றுத் திக்குமுக்காட வைத்துள்ளது. அதாவது தலைவர்கள் கௌரவிக்கப்படுவதற்குப் பதிலாக உழைக்கும் தொழிலாளர்களை மேடைக்கு அழைத்துப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் அக்ரமந்தனையில் இடம் பெற்ற மேதின விழா மேடையிலேயே இதனை நடத்திக் காட்டியுள்ளார். மலையகத்தில் பல பாகங்களிலும் இருந்து கலந்து கொண்ட தொழிலாளர்களுள் ஆக மூத்த தொழில் முதிர்ச்சியும் தொழிற்சங்க அனுபவமும் உள்ள 16 பெரியவர்கள் மேடைக்கு அழைத்து கௌரவமளிக்கப்பட்டனர்.

இங்கே ஒரு உண்மை புலப்படுகின்றது. உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என்று மேடைகளில் முழங்கி விட்டால் மட்டும் போதாது. அதனைச் செயலிலும் காட்ட வேண்டும் என்பது தான் அது.இந்தத் தலைவர்கள் எல்லாம் தோட்டத் தொழிலாளர்களின் தயவிலும் அவர்களின் சந்தா என்ற நிதியிலும் வாழ்பவர்கள். இவர்கள் உல்லாச மாளிகைகளில் வாழ்ந்து, ஆடம்பரக் கார்களில் பயணித்து சுகபோக வாழ்க்கை நடத்துகின்றனர்.

**இரா.புத்திரசிகாமணி**

ஆனால் இவர்களுக்கு நிதி வழங்கும் தொழிலாளர்கள் மழை காலங்களில் வீட்டுக்கு உள்ளேயே குடைபிடித்துக் கொண்டு ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடக்கின்றனர்.

இன்றும் மலையகத்தில் 40 சதவீதமான தொழிலாளர்களுக்கு அடிப்படை வசதிகளுடன் கூடிய குடியிருப்புகள் இல்லை. மலசல கூட வசதிகள் இல்லை. சுத்தமான குடிநீர் இல்லை. இதனாலேயே மலையகமக்கள் குறிப்பாக நுவரெலியா மாவட்டமக்கள் தாய் சேய் இறப்பு, குறைபிரசவம், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், போஷாக்கின்மை என்பனவற்றால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நுவரெலியா மாவட்டத்தில் தான் மலையக தொழிற் சங்க அரசியல் தலைவர்கள் எல்லோரும் இருக்கின்றனர். இந்தத் தொழிலாளர்கள் மத்தியில் தான் காலம் காலமாக வாழ்கின்றனர். அரசாங்க புள்ளி விவரத் திணைக்கம் ஆய்வு அறிக்கையை வெளியிடும் வரை இந்தத் தலைவர்களுக்கு தமது மக்களின் நிலை தெரியவில்லையே என்பதுதான் வேதனையும் வேடிக்கையும்.

இப்புள்ளி விவர ஆய்வுகளை மையமாகக் கொண்டு சுகாதார அமைச்சு தேசிய போஷாக்கு வாரத்தை நுவரெலியா மாவட்டத்தில் தேசிய ரீதியாக நடத்தவுள்ளது.இதுவரை காலமும் கண்களை மூடிக் கொண்டிருந்த மலையகத் தலைவர்களும் அமைச்சர்களும் தம் மக்களின் அடிமட்ட வாழ்க்கை நிலையை கண் திறந்து பார்க்க வேண்டும். தலைவர்களுக்கு மாலை போட்டது போதும் இனிமேல் உழைப்பவர்களுக்கே மாலை போட்டுக் கௌரவிக்க வேண்டும்.

இதற்குப் பிள்ளையார் சுழி போட்டு ஆரம்பித்து வைத்துள்ள மலையக மக்கள் முன்னணியின் அரசியல்துறைத் தலைவர் வி. இராதாகிருஷ்ணன் பாராட்டுக்கு உரியவர்.இதோடு நின்று விடாமல் ஒவ்வொரு தொழிலாளர்களினதும் அத்தியாவசிய தேவைகள் என்ன என்பதைக் கண்டறிந்து அவற்றைப் படிப்படியாக நிவர்த்தி செய்யத்திட்டங்களைத் தயாரித்து செயற்படுத்த மலையகத் தலைவர்கள் முன்வரவேண்டும்.

இவ்வாறு செய்வதின் மூலம் உழைக்கும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, அவர்களையும் சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக மாற்றிக் காட்ட முடியும்.இதனைச் செய்வார்களா நமது மலையகத் தலைவர்கள்.★

# இயங்க மறுத்த ஜனாதிபதி ஒபாமாவின் நம்பர் வண் கெடிலாக்கார்

ஜெனரல் மோட்டார் கம்பெனி. அது அமெரிக்காவின் பிரபல கார் உற்பத்தி நிறுவனம். அந்த நிறுவனம் விசேடமாக வடிவமைத்து உருவாக்கிய ஒரு காரின் பெயர் தான் கடிலாக் வண் . அதாவது நம்பர் வண் கடிலாக் கார் எந்தவொரு பயங்கரவாதத் தாக்குதலுக்கும் ஈடு கொடுக்கத்தக்க விதத்தில் விசேடமான பாதுகாப்பு அம்சங்கள் கொண்டது. காரின் பக்கத் தகடுகள், கதவுகள் எட்டு அங்குலக் கனதி கொண்ட குண்டு துளைக்காத உருக்குத் தகடுகளால் ஆனவை. காரின் நீளம் 18 அடி. நிறை 8 தொன். இயந்திரம் அசுர பலம் கொண்டது. இந்த விசேட கடிலாக் வண் காரின் விலை என்னவாக இருக்கும் எனச் சிந்திக்கிறீர்களா? அது ஒரு மில்லியன் டொலரையும் தாண்டுகிறது.

சரி இத்தகைய பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இத்தனை பெரிய விலையில் இந்த கடிலாக் வண் கார் யாருடைய பாவனைக்காகத் தயாரிக்கப்பட்டிருக்கலாம்? உலகத்துப் பொலீஸ்காரன் என்ற அந்தஸ்தை ஈட்டிக் கொண்டுள்ள அமெரிக்க நாட்டின் அதிபர் ஜனாதிபதி பரக் ஒபாமாவுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்டதே இந்த கடிலாக் வண் கார்.

தமது இந்த கடிலாக் வண் காரில் தான் ஜனாதிபதி பராக் ஒபாமா அண்மையில் தமது அயர்லாந்துக்கான உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டார். அயர்லாந்தின் ஒவ்ப்பாலி கிராமத்தில் வாழும் தமது மூத்த சந்ததியனரைக் சந்திப்பதும் அவரது அந்த விஜயத்தின் ஒரு நோக்கமாய் அமைந்திருந்தது.

அயர்லாந்தின் டப்லின் நகரில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திலிருந்து ஒவ்ப்பாவி கிராமத்தை நோக்கி பராக் ஒபாமா தம்பதியினரை ஏற்றிக் கொண்டு புறப்பட்ட அந்த கடிலாக் வண் கார், அந்த அமெரிக்கத் தூதரக வெளிவாசலைக் தாண்டும் போதே காரின் இயந்திரம் இயங்க மறுத்துக் கார் திடீரென அந்த இடத்திலேயே நின்று விட்டது. தூதரக வெளிவாசலில் உள்ள வேகக் கட்டுப்பாட்டுத் திண்டில் இறுகிப் போய் அந்தக் கடிலாக்கார் நின்று விட்டது.

இயற்கையாகவே கறுத்த பராக் ஒபாமாவின் முகமோ கோபத்தால் சிவப்பேறிப் போய் விட்டது. தம்மைத் தமது பூர்வீகக் கிராமத்துக்கு வழியனுப்பிவைக்க அங்கு திரண்டிருந்தவர்கள் மத்தியில் பராக் ஒபாமா தர்மசங்கட நிலையை எதிர்நோக்க வேண்டியதாயிற்று. என்ன செய்வது? வேறொரு காரில் ஏறி ஒபாமா தம்பதியர் தமது பயணத்தைத் தொடர வேண்டியதாயிற்று.

இயங்க மறுத்ததால் (த. பீஸ்ட்) காட்டு மிருகம் என பத்திரிகையாளர்களால் ஏளனமாக வர்ணிக்கப்பட்ட அந்தக் காரை விடுத்து வேறு காரில் தமது பயணத்தையைச் சென்றடைந்த பராக் ஒபாமா தமது மூதாதையர் வாழ்ந்த அக் கிராமத்தின் பிரதான வீதி வழியாக நடந்து சென்றே தமது தூரத்து உறவினர்களைச் சந்தித்து குசலம் விசாரித்து மகிழ்ந்தார். வழமையாகவே அமெரிக்கர்கள் மட்டுமென்றல்லாது மேற்கு நாட்டவர்கள் அனைவருமே எந்தவொரு தொழிலையும் இழிவானதாக ஒரு போதும் கருதுவதில்லை. தாம் செய்யும் தொழிலுக்கு மதிப்பளித்து அதனைக் கௌரவமாகக் கருதி மேற் கொள்வது அவர்களது வழிவழிவந்த மரபாகும். ஒபாமாவின் தாய்வழிப் பூட்டன் பெல்மன் கியர்ணி என்பவர் சப்பாத்துக்கள் தயாரிப்பதைத் தமது தொழிலாக மேற்கொண்டவர். 1850 களில் அயர்லாந்தில் ஏற்பட்ட பாரிய அனர்த்தமொன்றில் பாதிக்கப்பட்டதால் அங்கிருந்து அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்து கென்காஸ் மாநிலத்தில் வாழ்ந்து வந்தார்.

தமது அயர்லாந்துக்கான விஜயத்தின் போது ஒபாமா சந்தித்து உரையாடி மகிழ்ந்த அவரது தூரத்து உறவினரொருவர் ஹென்றி ஹீலி என்பவராவர். நீர் விநியோகக் குழாய்களைப் பொருந்தும் சேவை நிறுவனமொன்றில் பணிபுரியும் ஹென்றி ஹீலிக்கு ஒபாமா அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட சமயமே அதாவது கடந்த நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் தான் ஒபாமா தமது உறவினர் என்பது தெரிய வந்ததாம்.

அமெரிக்க நாட்டின் அதியுயர் பதவியான ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்த போதிலும், கொட்டித் தீர்க்க மழையையும் பொருட்படுத்தாது தமது பூர்வீக கிராமத்தையும் தமது மூதாதையர் வழிவழிவந்த உறவினர்களையும் மறவாது அங்கு விஜயம் செய்தது மட்டுமல்லாது தமது பரம்பரை உறவினரையும் நேரில் சந்தித்து மனம் விட்டுக் கலந்துரையாடி மகிழ்ந்த ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பெருந்தன்மை குறித்து ஒவ்ப்பாவி கிராமத்தவர்கள் தற்போதும் பெருமையாகப் பேசி மகிழ்கின்றனர். ★



# பண்பெனப்படுவது...?

களைப்பில் தோய்ந்த ஒருநாள். வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு பயணமாவது அவசியமாயிருந்தது. ''சிவப்பு'' பஸ்களைவிடத் தனியார் வண்டிகளில் ஏறினால் விரைவாகச் சென்று விடலாம் என்ற பொது விதிப்படி ஓர் தனியார் வண்டியைப் பிடித்துக் கொண்டேன். ஏ-9 வழிப் பயணப்பேருந்துகளில் சீற் கேட்பது அவ்வளவு நியாயமில்லாததாலும், ஆறுதலாக இருந்து ரசித்துப்போக எதுவுமில்லாததாலும் இந்தப்பயணத்தை நின்றே மேற்கொள்வது சிறப்பானது என்பது எனது முடிவு.

சனங்களை அடுக்கிய பேருந்தின் பயணம் ஆரம்பமானது. நடத்துனருக்கும், ஓட்டுனருக்கும் நிறையச் சனங்கள் தேவைப்பட்டனர். வயது, பால் வேறுபாடின்றி கத்திப் பாட்டுக்கு அடுக்கினர். பலர் மற்றவரின் கால்களுக்கு மேல் ஏறி நிற்பதுகூட தெரியாமல் நின்றிருந்தனர். அதற்குள் பேருந்துகளுக்கிடையிலான போட்டி வேறு. காற்றைக் கிழித்துப் பயணித்தனர். எல்லோருமே அந்தப் பயணத்தைத் திட்டினார்கள். ஆனால் யாருக்கும் கேட்காதபடி ஒலிப்பேழைகளின் சத்தம் இருந்தது.

''முன்னுக்குப் போங்கோ, முன்னுக்குப் போங்கோ'' அச்சுறுத்தல்களின் தாக்கத்தால் ஓட்டுநருக்கு அடுத்த இடத்தில் நான் நிலையெடுக்க வேண்டியதாயிற்று. நான் பிடித்துக் கொண்டிருந்த 3 நபர்களுக்கான இருக்கைகளில் ஓர் வயதான அம்மா, அப்பா, இவர்களுக்கிடையில் ஓர் கட்டிளம் காளை ஆகிய மூவரும் இருந்தனர்.

**தம்பி**

அதனைத் தொடர்ந்திருந்த ஏனைய சீற்றில் அரைவாசிக்குமேல் இளைஞர்களும் யுவதிகளும் இருந்தனர். காதுகளில் ஹெற்செற், கண்ணை மூடியபடி; 'பபுல்கம்' மென்றபடி பாடல் ரசிப்பு, காதைப் பிளக்கும் இரைச்சல்களுக்கு மத்தியிலும் கைத்தொலைபேசிக் கதைப்பு, அல்லது நல்ல தூக்கம் மாதிரியான இருப்பு....

இச்செய்கைகளில் ஏதாவது ஒன்று அங்கிருந்த இளையவர்களை மூடியிருந்தது. குழந்தைகளுடன், காலூன்றித் தடிகளுடனும் ஏறுபவர்கள் யாரும் கண்ணில் படாதவாறு அவர்களின் தந்திரம் வலுப்பெற்றிருந்தது.

கனகராயன் குளத்தை அண்மித்த பகுதியில் கையில் ஓர் குழந்தையுடனும், வயிற்றில் இன்னொன்றுடனும் இளந்தாயொருத்தி ஏறினாள். சீற் கொடுக்க அப்போது யாரும் கண் திறக்கவில்லை என்னோடு பக்கத்தில் நின்றவர்களெல்லாம், நான் கைப்பிடித்திருக்கும் ஆசனவரிசையில் இருக்கும் இளைஞனை நோக்குகின்றனர். அவனோ நித்திரை மாதிரி. குழந்தை அழத்தொடங்கிவிட்டது. அந்த இளைஞனுக்குப் பக்கத்திலிருந்த அம்மா ''யாராவது சீற் கொடுங்கோவன், அல்லது அந்தப் பிள்ளையை வாங்கி வச்சுக் கொள்ளுங்கோவன்'' என்று உத்தரவிட்டார். ''ஏன் அந்தப் பெடியனை எழுப்பி விடுங்கோ'' பின்னுக்கிருந்த கிழவர் கடுப்பில் கக்கிவிட்டார். ''அவனுக்கு காலில்ல'' அம்மாவின் பதில், இளைஞன்மீதான எல்லோரது அபத்தப் பார்வைகளையும் பொய்யாக்கியது. பின்னாலிருந்த யாரோ ஒருவர் குழந்தையை வாங்கி வைத்துக் கொண்டார். அவள் நின்றாள்.



ஆனையிறவைக் கடந்தது பஸ். தெருவின் இரு பக்கங்களிலும் நிரப்பியிருந்த கட்டடங்கள் அழகானவைகளாகவும் அசிங்கமானவைகளாகவும் நிமிர்ந்திருந்தன. வைரம் வைரமான கற்கள் அவற்றின் இறுக்கத்தை மேலும் இறுக்கின. வயல் நிலங்களையும்,மேய்ச்சல் தரைகளையும் கூட அவைகள் விட்டுவைக்கவில்லை. நேர்த்தியானதும், பிரமாண்டமானதுமான தன் உடற்கட்டுமானத்துக்குள் சகலவற்றையும் ஆக்கிரமித்திருந்தது. பலர் பழைய கட்டடங்களையும் புதுப்பித்துக்கொண்டிருந்தனர். மதில்கள் அகலமாகவும், உயரமாகவும் கட்டப்பட்டுக்கொண்டிருந்தன. மணலும், கல்லும் செருப்பற்ற கால்கள் நடக்கமுடியாதபடி பரந்து சிதறியிருந்தன. யாழ்.நகரை அண்மித்தது பஸ். அந்த நகருக்கும் கட்டடப் பசி இன்னும் போதவில்லை. உயரம் உயரமாகவும், அலங்கோலமாகவும், அளவுகள் இன்றியும் கட்டடங்கள் தேவைப்பட்டன. பல்வேறு அளவுகளில் வெறும் கட்டடங்கள் எழும்பிக்கொண்டே இருந்தன.

பஸ் தரிப்பிடத்தில் அந்த பஸ் தன்னை நிறுத்தியது. நான் கைபிடித்திருந்த சீற்றிலிருந்த அம்மா, அப்பா, இளைஞன் மூவரும் இறங்கினர். நான் அவனது கால்களையே பார்த்தேன். அது என்னுடையதைப் போன்றே இருந்தது. நிறைந்த பொருள்களுடன் அழகாய் நடந்துபோய் கட்டடங்களுக்கிடையில் மறைந்தான்.

பிறகேன் அந்த அம்மா பொய் சொன்னாள்? ஒரு இருக்கைக்காகவா? ✱

கட்டடங்கள் அவசியமானவை. அழகானவை. உரியகலவை கொண்டு கட்டப்படவேண்டியவை. அல்லாவிடின் அவைகள் ஆபத்தைக் கக்கிவிடும். அந்தக் கட்டடங்கள்தான் நமக்குத் தெரிந்த அபிவிருத்தி. ஒரு இனமோ, நாடோ மிகப் பெரும் சாலைகளும், வானளாவிலான கட்டடங்களும் தமக்குரியதாய்க் கொண்டிருக்கும்போதே அது அபிவிருத்தியை நோக்கி நகரமுடியும். அல்லது தன்னை அபிவிருத்தியடைந்ததாகக் காட்டிக்கொள்ளமுடியும் என நம்மவர்களால் நம்பப்பட்டு வருகிறது. இந்த நம்பிக்கைதான் நம்மிடையே பெருகிவரும் கட்டடக் கலாசாரத்திற்கு அடிப்படை.

உண்மையில், கட்டடங்களினதும், சாலைகளினதும் எழுச்சி அபிவிருத்தியல்ல. மாறாக ஓர் இனம் ஏற்படுத்திக் கொள்ளும் உயர்ந்த பண்பாட்டு அடையாளங்களே அதன் நிலையான அபிவிருத்தி. பெரும் பொருளியல் பலத்தை மட்டும் கொண்டு கட்டப்படும் அபிவிருத்தி உயிரற்ற, தசையற்ற எலும்புக்கூட்டை மட்டும் கொண்ட உடலைப் போன்றது. நிலையான பண்பாட்டு விருத்தியே அபிவிருத்திச் சுட்டியின் நிலைத்திருப்பை உறுதிப்படுத்துவதாகும்.


## சுடர் ஒளி வாசகர்களுக்கு...

சுடர் ஒளி வாரமலருக்கு தமது ஆக்கங்களை அனுப்பிவைக்க விரும்பும் வாசகர்கள் கீழ்க் காணும் முகவரிகளுக்கு அனுப்பிவைக்கலாம்.

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**சுடர் ஒளி வாரமலர்**
**85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை,**
**கொழும்பு - 14.**

தகுதியான ஆக்கங்கள் சுடர் ஒளி வாரமலரில் பிரசுரிக்கப்படும்.

## மாணவப் பத்திரிகையாளராக விரும்புகிறீர்களா?

நீங்கள் துடிதுடிப்புள்ள சமூக நோக்குக் கொண்டவரா?

உங்களுடைய சிந்தனைகளை எழுத்துவடிவில் மக்களிடம் கொண்டுசெல்ல உங்களுக்கு ஒரு அரிய வாய்ப்பைச் சுடரொளி வழங்கவுள்ளது. நீங்களும் சுடர் ஒளியின் மாணவப் பத்திரிகையாளர் குழுவில் இணைந்து கொள்ளுங்கள். உங்கள் பிரதேச பிரச்சினைகள் தொடர்பாக 200 சொற்களுக்கு உட்பட்ட ஆக்கம் ஒன்றை எழுதி உங்கள் சுயவிபரங்களுடன் தொலைபேசி இலக்கத்தையும் குறிப்பிட்டு எமக்கு அனுப்பிவையுங்கள். வயதெல்லை 16 தொடக்கம் 26 வரை. அனுப்பும் கடித உறையில் இடது பக்க மூலையில் சுடர் ஒளி மாணவப் பத்திரிகையாளர் எனத் தலைப்பிட்டு அனுப்பி வைக்கவேண்டும். (கிழக்கு மாகாண விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை உண்டு).

விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி:-

சுடர் ஒளி யாழ். அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# ராசி-பலன்

**05. 06. 2011 - 11 . 06. 2011**



அச்சுனி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்

சொன்ன சொல்லைத் தட்டாமல் நிறைவேற்றுபவர்களே! அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாயாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். உங்களின் கல்வித் தகுதிக்கேற்ப நல்ல வேலை கிடைக்கும். உங்கள் புகழ் கூடும். சம்பளப் பாக்கி கைக்கு வரும். எதிர்பார்த்திருந்தபடி பணம் வரும். பூர்வீகச் சொத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள். வியாபாரத்தை விரிவுப்படுத்துவீர்கள். எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெறும் வாரமிது.



கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்

படிப்பறிவுடன் பட்டறிவும் உள்ளவர்களே! மேல்மட்ட அரசியல்வாதிகள் உதவுவார்கள். திட்டமிட்ட காரியங்கள் கை கூடும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வீட்டைக் கட்டி முடிக்க எதிர்பார்த்த வங்கிக் கடன் கிடைக்கும். இளைய சகோதர வகையில் இருந்த பிணக்குகள் நீங்கும். மனைவி வழியில் நல்ல செய்திகள் வரும். புதியவர்கள் அறிமுகமாவார்கள். விலை உயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவீர்கள். உடன்பிறந்தவர்களை அனுசரித்துப் போங்கள். உங்களின் திறமைகள் வெளிப்படும். கடின உழைப்பால் கரையேறும் வாரமிது.



மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

சுற்றியிருப்பவர்களை சிரிக்க வைப்பதுடன் சிந்திக்கவும் வைப்பவர்களே! கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பூர்வீக சொத்து கைக்கு வரும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறைக் காட்டுவார்கள். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள். அரசு விவகாரங்களில் அலட்சியம் வேண்டாம். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பெற்றோருடன் கலந்தாலோசித்து எதிர்காலம் குறித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் அதிரடி லாபம் உண்டு. எதிர்பார்த்த வாய்ப்புகள் தள்ளிப் போகும். புதிய கோணத்தில் யோசித்து வெற்றி பெறும் வாரமிது.



புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

வாழ்க்கை வாழ்வதற்கே என நினைப்பவர்களே! சமூகத்தில் பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் தொடர்பு கிடைக்கும். தோற்றப் பொலிவுக் கூடும். குடும்பத்தில் சந்தோஷம் பிறக்கும். கடனாகக் கொடுத்த பணம் கைக்கு வரும். சகோதர வகையில் அனுகூலம் உண்டு. மனைவிவழி உறவினர்கள் உங்களைப் பற்றி பெருமையாகப் பேசுவார்கள். தள்ளிப் போன வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். நட்பு வட்டம் விரியும். அரசியலில் செல்வாக்குக் கூடும். வெளிநாட்டிலிருப்பவர்கள் உதவுவார்கள். அனுபவமிக்க வேலையாட்கள் அமைவார்கள். எதையும் சாதிக்க முயலும் வாரமிது.



மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்

விருந்தும் வேண்டாம், விரதமும் வேண்டாம் என எதிலும் மிதமாக இருப்பவர்களே! குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல், குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறைக் காட்டுவார்கள். பணவரவு அதிகரிக்கும். பழைய கடன் பிரச்சனையைத் தீர்க்க புது வழி பிறக்கும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். பழைய வாகனத்தை மாற்றி புதிது வாங்குவீர்கள். தாய்வழி உறவினர்களின் ஆதரவுக் கிட்டும். அரசால் அனுகூலம் உண்டு. உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டு. மூளை பலத்தால் முன்னேறும் வாரமிது.




உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்

சுமை சுமந்து வருபவர்களைச் சுமப்பவர்களே! கடனாகக் கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். பழைய சிக்கல்களுக்கு தீர்வு காண்பீர்கள். வெளிநாடு செல்லும் வாய்ப்பு வரும். குடும்பத்தில் ஓரளவு நிம்மதி கிட்டும். பிள்ளைகள் உங்களைத் தாமதமாகப் புரிந்துக் கொள்வார்கள். பால்ய நண்பர்கள் தேடி வந்து உதவுவார்கள். உடன்பிறந்தவர்களுடன் விவாதம் வந்து போகும். வேலையாட்கள், உத்தியோகத்தில் மற்றவர்களின் வேலையையும் இழுத்துப் போட்டு செய்வீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளைச் சமாளிப்பீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் வாரமிது.



சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்

களங்கமில்லாத பேச்சுக்குச் சொந்தக்காரர்களே! பிரபலங்கள் அறிமுகமாவார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். பிள்ளைகளின் எதிர்காலம் குறித்து யோசிப்பீர்கள். உங்கள் ரசனைக்கேற்ற சொத்து வாங்குவீர்கள். உறவினர்கள், நண்பர்களால் நன்மை உண்டு. அயல்நாட்டிலிருப்பவர்களால் ஆதாயமடைவீர்கள். பெற்றோரின் பாசமழையில் நனைவீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்களைத் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அலுவலகச் சூழ்நிலை அமைதி தரும். எதிலும் தெளிவு கிடைக்கும் வாரமிது.



விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

தர்மத்திற்குத் தலை வணங்குபவர்களே! நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் முடியும். பேச்சில் இருந்த தடுமாற்றம் நீங்கும். ஓரளவு பணவரவு உண்டு. குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். பிள்ளைகள் ஒத்தாசையாக இருப்பார்கள். ஆனால் சகோதர வகையில் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உறவினர்கள், நண்பர்களிடம் இடைவெளி தேவை. வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். சகாக்களைப் பற்றிக் குறை கூற வேண்டாம். வியாபாரத்தில் பல தொழில்நுட்பங்களை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் நிதானத்தால் வெற்றி பெறும் வாரமிது.



மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்

நாடிவருபவர்களுக்கு வாரி வழங்குபவர்களே! நாடாளுபவர்கள் அறிமுகமாவார்கள். எதிர்பார்த்த வகையில் பணம் வரும். சொந்த ஊரில் மதிக்கப்படுவீர்கள். பிள்ளைகளைப் புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள். தாயாரின் உடல் நலம் சீராகும்-. உடன்பிறந்தவர்கள் வலிய வந்து உதவுவார்கள். உறவினர்களின் அன்புத் தொல்லைகள் விலகும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை மூத்த அதிகாரி உங்களிடம் பகிர்ந்துக் கொள்வார். உங்கள் புகழ் கூடும். சம்பளபாக்கி கைக்கு வரும். புதிய பாதையில் பயணிக்கத் தொடங்கும் வாரமிது.



உத்ராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்

தளராத தன்னம்பிக்கையாளர்களே! கணவன்-மனைவிக்குள் நிலவி வந்த கசப்புணர்வுகள் மறையும். என்றாலும் இருவரும் தங்களது உறவினர்களின் பெருமையை பெரிதாக பேசாதீர்கள். உறவினர்கள், நண்பர்களின் வருகையால் வீடு களை கட்டும். வெளிவட்டாரத்தில் சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். சகோதரர் வகையில் பிரச்சினைகள் வரும். வழக்குகளில் அவசரம் வேண்டாம். வியாபாரத்தில் லாபம் வரும். வேலையாட்களின் ஒத்துழைப்பு சுமாராக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக நெருக்கடிகள் வந்து நீங்கும். எதிர்ப்புகளைச் சமாளிக்கும் வாரமிது.



அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

மண் வாசனை மாறாதவர்களே! பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வர வேண்டிய பணம் கைக்கு வரும். மனைவிவழி உறவினர்களால் உதவிகள் உண்டு. நட்பால் ஆதாயமடைவீர்கள். அரசாங்க அதிகாரிகளின் தொடர்பு கிடைக்கும். அரசு காரியங்கள் சாதகமாக முடியும். ஓரளவு பணவரவு உண்டு. குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். அயல்நாடு செல்லும் வாய்ப்பு வரும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். சகோதர வகையில் உதவிகள் உண்டு. வியாபாரத்தில் சில புதிய அனுபவங்கள் கிடைக்கும். எதிர்பார்த்தவைகளில் சில நிறைவேறும் வாரமிது.



பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

கொள்கை கோட்பாடுகளை விட்டுக் கொடுக்காதவர்களே! திடமாக சில முடிவுகள் எடுப்பீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. கணவன்-மனைவிக்குள் இருந்த சண்டை, சச்சரவு நீங்கும். பிள்ளைகளின் பாசம் அதிகரிக்கும். பணப்பற்றாக்குறையினால் சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். பழைய உறவினர்கள், நண்பர்களைச் சந்திப்பீர்கள். தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சகாக்கள் உதவுவார்கள். வேற்றுமொழி பேசுவோரால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் சில மாற்றங்கள் செய்வீர்கள். அதிரடி முன்னேற்றங்களைச் சந்திக்கும் வாரமிது.

# மனமகிழ்வுக்கு ஜாதகம் உதவுமா?

மனிதர்கள் பலர் கடின உழைப்பால் முன்னேறுகின்றனர். ஒரு கட்டத்தில் மிகக் கடுமையாக உழைக்கும் சிலர், வசதி வாய்ப்புடன் கூடிய நல்ல நிலைக்கு வந்ததும், மது, மாது (பிற பெண்கள் தொடர்பு) இவற்றை நாடுகிறார்.

அதுதவறு என்று அவர்களுக்குத் தோன்றினாலும், மனிதர்களுக்கு மகிழ்ச்சியைத் தரக் கூடியது வேறு இல்லை என மனதில் நினைத்துக் கொள்கின்றனர்.

எனவே, ஒரு மனிதன் தனது வாழ்வில் மது, மாது ஆகியவற்றின் தொடர்பு இல்லாமல் மகிழ்ச்சியாக, சந்தோஷமாக இருக்க முடியுமா?

மது, மாது ஆகிய இரண்டில் மட்டுமே இன்பம் என உலகில் உள்ள 100 வித மனிதர்களும் கருதுவதில்லை. ஜாதகத்தை வைத்துப் பார்க்கும் போது, 4ஆம் இடமான சுகஸ்தானமே ஒருவரின் மகிழ்ச்சியை நிர்ணயிக்கிறது. அதற்கு அடுத்தப்படியாக



12ஆம் இடம் ஒருவரின் மறைமுக இன்பங்களைக் காட்டக் கூடியதாக ஜோதிடத்தில் கருதப்படுகிறது.

எனவே, 4 மற்றும் 12ஆம் இடங்களைப் பொறுத்தே ஒரு மனிதனுக்கு எந்த விஷயத்தில் மகிழ்ச்சி ஏற்படும் என்பதைக் கூற முடியும்.


ஒருவர் மிகவும் ஏழ்மையான நிலையில் இருந்து இன்று லட்சா பதிபதி நிலைக்கு உயர்ந்துள்ளார். எனினும், கோயிலில் யாராவது சிதறு தேங்காய் உடைத்தால் அதனைச் சேகரித்துச் சாப்பிடாமல் அங்கிருந்து நகர மாட்டார்.

அவருக்கு அதில் தான் பேரானந்தம் அடங்கியிருக்கிறது.

இதேபோல் மற்றொரு முக்கிய பிரமுகரும் தனது கடந்த கால வாழ்க்கையில் மேற்கொண்ட ஒரு விஷயத்தை தகுதி, தராதரம் பார்க்காமல் இன்றும் செய்து வருகிறார். ஏழ்மை நிலையில் சாலையோரக் கடைகளில் சாப்பிட்டுப் பழக்கப்பட்ட அவர், இன்று பல தொழில்களுக்கு அதிபரான பின்னரும் காரில் சென்று சாலையோரக் கடைகளில் உணவு அருந்துகிறார். அவருக்கு அதில்தான் இன்பம், சந்தோஷம், மகிழ்ச்சி.

எனவே, ஒருவரின் ஜாதகத்தில் சுகாதிபதி எப்படி அமைகிறதோ அதைப் பொறுத்தே அவர்களின் மகிழ்ச்சி, இன்பம் அமையும்.★

## சொற்சிலம்பம் - போட்டி இல: 472



அனுப்புபவர் பெயர்:............................................

விலாசம்:............................................

............................................

கையொப்பம்:............................................

### மேலிருந்து கீழ்

01. மேன்மையான தன்மை.
02. வரி.
03. பூமி/உலகம்.
04. தலைவன்/ இடம்/கணவன்.
05. குளிகை/ மாத்திரை.
08. மனைவி.
09. கை பிடி.
10. அருமையானது என்பதைக் குறிக்கும்.
12. ஒரு திசையின் சுருக்கம்..
13. சம்பவிக்கும்/ நிகழும்.
15. ஒன்றின் தன்மை/ பண்பு.
16. ஒரு பாம்பின் ரகம்.
18. சாவியைப் பயன்படுத்தி செய்ய உத்தரவிடுவது.
19. பின் அல்ல.
20. கூட்டல்குறி.

### இடமிருந்து வலம்

01. பெறுமதி/ பெருமை.
04. அரசியலில் இதற்குத்தான் ஆசை, போட்டி எல்லாம்.
06. மறு.
07. தேவையைப் பூர்த்தி செய்து கொடுத்தல்.
09. பாரமான தன்மை.
10. இது ஓய்வதில்லையாமே.
11. ஒரு பருப்பு வகை.
13. சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர்.
14. தேர் போன்றவற்றைக் கட்டி இழுக்கும் பெரிய கயிறு.
15. காந்தம் இதைக் கவரும்.
17. பதி வைக்கப்பட்ட நாற்று.
19. மூப்புற்றுப் பழுத்தல்.
20. கழித்தல் குறி.
21. நல்லது.
22. வெறும் வாய் வீச்சுக்காரன்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 472

*சொற்சிலம்பம் 472 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு ஜூன் 19 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஜூன் 26 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண் ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார் கள்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*

**சுடர் ஒளி யாழ். அலுவகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

## போட்டி இல. 469 இல் பரிசு பெறுவோர்

**1 ஆம் பரிசு** — எம்.சீ.எம்.றியாழ், இல.127/4, சுங்காவில், பொலன்னறுவை.

**2 ஆம் பரிசு** — ச.நவரத்தினம், இல.7, 1/19, ஒச்சாட் கட்டடம், கொழும்பு - 06.

**3 ஆம் பரிசு** — சி.சிவலிங்கம், இல.07, பொற்றொழிலாளர் வீதி, மட்டக்களப்பு.

## சொற்சிலம்பம் போட்டி இல.469 விடைகள்

### மேலிருந்து கீழ்

01.சதிபதி. 02.பாதகம். 03.தினம். 04.அந்தர். 05.சதம். 06.தின். 09.திறப்பு. 12.மாலை. 13.குடும்பம். 14.அம்மி. 15.நட. 16.கோதுமை. 17.ரசம். 18.விடுதி. 20.பாசி.

### இடமிருந்து வலம்

01.சம்பாதி. 04.அசதி. 07.தனவந்தன். 08.பதிகம். 10.தம். 11.திறம். 12.மார். 14.அலை. 15.நடு. 16.கோபுரம்.18.விடம்.19.சமிபாடு. 21.மையம். 22.சிதிலம்.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) செல்வி கே.எப்.சுபிஹானி,**
இல.14, புளியடி குறுக்குவீதி, ஏறாவூர் -6.

**(2) எஸ்.சின்னராசா,**
பிரதான வீதி, பெரியபோரதீவு.

**(3) பொ.நமசிவாயம்,**
கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**(4) சு.மனோகரரஞ்சிதன்,**
இல.87, பெரிய கட்டு வீதி,
ஜெயபுரம் தெற்கு, பல்லவராயன்கட்டு.

**(5) க.சூரியகுமாரன்,**
இல.40/1, 3வது ஒழுங்கை,
பூந்தோட்டம், வவுனியா.

**(6) சந்திரா ரவீந்திரன்,**
இல.199/57, தும்புறுகிரிய வீதி,
ஹட்டன்.

**(7) வே.சத்தியமூர்த்தி,**
உடையாமணல், வல்வெட்டித்துறை.

**(8) எம்.ஜே.பர்ணாந்து,**
இல.30/3, சென்ற்.லூசியா ஒழுங்கை,
கொட்டாஞ்சேனை,
கொழும்பு - 13.

**(9) இ.விஜயானந்தன்,**
மானிப்பாய் வீதி,
கைதடி மேற்கு, கைதடி.

**(10) கே.எஸ்.இராஜ்குமார்,**
இல.71, முதலாம் குறுக்குத்தெரு,
வவுனியா.






**வே.இளங்கோ,**
**யாழ்ப்பாணம்.**

*கேள்வி: காதலில் தோல்வி அடைந்தவர்கள் தாடி வளர்ப்பதேன் பித்தரே?*

*பதில்: 'லேடி' செய்த துரோகத்துக்குச் சாட்சி சொல்லத்தான் தாடி என்று சொல்லலாமே.*

**அ.அரியரத்தினம்,**
**அரியாலை.**

*கேள்வி: தங்கள் வசம் அணுகுண்டு இருக்கிறதாமே?*

*பதில்: என் மனைவி ரொம்ப குண்டு சைஸ்தான். என்ன இருந்தாலும் இந்த நக்கல் ரொம்ப 'ஓவர்'. தப்பித் தவறி இது என் மனைவியின் காதில் விழுந்தால் நீர் தொலைந்தீர்.*

**தே.அருள்நங்கை,**
**கிளிநொச்சி.**

*கேள்வி: பொறுமையின் எல்லைக்கு உதாரணம் கூற இயலுமா பித்தரே?*

*பதில்: பயந்து, பணிந்து பணியாற்றும் என்போன்ற கணவர்மாரை விட இதற்குப் பொருத்தமான வேறு உதாரணம் கூற முடியுமா?*

**கே.அரவிந்தன்,**
**பதுளை.**

*கேள்வி: கழிந்துபோகும் இளமையை மீண்டும் புதுப்பிக்க முடியுமா பித்தரே?*

*பதில்: குழந்தைகள் பெற்ற தாய்மாரும் 'மினிஸ்கேட்' அணிவது அந்த நோக்கத்தில் தானே?*

**கே.எஸ்.ராதிகா,**
**வவுனியா.**

*கேள்வி: அடிக்கடி முரண்பட்டுக் கொள்ளும் கணவன் மனைவியைக் கீரியும் பாம்பும் போல என்கிறார்களே?*

*பதில்: பாம்பு ஆரம்பத்தில் சீறினாலும் இறுதியில் வெற்றிபெறுவது கீரிதானே?*

**வ.செல்லையா,**
**பளை.**

*கேள்வி: தனது மனைவியும் தாயும் ஒன்றாகக் கிண்றில் குதித்துவிட்டால், அக் குடும்பத்தலைவன் முதலில் யாரைக் காப்பாற்ற முயற்சிக்க வேண்டும் பித்தரே?*

*பதில்: உமது கேள்வியே தவறு. எங்காவது மாமியும் மருமகளும் ஒற்றுமையாக ஒரு அலுவலைச் செய்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீரா?*

**ச.பாரதி,**
**வவுனியா.**

*கேள்வி: இளம் வயதில் ஆளை ஆள் கண்டதுமே முதலில் மயங்குவது ஆணா, பெண்ணா பித்தரே?*

*பதில்:நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. ஆனால் சில மாதங்களின் பின் அடிக்கடி மயக்கத்தின் வசப்படுவது பெண்தான் என்பது நிச்சயமானது.*

**ஏ.வேலாயுதபிள்ளை,**
**கொக்குவில்.**

*கேள்வி:பெண்களின் மன ஆழத்தை அறிவதற்கு வழியென்ன பித்தரே?*

*பதில்: அது நரி வாலைக் கொண்டு கடல் ஆழத்தை அளக்க முயலும் வீண் முயற்சி.*

**ந.அ.பாவனா, பரந்தன்.**

*கேள்வி: நெருப்பு இல்லாமல் புகை வருமானால் அதற்கு அர்த்தம் என்ன பித்தரே?*

*பதில்: குமுறும் எரிமலை வெடிக்கப் போகிறது என்று அர்த்தம். முன்னெச்சரிக்கையாய் இருந்தால் தப்பிப் பிழைக்க வாய்ப்புண்டு. வீட்டுக்குள்ளும் சரி வெளியிலும் சரி இதுவே யதார்த்தம்.*

**க.கதிரவேலு, சண்டிலிப்பாய்.**

*கேள்வி: தமிழ் வைத்தியம் மாட்டு வண்டில் பயணம் போன்றதென்றும், ஆங்கில வைத்தியம் விமானப் பயணம் போன்றதென்றும் கூறிக் கொள்கிறார்களே? உண்மையா பித்தரே.*

*பதில்:உண்மைதான். ஆனால் மாட்டு வண்டில் பயணதில் ஏற்படும் விபத்து பெரும் பாதிப்பைத் தராது. விமானப் பயணத்தில் விபத்து நேர்ந்தால் தப்பிப் பிழைப்பது அரிது.*

**மா.ஜோர்ஜ், மன்னார்.**

*கேள்வி: எப்போதுமே குதர்க்கமாகப் பதிலளிக்கும் உமது வயதென்ன? தொழிலென்ன?*

*பதில்:வயது; வட்டுக்குள் போய்விட்டது.*

*தொழில்; (மனைவியின்) கட்டுக்குள் அடங்கி ஒடுங்கியிருந்து புலம்புவது.*

**இ.ஓங்காரமூர்த்தி,**
**யாழ்ப்பாணம்.**

*கேள்வி: நரை, திரை, மூப்பு என்பவற்றில் திரை என்பது எதனைக் குறிக்கிறது பித்தரே?*

*பதில்:உடலைத் திரையாகப் போர்த்தியிருப்பது தோல். அதில் ஏற்படும் சுருக்கம் வயதாகிவிட்டது என்பதைச் சுட்டிக் காட்டி நிற்கிறது.*

## இவ்வார ஜோக்

தன்னிடம் வந்த அந்த இளம் பெண்ணை நன்றாகப் பரிசோதித்த பின்னர் மகப் பேற்று நிபுணரான அப் பெண் டாக்டர் புன்சிரிப்புடன் அப் பெண்ணைப் பார்த்து "மிஸிஸ் சாந்தி நான் உங்களுக்குச் சந்தோஷமான செய்தியொன்றைக் கூறப் போகிறேன்" என்று பீடிகை போட்டார்.

"டாக்டர், நான் மிஸிஸ் சாந்தியல்ல. மிஸ் சாந்தி" என்றாள் அப்பெண்.

"அப்படியா? Sorry அப்படியென்றால் நான் உங்களுக்குச் சொல்லப் போகும் அச் செய்தி துக்ககரமானது" என்றார் அந்தப் பெண் டாக்டர் உதட்டைப் பிதுக்கியவாறே.

# சிறுவர் சுடர்





## வாய்மை அழியாது



செல்வம் மிகுந்த ஒரு வர்த்தகன் ஒரு சமயம் தனது பணப்பையை இழந்து விட்டான். அந்தப் பையில் இரண்டாயிரம் ரூபாய் இருந்ததாகவும், அதைக் கண்டெடுத்துக் கொடுப்பவருக்கு அந்தப் பணத்தில் பாதியை அளிப்பதாகவும் அவன் விளம்பரம் செய்தான். ஒரு தொழிலாளியின் கையில் அந்தப் பை அகப்பட்டது. அவன் அதை வர்த்தகனிடம் கொண்டு சென்றான். வர்த்தகன் தான் விளம்பரம் செய்திருந்தபடி பெரும்தொகையை இனாமாகக் கொடுக்க மனமில்லாமல், பையில் பணத்துடன் அரிய இரத்தினம் ஒன்றும் இருந்ததாகச் சொல்லிப் பாசாங்கு செய்தான்.

''நான் உனக்குப் பணம் தரமுடியாது. பையிலிருந்த இரத்தினத்தையும் கொண்டு வந்து கொடுத்தால், நான் ஆயிரம் ரூபாவையும் உனக்கு அளிப்பேன்!'' என்று அவன் சொன்னான்.

தொழிலாளி நீதித்தலத்தில் வழக்குப் பதிவு செய்தான். நீதிபதி வர்த்தகனைப் பார்த்துப் பின் கண்டவாறு கூறினார்.

'பையில் இரண்டாயிரம் ரூபாயும், ஓர் இரத்தினமும் இருந்ததாக நீ சொல்லுகிறாய்' இந்தப் பையில் இரத்தினம் இல்லை. ஆகையால் இது உன் பையாக இருக்க முடியாது. ஆகவே, இதன் சொந்தக்காரர் யாரென்று தெரியும்வரை இது தொழிலாளியிடமே இருக்கட்டும். நீ பணமும் இரத்தினமும் தவறிப் போனது குறித்து மேலும் ஒருமுறை விளம்பரம் செய். ஒரு வேளை உன் பையும் அகப்படலாம்!'' என்றார். வர்த்தகன், மேற்கொண்டு விவாதம் செய்யாமல், தொழிலாளிக்கு ஆயிரம் ரூபாயைக் கொடுத்து விட்டுத் தன் பையை வாங்கிக் கொண்டான்.✱ - பா.மிகிரன்.

## மதிக்க நட

நெஞ்சுத் துணிவினொடு - நல்ல
நீதியைக் காத்து நட
அஞ்சிப் பதுங்கல் விடு - வல்ல
ஆளுமை கொண்டு நட
கெஞ்சும் மடமை விடு - சூழும்
கேடுகள் நீக்கி நட
பஞ்சம் பசிக்குக் கொடு - உன்னை
பலரும் மதிக்க நட.

- உமாபாரதி.


## குறும்புக்காரன் குட்டன்




## மந்திரம் கற்ற மடையர்கள்





ஓர் ஊரில் நான்கு நண்பர்கள் இருந்தனர். அதில் மூவர் படித்த மந்திரவாதிகள். ஒருவன் பொது அறிவு பெற்ற அனுபவசாலி.




நால்வரும் ஒரு காட்டைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது வழியில் சிங்கத்தின் சிதைந்த எலும்புக்கூட்டைக் கண்டனர். மந்திரவாதிகள் அதனைச் சிங்கமாக மாற்ற முனைந்தனர்.





முதலாமவன் எலும்புக்கூட்டை ஒழுங்கமைத்தான். இரண்டாமவன் அதற்குத் தசை, இரத்தம், தோல் என்பவற்றை இணைத்தான். மூன்றாமவன் அதற்கு உயிர் கொடுக்க முயற்சித்தான்.




அதனைக் கண்ட அனுபவசாலி சிங்கத்துக்கு உயிர்கொடுக்கவேண்டாம் என்று தடுத்தான். மூவரும் அவனது கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை.




அனுபவசாலி சிங்கம் உயிர் பெற்றால் மனிதர்களைக் கொன்று தின்றுவிடும் எனச் சொல்லிக் கொண்டு மரக்கிளையில் ஏறிக்கொண்டான்.




மந்திரவாதிகள் மூவரும் சிங்கத்துக்கு உயிர் கொடுத்தனர். சிங்கம் உயிர்பெற்றதும் மந்திரம் கற்ற மூன்று மடையர்களையும் கொன்று தின்றது.

# ரயில் வேட்டை 3



உண்மைச் சம்பவம்

பயங்கரவாதிகளால் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கபட்டிருந்த கான்ஸ் என்ற பயணியே ஏனைய பயணிகள் அனைவருக்கும் ஆலோசனை வழங்கினான். தைரியமூட்டினான். உடற்சுகவீனம் உற்றிருந்த வயதான பயணிகளுக்கு அவசியமான சிற்சில சிகிச்சைகளையும் அவ்வப்போது அவன் மேற்கொண்டான். கான்ஸ்லின் கவலையெல்லாம் எண்பது வயதான ஜோர்ஜ் என்ற பயணி மற்றும் அவரது மனைவி ஆகியோரைப் பற்றியது தான். இடம்பெற்ற சம்பவங்களால் அவர்கள் இருவரும் அதிர்ச்சியில் உறைந்து போயிருந்தனர். அத்துடன் அடிக்கடி வாந்தியும் எடுத்தனர்.

அதே சமயம் கொலன்ட் நாட்டுப் பொதுமக்கள் மத்தியில் அந்த ரயில் கடத்தல் சம்பவம் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்திருந்தது. பயங்கரவாதிகள் கடத்திய ரயிலைச் சுற்றி மீட்புக் குழுவினரால் பலமான காவல் போடப்பட்டது. காவற்துறையும், கடற்படையும் எண்ணூறு மீற்றர் சுற்றளவுள்ள பிரதேசத்தைக் கண்காணித்தனர். மற்றொரு காவற்படைப்பிரிவு மூன்று கிலோமீற்றர் சுற்றளவு தூரத்தை வளைத்துக் கொண்டு காவல் காத்தது. பனிபடர்ந்த தரைகளில் படையினர் உட்கார்ந்திருந்தனர். அவர்களின் துப்பாக்கிகள் மரங்களின் மறைவில் சாத்தி வைக்கப்பட்டிருந்தன. அந்த ஏழு பயங்கரவாதிகளையும் உயிரோடு பிடித்து விட வேண்டும் என்பதற்காக தகுந்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து அவர்கள் காத்திருந்தனர்.

பெய்லினில் இருந்த காவற்துறைத்தலைமையகத்தில் ஒரு பரபரப்பு நிலை நிலவியது. அந்த ரயில் கடத்தப்பட்டு முப்பது மணித்தியாலங்கள் கடந்து விட்டன. பயணிகளில் இருவர் கொல்லப்பட்டு விட்டனர். இன்னமும் பயங்கரவாதிகளுடன் எந்தவொரு தொடர்பாடலும் ஆரம்பிக்கப்படவில்லை. முற்றுகையின் இரண்டாவது நாளின் கடைசி நேரத்தில் இராணுவப்பிரிவின் தொலைபேசித் தொடர்பை ரயிலுக்குள் கொண்டு வருமாறு பயங்கரவாதிகள் தெரிவித்தனர். ஆயினும் பயங்கரவாதிகளை எப்படியாவது தங்கள் பிடிக்குள் சிக்க வைக்கும் திட்டத்துடன் காவற்துறை அதிகாரிகள் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்திக் கொடுப்பதை தாமதப்படுத்தினர்.

மறுநாட்காலை பயங்கரவாதிகள் பயணிகளுக்குத் தேவையானவை எனத் தெரிவித்து பொருள்களின் பெரிய பட்டியல் ஒன்றை கான்ஸ் மூலம் அனுப்பி வைத்தனர். காவற்துறை அதிகாரிகளும் கான்ஸ் கேட்டிருந்த மருந்து வகைகளையும் அவசியமான உணவு, கம்பளங்கள், தண்ணீர் ஆகியவற்றையும் அனுப்பி வைத்தனர்.

பயங்கரவாதிகள் தமக்குத் தேவையானவற்றுக்கு கோரிக்கை விடுக்கட்டுமே எனக் கருதி அதிகாரிகள் வேறு பொருட்களை அனுப்பி வைக்கவில்லை. அவர்களிடம் அகப்பட்டுக் கொண்ட பயணிகள் தம்மைக் காவல்துறையினர் கைவிட்டு விட்டதாக நம்ப வேண்டும் என்பதுதான் காவற்துறை அதிகாரிகளின் எதிர்பார்ப்பாக இருந்தது. அத்தகையதொரு நிலையில் பணயக்கைதிகள் பயங்கரவாதிகளுடன் சினேக பூர்வமாக பழகத் தொடங்க வேண்டும் என்பதே அதிகாரிகளின் எதிர்பார்ப்பு. அவ்விதம் அமைந்தால் பயங்கரவாதிகளால் பணயக்கைதிகளின் உயிருக்கு மேலும் எவ்வித ஆபத்தும் ஏற்படாது என அதிகாரிகள் கணக்கிட்டனர். வயதான பயணியான ஜோன்ஸ்லன் என்பவருக்கு கான்ஸ் செயற்கைச் சுவாசம் வழங்குவதைப் பயங்கரவாதிகள் அமைதியோடு பார்த்துக் கொண்டிருந்தனர்.

**கொலன்ட் நாட்டின் வட பகுதியில் பயங்கவாதிகள் குழுவொன்றினால் கடத்தப்பட்ட ரயில் ஒன்றில் பணயக் கைதிகளாக அகப்பட்டுக் கொண்ட பயணிகளை மீட்டெடுக்க திட்ட மொன்றை வகுத்துச் செயற்படுகிறது டச்சு அரசு. அரசைப் பயமுறுத்த எண்ணிய பயங்கரவாதிகள் பயணிகளை ஒவ்வொருவராகச் சுட்டுக் கொல்ல ஆரம்பிக்கின்றனர்.**

பணயக்கைதிகளில் சிலர் பயங்கரவாதிகளின் அனுமதியுடன் பைபிளை வாசித்தனர். ஆயினும் பயங்கரவாதிகளின் ஆத்திரமும் அமைதியின்மையும் சிறிதளவும் குறையவில்லை. பொறுமை இழந்திருந்த அவர்கள் மற்று மொரு பயணியைக் கொல்லத்தீர்மானித்து 31 வயதான பேர்னாட் என்பவனைச் சுட்டுக்கொன்று அவனது உடலை ரயிலுக்கு வெளியே தள்ளி விட்டதை தொலை நோக்குக் கண்ணாடி மூலம் மீட்புக் குழுவினர் பார்த்துக் கொண்டிருந்தனர். அதே சமயம் அம்ஸ்டர்டாமில் உள்ள இந்தோனேசியத் தூதரகத்துள் ஏழு பயங்கரவாதிகள் புகுந்து 45 பொதுமக்களை துப்பாக்கி முனையில் தடுத்து வைத்திருப்பதாக வானொலி அடிக்கொரு தரம் செய்தி வெளியிட்டுக் கொண்டிருந்தது.

ஒரே சமயத்தில் இரண்டு இடங்களில் பயங்கரவாதிகளின் முற்றுகை. கொலன்ட் நாடே இதனால் அச்சத்தில் உறைந்து போனது. பேர்னாட்டைச் சுட்டுக் கொன்றதன் பின்னர் பயங்கரவாதிகளின் போக்கில் ஒரு வித மாற்றம் தென்பட்டது. இருந்தாற் போலிருந்து அவர்கள் பணயக் கைதிகளுடன் அன்பாகப் பேசத் தொடங்கினர். பயங்கரவாதிகளின் தலைவனான கமிஷா என்பவன் தமது அச்செய்கைக்காக மனம் வருந்தி கான்ஸ்லின் தோள் மீது சாய்ந்து கண்ணீர் விட்டழத் தொடங்கினான்.

பயங்கரவாதிகளிடம் ஏற்பட்ட அப்புதிய மன மாற்றம் குறித்து மீட்புப் படையினரின் தலைமையகத்துக்குச் செய்தி எட்டியது. பயங்கரவாதிகள் தமது அதிகாரத் தோரணையைக் கைவிட்டு தமக்கு வேண்டிய பொருள்களை அனுப்பி வைக்குமாறு படையினருக்குத் தகவல் அனுப்பினர். அத்துடன் ஏற்கனவே தம்மால் சுட்டுக் கொல்லப்பட்ட இரு பயணிகளின் சடலங்களை எடுத்துச் செல்வதற்கும் செஞ்சிலுவைச் சங்கத்தினரை அனுமதித்தனர்.

மார்கழி மாதம் 7 ஆம் திகதி காலைப் பொழுது விடிந்தது. பயங்கரவாதிகளுக்கே இப்போது செஞ்சிலுவைச் சங்க ஊழியர்களின் உதவி தேவைப்பட்டது. அதாவது வேடிக்கைக்காக தமது துப்பாக்கிகளில் குண்டுகளை நிரப்புவதும் சுடுவதுமாகப் பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக அவர்களது அவ்வேடிக்கை விளையாட்டு வினையாகி விட்டது. பயங்கரவாதிகள் ஒருவனது துப்பாக்கியிலிருந்து சுடப்பட்ட குண்டு தற்செயலாக இலக்கு மாறி அவர்களது தலைவனான கமிஷாவின் கண்ணை நேரடியாகத் தாக்கி விட்டது. கமிஷாவின் முகம் முழுவதும் இரத்தம் வழிந்தோடியது. ஏனைய பயங்கரவாதிகள் தமது தலைவனைத் தூக்கிக் கொண்டு செஞ்சிலுவைச் சங்க ஊழியர்களிடம் விரைந்தார்கள். மறுபுறம் கான்ஸ், பணயக்கைதிகளில் பலர் மென் மேலும் சுகவீனமுற்று வருவதை அவதானித்தான். ஓய்வு ஒழிச்சல் இன்றி நோயாளிகளைக் கவனித்துக் கொண்ட கான்ஸின் வேண்டுகோளுக்கு இணங்க படை அதிகாரிகள் மென்மேலும் மருந்து வகைகளை ரயிலுக்கு அனுப்பி வைத்தார்கள். வயதான இரு பயணிகளுக்கு அவர்களது நோயின் வேதனையை மறக்கடிக்க கான்ஸ் மயக்க மருந்தைக் கொடுத்திருந்தான். ஆயினும் அவர்களது நிலைமை மோசமடையவே ஆறாவது நாள் காலையில் அவ்விருவரையும் ரயிலில் இருந்து விடுவித்து வெளியே செல்ல பயங்கரவாதிகள் அனுமதித்தனர். இதனால் தமக்கும் வெகுவிரைவில் விடுதலை கிட்டிவிடும் என்ற நம்பிக்கை ஏனைய பயணிகளின் மனதில் உருவானது.

இருந்த போதும் அப்பயங்கரவாதிகளின் பிடிவாதம் சிறிதேனும் குறையவில்லை. 10 நாள்கள் கடந்த நிலையில் அன்றிரவு வெளியே உறைபனி கடுமையாகப் பொழியத் தொடங்கியது. குளிரில் இருந்து பயணிகளைக் காப்பாற்ற மேலும் ஒரு தொகுதி போர்வைகள் ரயிலுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அடுத்த இரு நாள்களும் கடும்பனி பெய்யக் கூடும் எனக் கூறப்பட்டதால் பயணிகளில் மேலும் பலர் ஆபத்தை எதிர்நோக்கலாம் என காவற்துறை அதிகாரிகள் நம்பினர். இந்நிலையில் மீட்புக்குழுவினரோ துணிந்து பயங்கரவாதிகள் மீது அதிரடித் தாக்குதல் ஒன்றை மேற்கொள்ள இதுவே தகுந்த தருணம் என அபிப்பிராயப்பட்டனர். ஆயினும் அதிகாரிகளோ அது பயணிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடும் எனக் கூறி அத்திட்டத்துக்கு அனுமதியளிக்க மறுத்துவிட்டனர்.

இப்போது பயங்கரவாதிகளின் நிலையும் கடும் சிக்கல் நிறைந்ததாக ஆகிக் கொண்டிருந்தது. கடும் குளிர் அவர்களைக் கதிகலங்க வைத்தது. அடுத்த நாள் காலை அப்பயங்கரவாதிகள் அனைவரும் ரயிலின் ஒரு மூலையில் ஒன்று கூடி தமது நிலைமை குறித்து ஆலோசனை நடத்தினர். முடிவில் அவர்கள் ஏதோ ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டதாக எண்ணத் தோன்றியது.சில மணி நேரம் கழிந்து திடீரென ரயிலின் கதவுகள் அத்தனையும் திறக்கப்பட்டன. ஆறு பயங்கரவாதிகள் ரயிலில் இருந்து குதித்து தப்பியோடத் தலைப்பட்டனர். அதேசமயம் இப்படி நடக்கக்கூடும் என ஊகித்து, தயார் நிலையில் இருந்த மீட்புப் படையினர் அவர்களை சுற்றி வளைத்துக் கைது செய்தனர்.

இப்போது பயங்கரவாதிகளின் பிடியில் இருந்து சிரமமின்றி பயணிகள் விடுவிக்கப்பட்டிருப்பினும், அவர்களில் பலர் பயத்தினாலும் அதிர்ச்சியினாலும் எதுவுமே பேச இயலாதவர்களாக சிரமப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒரு சிலர் மீட்புப் படையினரை நோக்கித் தயங்கித் தயங்கிச் சென்றனர். ''நாங்கள் விடுவிக்கப்பட்டு விட்டோமா?'' என்று மெதுவான குரலில் மீட்புப் படையினரிடம் கேட்டனர். அவர்களை அமைதிப்படுத்திய மீட்புப் படையினர் 'இப்போது நீங்கள் சுதந்திரமானவர்கள். உங்கள் அனைவரையும் பாதுகாப்பாக உங்கள் இடத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பது எமது கடமை. இப்போது நீங்கள் அமைதியாக இருந்து எம்முடன் ஒத்துழையுங்கள்' என ஆறுதல்படுத்தினர்.


படையினரால் கைது செய்யப்பட்ட அப்பயங்கரவாதிகள் மீது மூன்று மாதங்களுக்குப் பின்னர் டச்சு நீதி மன்றத்தில் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் முடிவில் அவர்களுக்கு இருபது ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.★

ஜெகன்





# வினோத மரங்கள்



யேமன் நாட்டில் உள்ள 'சொட்ரா' எனும் தீவில் உள்ள வினோத மரங்கள் தாவரவியலாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளன. இங்கு முழுதும் மலைப் பகுதிகளே உள்ளன. அவற்றில் முளைத் தெழுந்த மரங்கள் சாதாரண மரங்களை விடவும் வித்தியாசமான உருவ அமைப்பைக் கொண்டுள்ளன. ஒரு அங்குலத்தில் இருந்து 10 மீற்றர் உயரம் வரை வளர்கின்ற இந்த மரங்கள் தமக்குரிய நீரைப் பாறைகளில் இருந்தே உறிஞ்சிக்கொள்கின்றன. எனவே இவற்றின் வேர்கள் வெளியே தெரிவதில்லை. பாறைகளுக்குள்ளேயே ஊடுருவி தமக்கான நீரைக் கண்டுபிடிக்கின்றன.★


SONDERANGEBOT

Möbel Ferrari
HINWIL
Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch
Öffnungszeiten
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00






KOMPLETT
590.-
statt 1290.-


LINDE
Komplette Polstergruppe
Textil-leder rot
Auch in schwarz und weiss erhältlich
Chromfuss
3er 197x82x87
2er 165x82x87

Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.
0.0% Direkt Finanzierung

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக தமிழில் குரல் வழிகாட்டல் அறிமுகம்

SALA PROSat
Your Ultimate Travel Companion
GPS Satellite Based
வாகன வழிகாட்டல்






ProSat 3 Series
3.5" Color Touch Screen, Music Player, Video Player, Calculator, Picture Viewer, E-Book
Rs. 35,000/=

ProSat 4 Series
4.3" Color Touch Screen, Bluetooth Games, Flash Player, FM Transmitter, Music Player, Video Player, Calculator, Picture Viewer, E-Book
Rs. 42,000/=

ProSat 5 Series
5" Color Touch Screen, Bluetooth, Games, AV-IN, FM Transmitter, Unit Converter, Music Player, Video Player, Calculator, Picture Viewer, E-Book
Rs. 49,000/=

★ இலங்கையில் எவ்விடத்தையும் கண்டுபிடித்து அவ்விடத்துக்கு சென்றடையலாம்.
★ நீங்கள் சென்றடைய வேண்டிய இட மாற்றத்துக்கேற்ற குரல் வழிகாட்டல் உண்டு.
★ 100,000 க்கும் அதிகமான முக்கியஇடங்கள் (எரிபொருள் நிலையங்கள், ATMS, வங்கிகள் ஹோட்டல்கள், வைத்தியசாலைகள், பூங்காக்கள் பொலிஸ் நிலையங்கள் முதலியன.
★ குறித்த நேரத்தில் இடத்தை அடைதல் (ETA) ★ நீங்கள் குறித்த நேரத்தில் இருக்கும் இடத்தை உடனடியாகத் தெரிந்து கொள்ள.
★ வழித்தடம் பதிவு செய்தல் ★ பாதை தவறினால் அதற்கு பதிலாக மற்றும் வழிதடம் ஏற்படுத்தல்
★ மாதந்த வாடகை கிடையாது ★ ஆங்கிலம் சிங்களம்,மற்றும் தமிழில் குரல் வழிகாட்டல்
★ காலத்திக்கேற்ப வரைபடம் சரிசெய்தல் ★ 1வருட உத்தரவாதம்.

சம்பத், ஸ்ரான்டட் சாட்டட் வங்கிக் கடன் அட்டைகள் வைத்திருப்போருக்கு தவணை முறையில் 6 மாதங்களுக்கு 0% வட்டி

பாதுகாப்பு அமைச்சு மற்றும் தொலை தொடர்பு ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றது.

SALA GIS
445, ஹவ்லொக் வீதி,கொழும்பு-06
வ.6.8784˚ கி.79.8695˚
மின்னஞ்சல்- info@salagis.com

தொடர்பு:
ஹென்றி- 0777 305336
நாடளாவிய ரீதியிலான வலையமைப்பு

www.salagis.com
Travel Beyond Limits...